விலை ரூபா: 20.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

ங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 03 புதன்கிழமை (16.05.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 149

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# பொன்சேகாவுக்கு விரைவில் விடுதலை

# கிலாரியிடம் பீரிஸ் தெரிவிப்பார்!

## அமெரிக்காவின் அழுத்தத்திற்கு அடிபணிகிறது அரசு





**(கொழும்பு), நாளை மறுதினம் 18-ம் திகதி அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் கிலாரி கிளின்டனை சந்திக்கும் வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், சரத் பொன்சேகாவை விடுதலை செய்ய இருக்கும் செய்தியைக் கூறவுள்ளார்.**

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ள அமைச்சர் பீரிஸ் தலைமையிலான இலங்கையின் உயர் மட்டக் குழுவொன்று நேற்று அதிகாலை அமெரிக்காவுக்கு புறப்பட்டது.

இதன்போது வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் அமெரிக்க இராஜாங்கச் செயலர் கிலாரியிடம் முக்கிய பேச்சில் ஈடுபடவுள்ளார். நல்லிணக்க ஆணைக்குழு விவகாரம், தமிழர் பிரச்சினை, பொறுப்புக்கூறும் விடயம், எண்ணெய் இறக்குமதி விவகாரம் உட்பட சமகால அரசியல் விவகாரங்கள் குறித்து இந்தச் சந்திப்பில் விரிவாக கலந்துரையாடப்படவுள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் உண்மைத்தன்மையில் சந்தேகம் உள்ளது -ஐ.தே.கட்சி

(கொழும்பு)

அரசாங்கத்துடன் நேற்று முன்தினம் தாம் டத்திய இருதரப்பு பேச்சுவார்த்தை தொடர் பாக அரசாங்கம் உண்மைத்தன்மையுடன் ாதா என்பது பற்றிய கேள்வி இருக்கத் செய்கிறது என ஐக்கிய தேசியக் கட்சி றுக் கூறியுள்ளது.

டந்த காலங்களில் அரசாங்கத்துடன் ந்திய பேச்சுவார்த்தைகளினால் நாம் ப்பான அனுபவங்களை பெற்றிருக்கின் றாம் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க ஊடகவியலாளர்களுடன் பேசியபோது தெரிவித்தார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமுல்படுத்தியதிலும் அரசியல் தீர்வு காண்பதிலும் நேர்மையான, உண்மையான முயற்சிகள் எடுக்கப்படாதுவிடின் நாடு பெரும் கஷ்டங்களை கட்டாயமாக அனுபவிக்க வேண்டிவரும். முன்னெப்போதையும்விட கூடுதலாக சர்வதேச சமுதாயம் இலங்கையை அவதானித்து வருகின்றது.

திங்கட்கிழமை (20ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவை விடுவிக்கும் முடிபு சர்வதேச அழுத்தத்தால் அல்ல

(கொழும்பு)

சர்வதேச அழுத்தங்களின் காரணமாக முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவை விடுதலை செய்ய தீர்மானிக்கவில்லை என ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் பந்துல ஜயசேகர தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுதலை செய்தால் அது சர்வதேச அழுத்தங்களின் காரணமாக அல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சரத் பொன்சேகா விரைவில் விடுதலை செய்யப்படவுள்ளதாக ஜனாதிபதி அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் நாடு திரும்பியதன் பின்னர் சரத் பொன்சேகாவை விடுதலை செய்வது குறித்த தீர்மானம் எடுக்கப்படும் என தெரிவித்திருந்தார். (ந-8,11)

## புலிகளுக்கு ஆயுதக் கொள்வனவு ரமணனுக்கு விடுதலை

விடுதலைப்புலிகள் அமைப்பிற்கு தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்யும் முயற்சியில் ஈடுபட்டு தனது குற்றத்தை ஒப்புக் கொண்ட இலங்கைத் தமிழரும் கனடிய பிரஜையுமான ரமணன் மயில்வாகனம் அமெரிக்க நீதிமன்றத்தினால் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நீதிமன்ற நீதிபதியினால் வழங்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரம் ரமணன் விடுதலை செய்யப்பட்டுள்ளார். கனடா மற்றும் அமெரிக்காவில் தடைசெய்யப்பட்டுள்ள புலிகள் அமைப்பிற்கு ஆயுதக் கொள்வனவில் (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை இன விவகாரம் லண்டனில் இன்று விவாதம்

இலங்கையின் கொலைக்களங்களின் பாதிப்பும் நாட்டின் இன்றைய நிலையும் என்ற தலைப்பிலான விவாதம் பிரித்தானியாவில் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

லண்டனில் உள்ள ஒரே ஊடகக் கழகமான புரொன்ட்லைன் கிளப் இந்த விவாத நிகழ்வை இன்று மாலை 7 மணிக்கு நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

80 ஆயிரம் தொடக்கம் ஒரு இலட்சம் பேர் வரையிலானோர் இலங்கையில் மரணமாக காரணமாக அமைந்த 30 ஆண்டுகளாகத் தொடர்ந்த உள்நாட்டுப் போர் முடிபிற்கு வந்து 3 ஆண்டுகளாகியுள்ள நிலையில், போர்க் குற்றங்கள் தொடர்பான கேள்விகளும் அதற்கு எவ்வாறு பதிலளிக்கவுள்ளனர் என்ற கேள்வியும் எழுந்துள்ளதாக புரொன்ட்லைன் கிளப் குறிப்பிட்டுள்ளது.

பிபிசியில் ஹாட்ரோக் நிகழ்ச்சியை வழங்கும் ஸ்டீபன் சக்குர் இந்த விவாதத்துக்குத் தலைமை தாங்குவார்.

இலங்கையின் கொலைக்களங்கள் ஆவணப் படங்களின் தயாரிப்பாளரும் இயக்குநருமான கல்லும் மக்ரே, தமிழர்களின் இனப் படுகொலைக்கு எதிரான அமைப்பின் பேச்சாளர் மற்றும் அனைத்துலக மன்னிப்புச் சபையின் விவகார ஆய்வாளர் யோலன்ட் போஸ்டர், இலங்கை ஜனாதிபதியின் ஆலோசகர் ரஜீவ விஜேசிங்க (20ஆம் பக்கம் பார்க்க)

## 14 ஹெலிகொப்டர்கள் ரஷ்யாவிடம் கொள்வனவு

(கொழும்பு)

போக்குவரத்து நோக்கத்திற்காக 14 ஹெலிகொப்டர்கள் ரஷ்யாவில் இருந்து கொள்வனவு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

30 பேர் பயணம் செய்யக்கூடிய புதிய எம்.ஐ-17 ரக போக்குவரத்து ஹெலிகொப்டர்கள் 14 இவ்வாறு கொள்வனவு செய்யப்படவுள்ளன.

ஹெலிகொப்டர்களை கொள்வனவு செய்வதற்காக ரஷ்ய அரசாங்கம் இலங்கைக்கு 300 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக வழங்கியுள்ளது. இந்த ஹெலிகொப்டருக்கான பராமரிப்பு செலவுகளையும் ரஷ்யா பொறுபேற்றுக் கொண்டுள்ளது.

எம்.ஐ- 17 ரக ஹெலிகொப்டர்களை ரஷ்ய நிறுவனம் ஒன்று இலங்கைக்கு விற்பனை செய்ய இணங்கியுள்ளது.

முதற்தடவையாக ஒரே நேரத்தில் 14 ஹெலிகொப்டர்களை கொள்வனவு செய்யும் முதல் சந்தர்ப்பமாக இது கருதப்படுகின்றது. (ந-8,11)

## நவநீதம்பிள்ளையின் பதவிக் காலத்தை மேலும் இரு ஆண்டுகள் நீடிக்க முயற்சி



ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் பதவிக் காலத்தை மேலும் நீடிப்பதற்கு ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

நவநீதம்பிள்ளையின் பதவிக் காலத்தை மேலும் இரு ஆண்டுகள் நீடிப்பதற்கு அனுமதி வழங்குமாறு பான் கீ மூன் ஐ.நா. பொதுச் சபையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

2008 ஆம் ஆண்டில் ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையாளராக பதவி ஏற்றிருந்த நவநீதம்பிள்ளையின் பதவிக் காலம் இவ்வாண்டின் இறுதியுடன் முடிபடையவுள்ளது. இந்நிலையில், மேலும் இரு ஆண்டுகளுக்குப் பணியாற்ற நவநீதம்பிள்ளை இணக்கம் தெரிவித்துள்ளதாக பான் கீ மூனின் (20ஆம் பக்கம் பார்க்க)

## இனவாதத்திற்கு ஒருபோதும் இலங்கையில் இடமில்லை - ஜனாதிபதி

(கொழும்பு)

இலங்கையின் மேம்பாடு மற்றும் மீளமைப்பு நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் இனவாதத்தை தோற்றுவிக்க ஒருபோதும் இடமளிக்க போவதில்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊடக பிரதானிகளுடன் நேற்று முற்பகல் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தமிழ், சிங்களம், முஸ்லிம் என்ற சகல ரீதியிலும் இனவாதத்தை நிராகரிப்பதாக தெரிவித்த அவர், பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுள்ள நிலையில் சமாதானம் மற்றும் சமத்துவத்துடன் அனைத்து மக்களும்வாழ வேண்டும் என்பதே தமது அபிலாசை என்றார்.

மேலும், தேசிய ஐக்கியத்திற்கு குந்தகம் ஏற்படும்படியான செய்திகளை வெளியிட வேண்டாம் எனவும், நம்பிக்கையையும், நட்புறவையும் வளர்க்கக்கூடிய செய்திகளை வெளியிடுவதே மிகவும் (20ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் மக்களை மீள் குடியேற்றிய திருப்தியோடு விடை பெறுகின்றேன்

## பிரிவுபசார நிகழ்வில் யாழ். அரச அதிபர் உரை



(யாழ்ப்பாணம்)

அரசாங்கம் பணிக்கும் வேலையைச் செய்ய வேண்டிய கடப்பாடு எல்லா அரச அதிகாரிகளுக்கும் உண்டு. அரச அதிகாரிகள் கஷ்டமான பிரதேசத்திலும் வேலைசெய்ய தயாராக இருக்கவேண்டும் என இடமாற்றம் பெற்றுச்செல்லும் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிசெயலகத்திற்குதிருமதி இமெல்டா சுகுமார் இடமாற்றம் பெற்றுச்செல்வதை யிட்டு நேற்று யாழ்.மாவட்டச் செயலகத்தில் யாழ்.மாவட்ட நலன்புரிச்சங்கத்தின் ஏற்பாட்டில் பிரிவுபசார நிகழ்வு இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு ஏற்புரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

5 வருடம் செய்ய வேண்டிய பணியை இரண்டுவருடத்தில் செய்து முடித்துவிட்டேன் என்பதை மக்கள் எனக்கு நன்றி தெரிவித்து எழுதிய கடிதங்கள் ஊடாக அறியக் கூடியதாக இருந்தது.

அரச அதிகாரிகளுக்கு இடமாற்றம் என்பது தவிர்க்க முடியாததொன்று. எனது இடமாற்றத்திற்கான காரணத்தை அறிந்து கொள்ள முடியாதவர்கள் பல விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர்.

இதில் விமர்சனங்களுக்கு இடமில்லை. நீண்டகாலமாக வடக்கில் சேவைசெய்துள்ளேன். அத்தோடு அமைச்சுக்களின் செயலாளராக பணிபுரியும் தகுதியுள்ளது என்பதற்காக ஜனாதிபதி செயலகத்திற்கு என்னை இடமாற்றியுள்ளனர். அங்கு எனக்கு செயலாளர் பதவியொன்று தருவதாகவும் கூறியுள்ளனர்.

எனவே எனது இடமாற்றம் தொடர்பாக விமர்சனங்களை முன்வைப்பதில் அர்த்தமில்லை. அத்தோடு ஜனாதிபதி மட்டத்திலிருந்து எனது இடமாற்றம் தொடர்பாக முடிவு எடுக்கப்பட்டதால், உரிய காரணத்தை என்னாலும் அறிய முடியவில்லை.

இந்த மாவட்டத்தில் உள்ள மக்களுக்குச் சேவைசெய்ய எனக்கு உரிமை உண்டு அதை நான் அரச அதிபராக இருந்துதான் செய்ய வேண்டியதில்லை.

முல்லைத்தீவிலிருந்து இடமாற்றம் பெற்று இங்கு வந்தேன். அங்குள்ள ஒவ்வொரு உயிரும் என்னை வாழ்த்தும். இங்கியிருந்து கொழும்பு செல்கின்றேன். இங்குள்ள மக்களும் என்னைவாழ்த்துவார்கள்.

எனவே ஊடகங்களும் சரி விமர்சனங்களை முன்வைப்பவர்களும் சரி விதண்டாவாதத்தைவிட்டு மக்களுக்கு சேவைசெய்ய வேண்டும்.

மேலும்அரசஅதிகாரிகள்பொதுமக்களுக்கு செய்யும் சேவையை விருப்பத்துடன் செய்ய வேண்டும். நான் எந்தப்பதவி உயர்வையும் கேட்டு ஜனாதிபதி செயலகத்திற்கு செல்லவில்லை.

எங்கிருந்தாலும் என்ன பதவியிலிருந்தாலும் தமிழ் மக்களுக்கு தேவையான உதவிகளைச் செய்வேன். அபிவிருத்தி அடைந்த பிரதேசம், அபிவிருத்தி அடையாத பிரதேசம் என பாகுபாடுகாட்டி வேலைசெய்யக் கூடாது. எந்தப்பிரதேசமாய் இருந்தாலும் வேலை செய்ய வேண்டும்.

மீள்குடியேற்றத்தில் தாமதம் ஏற்படுவதாகவும் உயர்பாதுகாப்பு வலயங்கள் விடுவிக்கப்படவில்லை எனக் குற்றம்சாட்டியும் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் பிரகாரம் மாவட்டசெயலகம் ஊடாக மாதாந்தம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு வருகின்றது.

நான் அரச அதிபராக பதவியேற்றபோது 250 குடும்பங்கள்மட்டுமே அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்பட்டிருந்தனர். ஆனால் தற்போது 35ஆயிரம் குடும்பங்களுக்கு மேல் மீள்குடியேற்றப்பட்டுள்ளன.

இன்னும் பல இடங்கள் உயர்பாதுகாப்பு வலயங்களாக உள்ளன என்பது உண்மைதான்.

இருப்பினும் மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றுவது அரச அதிபர் பங்களிப்புச் செய்யவில்லை என யாரும் கூறமுடியாது.

அத்தோடு ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் ஒரு வருடத்திற்கு 800 மில்லியன் ரூபாய் மட்டுமே அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டது. ஆனால் யாழ்.மாவட்டத்திற்கு கடந்தவருடத்தில் 5 ஆயிரம் மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பாக அரசாங்கத்துடன் தினம் தோறும் தொடர்பினை ஏற்படுத்தி நிதியினை பெறுவதில் நான் காட்டிய அக்கறையே அதற்கு முக்கிய காரணம் என்றார். (நு-6)

## இராணுவச் சிப்பாயை நாகம் தீண்டியது

(யாழ்ப்பாணம்)

நாகபாம்பு தீண்டிய நிலையில் இராணுவச்சிப்பாய் ஒருவர் யாழ்.போதனா வைத்திய சாலை அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுப்பிற்பகல் 2 மணியளவில் கொழும்புத்துறைப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்தப்பகுதியிலுள்ள காவலரணில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மகியங்கனையைச் சேர்ந்த ஜெகத் நந்தகுமார (வயது 26) என்ற இராணுவச் சிப்பாயையே நாகபாம்பு தீண்டியது. (நு-6,11)

## விபத்தில் மூவர் படுகாயம்

(கரவெட்டி)

வடமராட்சி உபய கதிர்காமப்பகுதியில் நேற்றுப்பிற்பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் மூவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறையில் இருந்து தாளையடி நோக்கி பயணித்த இ.போ.ச. பேருந்தும் தனியார் பேருந்தும் ஒன்றையொன்று முந்திச் செல்ல முற்பட்ட வேளையிலேயே இவ் விபத்துச்சம்பவம் ஏற்பட்டுள்ளது.

இதில் இ.போ.ச. பேருந்தில் பயணித்த பருத்தித்துறை முனைப்பகுதியைச் சேர்ந்த மரியாம்பிள்ளை மரியநாயகம் (வயது 59), மணல்காடு அந்தோனியார் தேவாலயப் பகுதியைச் சேர்ந்த உதயகுமார் மேரி தயாளராணி (வயது 29), கிறிஸ்தவப்பிள்ளை அந்தோனி அருள்சீனி (வயது 21) ஆகிய மூவருமே படுகாயமடைந்தவர்களாவார்.

விபத்து ஏற்பட்ட இ.போ.ச. பேருந்தில் 40க்கும் அதிகமான பயணிகள் பயணம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நு-24)

## இடைக்கால உத்தரவு வழக்குத் தாக்கல்

வட மத்திய மாகாண சபையினை கலைப்பதற்கு எதிராக நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட இடைக்கால உத்தரவினை ரத்துச் செய்யுமாறு, வடமத்திய மாகாண முதல் அமைச்சர் உள்ளிட்டோர் வழக்கொன்றை தாக்கல் செய்துள்ளனர்.

அரசியல் அமைப்பிற்கு அமைய, இந்த வழக்கினை விசாரிப்பதற்கான அதிகாரம் வடமத்திய மாகாண மேல்முறையீட்டு நீதிமன்றத்திற்கு இல்லையென பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணி தெரிவித்துள்ளார். இதற்கமைய இந்த விசாரணையை ரத்துச்செய்யும்படியும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். இந்நிலையில், மேலதிக விசாரணைகள் இன்று நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நு-2)

## விண்ணப்பம் கோரல்

கைதடியில் அமைந்திருக்கும் பனை அபிவிருத்திச் சபையின் பனைவள ஆராய்ச்சி நிலையத்திற்கு ஆராய்ச்சி உத்தியோகத்தர், ஆராய்ச்சி உதவியாளர், தொழில்நுட்ப உதவியாளர் ஆகிய பதவிகளை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக தகவல்களை www.Katpahachcholai.com என்னும் இணையத்தள முகவரியில் பார்வையிடலாம் என பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் ப.சீவரத்தினம் அறிவித்துள்ளார். (நு)


வைத்திய ஆலோசனை

✓ஆண்மைக்குறைவு ✓வீரியம் அதிகரித்தல்
✓பாலியல் குறைபாடு ✓குழந்தையின்மை
✓ஆண், பெண் உடல் பருமன் குறைத்தல்
✓கருமை நிறம் போக்க ✓உடல் வலு அதிகரித்தல்
இலங்கை - இந்திய தனியார் வைத்தியசாலைக்கு செல்ல ஆலோசனைக்கு அழையுங்கள்.
0750252141
(C-008)

CERTIFICATE IN INTERNET TECHNOLOGY

Dawnloding, Chatting, Web & E-Mail Address Creating, Face Book, Skype, Messenger Video Call, Net Call, etc. என்பன ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்.

Duration 2 Weeks, Rs.1000

Ms Office, ICT, GIT, DTP, Hardware Technology, Visual Basic போன்ற புதிய பிரிவுகளும் ஆரம்பமாகவுள்ளன. ஆண்கள், பெண்கள், பாடசாலை மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.

தொழில் புரிபவர்களுக்கு விசேட நேரம் வழங்கப்படும்
(குறைந்த இலகு தவணைக் கட்டண முறை)

NORTH LEAD Educational Center
No. 328, Stanly Road, Jaffna
Tel: 222 4459, 0772533390, Fax: 2224460

வியாழ மாற்றம் பலாபலன்கள்

17.05.2012இல் வியாழன் மாற்றம். பலாபலன்கள் நூல் வெளிவந்து விற்பனையாகிறது. ரூபா 50/- யாழ் நகர் எங்கும் கிடைக்கும்.
ஆக்கம்:- சோதிடஞானி சன்மாஸ்ரர்
(ஆ. சண்முகலிங்கம்)
சி.சி.ரி.எம் பாடசாலை லேன்,
கொக்குவில் மேற்கு. (இ)

செல்லா சினிமா - யாழ்ப்பாணம்



சிவா, விமல், அஞ்சலி, ஓவியா, சந்தானம் மற்றும் பலர் நடிப்பில் சுந்தர் C இன்
கலகலப்பு
மசாலா கபே
இலங்கை இந்திய ஒரே வெளியீடு
10.30, 2.30, 6.30
D.T.S

பல்கலைக்கழக மற்றும் தொழில்நுட்ப கல்லூரி மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க.

CLTP Unit இனால் Group Classes ஆரம்பிக்கப்படவுள்ளன.

- Java/ SQL Server/ JSP/ Serverlet.
- VB.Net/ SQL Server
- PHP/ MySQL/ HTML/ JavaScript
- C#/ SQL Server (Windows Application)

MySQL C# php Html

மேலதிக விபரங்களுக்கு
Address: 204, Brown Road, Jaffna.
Contact: 021-222 1807, 077 251 7223
(8459)
Note:- குறுகிய காலத்தில் முழுமையான பயிற்சிநெறி

சூரியோதய சனசமூக நிலையம்

துடுப்பாட்ட சுற்றுப் போட்டி
விண்ணப்பம் கோரல்

மாகியம்பதி சூரியோதய சன சமூக நிலையத்தின் விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்படும் மாபெரும் மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப்போட்டி. பங்குபெற விரும்பும் கழகங்கள் 30.05.2012இன் முன்னர் வரும் வார இறுதி நாட்களான....
(1) 19.05.2012, 20.05.2012
(2) 26.05.2012, 27.05.2012 திகதிகளில் நிலையத்தில் மாலை 4.00 - 6.00 மணிவரை பதிவு செய்யும்படி கேட்டுக் கொள்கின்றோம்.
தொடர்புகளுக்கு தொலை பேசி இல.:- 0775890802 அல்லது 0774757705
தகவல்: சூரியோதய விளையாட்டுக் கழகம்.
(8458)

கணபதி துணை
ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் திருக்கோவில்
மஹோற்சவம் - 2012



15.05.2012 செவ்வாய்க்கிழமை
கொடியேற்றம்
நண்பகல் 12.00 மணி
தினமும் நண்பகல் அன்னதானம் இடம்பெறும்
www.inuvilinfo.com இணுவில்
(C-001)

## இன்று ஒரு தகவல்

### பலசாலி யார்?

''மனிதனுக்கு வயது என்ன?'' என்று ஒருவன் கேட்டான்.

''மூன்று இலட்சம்'' என்றார் இன்னொருத்தர். கேட்டவருக்கு மயக்கம் வரும்போல இருந்தது.

"என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"நான் சரியாகத்தான் கூறுகிறேன். இந்த உலகில் மனிதன் தோன்றி மூன்று இலட்சம் ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனாலும் சென்ற ஆறாயிரம் ஆண்டுகளில் தான் மனிதன் நாகரிகம் என்பது தோன்றி வளர்ந்து வந்திருக்கிறது.

"ஆமாம், அது இருக்கட்டும்... கடவுள் இந்த பூமியைப் படைத்தது தொடர்பாக கதை ஒன்று உள்ளது". கூறுங்கள் பார்க்கலாம்.

"ஒருநாள் கடவுள் சாவகாசமாக உட்கார்ந்து இந்தப் பூமியை உருண்டையாக உண்டாக்கினார்.

அது அப்படியும் இப்படியும் அசைய ஆரம்பித்தது. அதில் அதிர்வு இருந்தது.

இது அசையாமல் இருக்க வேண்டும். இதில் மிகவும் கனமான பொருள் எதையாவது வைத்தால்தான் இது அசையாமல் உறுதியாக நிற்கும்... என்ன செய்யலாம்?

உடனே பெரிய பெரிய மலைகளை உருவாக்கி அதன் மேலே ஆங்காங்கே நிறுத்தினார்.

உடனே அது உறுதியாக நின்றது.

இதை பார்த்துக் கொண்டிருந்த சிலபேர் கடவுளிடம் வந்தார்கள்.

"கடவுளே! எங்களுக்கு ஒரு சந்தேகம்" என்றார்கள்.

"என்ன உங்கள் சந்தேகம்?"

''மலைகளை விட பலமாக எதையாவது படைத்து இருக்கிறீரா?''

''ஓ...! கடினமான இரும்பை படைத்துள்ளேன். இரும்பு மலையையே உடைக்கும்''

"இரும்பை விட பலம் பொருந்திய ஏதாவது நீங்கள் படைத்திருக்கிறீர்களா?"

"நெருப்பை படைத்துள்ளேன். இந்த நெருப்பு இரும்பையே உருக்கிவிடும்"

"நெருப்பை விட சக்தி உள்ளது ஏதாவது உண்டா?"

''உண்டு... அதுதான் நீர்... தண்ணீர் நெருப்பை அணைத்துவிடும்''

''நீரை விட ஆற்றல் உள்ளது ஏதாவது இருக்கிறதா?''

"எங்கும் நிறைந்திருக்கிற காற்று. நீரை விட ஆற்றல் மிக்கது. அந்த காற்று கடலையே கொந்தளிக்க வைக்கும்"

அதை விடவும் சக்தி வாய்ந்த எதையாவது இந்த உலகில் படைத்தது உண்டா?

"படைத்திருக்கிறேன். எல்லாவற்றையும் விட பலசாலியான மனிதன் ஒருவனை நான் படைத்திருக்கிறேன்"

"யார் அவன்?"

"இடது கைக்குத் தெரியாமல் வலது கையால் எவன் தானம் செய்கிறானோ– அவன்தான் அது"

கேட்டவர்கள் திகைத்துப் போனார்கள்.

எல்லாவற்றையும் விட பலசாலி அவன் என்று சொல்லி விட்டு கடவுள் மறைந்து விட்டாராம்.

இந்தக் காலத்தில் மனிதர்களுடைய அபிப்பிராயம் எல்லாம் வேறு மாதிரியாக இருக்கிறது.

ஒரு பெரியவரைப் பார்த்து; ''உலகிலே மிகவும் உறுதியான மனிதன் யார்?'' என்று கேட்டார்கள்.

அதற்கு அவர் கூறிய பதில்; ''ஒரு தட்டு நிறைய வறுத்த நிலக்கடலையைக் கொண்டு வந்து வையுங்கள். ஒரு கடலையை எடுத்து உரித்து வாயிலே போட்டு விட்டு... அடுத்த கடலையை எவன் தொடாமல் இருக்கிறானோ அவன்தான் அது!''

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பெற்றோர் பிள்ளைகள் குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டும்

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

வடக்கு, கிழக்கு பகுதிகளில் சிறுவர்கள் மர்மப் பொருட்களை கையாள்வதை தடுப்பது தொடர்பாக பெற்றோர் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என பொலிஸார் அறிவுறுத்தல் விடுத்துள்ளனர்.

அண்மைக்காலமாக வடக்கு, கிழக்கு பகுதிகளில் சிறுவர்கள் நிலத்திலிருந்து கண்டெடுத்த பொருட்களை கையாள முற்பட்டபோது இடம் பெற்ற வெடிச் சம்பவங்களில் உயிரிழப்புக்களும் ஏற்பட்டிருந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக சாவகச்சேரி, வவுனியா, புளியங்குளம், அம்பாறை போன்ற பிரதேசங்களில் இத்தகைய சம்பவங்கள் அதிகம் இடம் பெறுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை சேர்ந்த பெற்றோர் இந்த விடயம் தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும் எனவும் பொலிஸ் அத்தியட்சகர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சிறுவர்கள் விளையாடும் இடங்களை சுத்தமாக வைத்திருப்பதுடன் நிலத்திலிருந்து எடுக்கப்படுகின்ற இரும்பு பொருட்கள் மற்றும் மர்மப் பொருட்களை கையாள வேண்டாம் என சிறுவர்களை அறிவுறுத்த வேண்டியது பெற்றோரின் கடமை என அவர் கூறியுள்ளார்.

அவ்வாறான பொருட்கள் கிடைத்தால் அங்கு சேதம் விளைவிக்க முற்படாது பெரியவர்களுக்கு தெரியப்படுத்துமாறு சிறுவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# நிரந்தர கட்டடமின்றி சந்திரன் முன்பள்ளி

முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட முள்ளியவளை மேற்கு கிராம சேவையாளர் பிரிவில் உள்ள சந்திரன் முன்பள்ளி நிரந்தர கட்டடம் இல்லாமல் இயங்கி வருகின்றது.

கடந்த 1984 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மேற்குறித்த முன்பள்ளிக்கு இன்றுவரை நிரந்தர கட்டடம் இல்லாது காணப்படுகிறது. இவ் முன்பள்ளியில் 38 சிறார்கள் கல்வி கற்று வருகின்றனர். இவ் முன்பள்ளிக்கு காணியிருந்தும் நிரந்தர கட்டடம் இல்லாத நிலையே தொடர் கதையாகிறது.

ஒருவருடத்திற்கு முன் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தால் தற்காலிக கொட்டகை அமைத்து கொடுக்கப்பட்டது. ஆனால் பருவகால மழையின் போது இக்கொட்டகையில் இருந்து கல்வி கற்க முடியவில்லை. அத்துடன் மாணவர்கள் நிலத்திலிருந்தே கல்வி கற்கின்றனர்.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு நிரந்தரகட்டத்தை அமைப்பதோடு அச்சிறார்களின் அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்து இவர்களின் கல்விக்கு உதவ வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-267)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 140 | 80 | 90 |
| உருளைக்கிழங்கு | 70 | 80-120 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 50 | 40 | 50 | 70 |
| தக்காளி | 120 | 150 | 70 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 30 | 30 |
| கோவா | 50 | 40 | 40 | 40 |
| கரட் | 50 | 60 | 50 | 60 |
| பூசணி | 25 | 20 | 30 | 30 |
| புடோல் | 50 | 40 | 40 | 60 |
| வாழைக்காய் | 20-25 | 20 | 20 | 40 |
| சின்ன வெங்காயம் | 30-70 | 60-100 | 90 | 80 |
| பெரிய வெங்காயம் | 65 | 70 | 70 | 80 |
| பாகற்காய் | 80 | 100 | 70 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 40 | 70 |
| கருணைக் கிழங்கு | -- | 70 | 70 | 70 |
| பயற்றங்காய் | 50 | 30 | 60 | 30 |
| லீக்ஸ் | 120 | 120 | 70 | 140 |
| பீற்றூட் | -- | 60 | -- | 80 |
| கறிமிளகாய் | 70 | 100 | 60 | 80 |
| முருங்கைக்காய் | 130 | 200 | 250 | 200 |
| போஞ்சி | -- | 140 | 100 | 140 |
| கத்தரிதம்புள்ள | -- | 100 | -- | -- |
| கீரை - 1 பிடி | 10-12 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 100 | 80 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 20 | 18-25 | 15-18 |

## இராசி பலன்

*16.05.2012*
*(வைகாசி 03, புதன்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு*
*ஏகாதசி முன்னிரவு 10.31 மணிவரை*
*உத்தரட்டாதி பின்னிரவு 3.21 மணிவரை*
*இராகுகாலம் 11.53-1.23 மணிவரை*
*சுபநேரம் 4.23-5.53 மணிவரை*
*ஏகாதசி விரதம்*

**மேடம்** தொழிலில் புதிய மாற்றங்களைச் செய்யும் எண்ணம் உருவாகும், சுப செலவுகள் அதிகரிக்கும், சொன்ன சொல்லைக் காப்பாற்றும் எண்ணம் மேலோங்கும், பயணங்களால் அலைச்சல்கள் ஏற்படலாம்.

**இடபம்** புதிய நண்பர்களின் அறிமுகத்தால் பொருளாதார நிலை உயரும், தொழில் முன்னேற்றமடையும், எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி காண்பீர்கள், மதிப்பும் மரியாதையும் உயர்வடையும்.

**மிதுனம்** வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள்,அரசு வழியில் எதிர் பார்த்த சலுகைகள் வந்து சேரலாம், தந்தை வழியில் ஏற்பட்ட தகராறுகள் அகலும், பிறர் உதவியுண்டு.

**கடகம்** ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும் நாள், புகழ்மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம்,திடீர் பயணங்களால் நன்மையுண்டு,கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் மேலோங்கும்.

**சிங்கம்** விரயங்கள் தவிர்க்க இயலாமல் போகலாம், வாகனங்களில் செல்லும் போது விழிப்புணர்வு தேவை,எதிர்பாராத வகையில் குடும்பத்தில் சிறு சிறு மன உளைச்சல்கள் ஏற்படலாம், கௌரவக்குறைவான நாள்.

**கன்னி** பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொழில் நன்மையுண்டு, தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், சுப தகவல்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**துலாம்** உடல் நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், எதிர்பார்த்த தொகைகள் வந்து சேரலாம், கௌரவமான நாள், எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கலாம்,போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும், புதிய திட்டங்கள் கைகூடும், பிள்ளைகளால் பெருமை சேர வேண்டிய நாள், பொதுவாழ்வில் புகழ் கூடும்.

**தனுசு** உற்சாகத்துடன் பணி-புரிவீர்கள், தொழில் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்தவர்கள் விலகுவர், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்** ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும், நட்பு வட்டம் விரிவடையும், சகோதர வழி ஒற்றுமையால் பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும், எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

**கும்பம்** விரதங்களில் நம்பிக்கை கூடும் நாள், புதிய பொருட் சேர்க்கைக்கு அத்திவாரமிடுவீர்கள், மனையில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறி தோன்றும், வருமானம் திருப்தி தரும்.

**மீனம்** வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்,திடீர் பயணங்களால் திசை திருப்பங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு,தேவையற்ற கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள்.

வளவன்

# உயிர் மீண்ட காளை மாடு

7

செல்வச்சந்நிதி, முருகன் உறையும் பதியாக இருக்கின்றபோதிலும் அங்கு நந்தியே பலிபீடத்தில் இருப்பதென்பது, சிவவழிபாட்டின் மரபை பேணுதற்கான ஏற்பாடு எனலாம். மேற்கூடிய யாவற்றிலும் இருந்து சிவனின் சாயலாக எருது கருதப்பட்டு வந்ததென்பதை உணர முடியும்.

**பஞ்சகௌவியம்**

**தோடுடைய செவியன் விடையேறியோன்....** என்று திருவாய்மலர்ந்தருளிய ஞானசம்பந்தர் தனது தேவாரத்திருமுறையில் **வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்...** எனப் பாடி அருளினார். யார் வாழவேண்டும் என பட்டியலிட்ட சம்பந்தர், அந்தணர், தேவர்கள் பசு இனம் ஆகிய மூன்றும் வாழ்க என்று இறைவனிடம் வேண்டும் திறம் நோக்குதற்குரியது.

அந்தணர்கள் வாழ்வதன்மூலம் அறம் வாழும்,வானவர்கள் வாழ்ந்தால் அவர்கள் பூலோகத்திற்கு வருகை தருவார்கள். அவர்களின் வருகையால் பூலோகம் தெய்வீகப் பொலிவடையும்.

ஆனினம் எனப்படும் பசு இனம் வாழ்ந்தால் நாடு, மக்கள், மண் என அத்தனையும் வாழும் என்பதாலேயே ஞானசம்பந்தர் அந்தணர்கள், வானவர்கள், ஆனினம் மூன்றும் வாழவேண்டும் என விரும்பினார். இந்தத் தொடரை உணர்த்துவதாக மகா கும்பாபிஷேகம் அமைந்திருப்பதை நோக்க முடியும்.

அந்தணர்கள் யாகம் வளர்த்து மகாகும்பாபிஷேகத்தை செய்கின்றார்கள். மகாகும்பாபிஷேகம் நடந்து முடிந்தபின்னர் கருவறையின் திருக்கதவு மூடப்படும். இதனை 'தச தரிசனம்' என்பர். பூலோகத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்ற ஆலயத்திற்கு தேவர்கள் வந்து தரிசிப்பர். இறை பரம்பொருளைத் தேவர்கள் தரிசிக்கும் போது மானிடர்கள் அவர்களின் தரிசனத்திற்கு இடைஞ்சல் விளைவிக்காதிருக்கவே மூலஸ்தானத்தின் கதவு மூடப்படுகின்றது. இவ்வாறு



வேதம் ஓதி அக்னிக்குண்டத்தில் யாகம் வளர்த்து கும்பத்தில் ஆவாகணம் செய்த இறைவனை விம்பத்தில் சாத்தி அதனை தெய்வீகசக்தி ஆக்கிய அந்தணர்கள் இப்போது தேவர்கள் வழிபடுவதற்கு வசதிகாகத் தாமும் வெளிநின்று திருக்கதவை மூடிவிடுகின்றனர்.

தச தரிசனம் எனப்படும் தேவர்களின் வழிபாடு நிறைவுற்றதும் திருக்கதவு திறக்கப்படவேண்டும்.

திருக்கதவு திறக்கப்படும் போது சிவனின் வடிவமாக இருக்கக்கூடியதும், இறை பரம்பொருளின் அபிஷேகத்திற்கும் சிவ சின்னமாகிய திருநீற்றைத்தரக்கூடியதும் பஞ்சகௌவியம் எனப்படும் பால், தயிர், நெய், கோம்யம், கோசலம் என்பவற்றைத் தருகின்ற 'பசு'வை முன்னிறுத்துவர்.

ஆக , சம்பந்தர் கூறியதுபோல அந்தணர், வானவர், ஆஇனம் ஆகிய மூன்றும் திருக் குடமுழுக்கு நடைபெறும் போது ஒன்றித்து



நிற்பது இதயத்தை இறைவன்பால் நெகிழவைக்கும் நிகழ்வுகளாகும். குடமுழுக்கு நிறைவுற்றதும் வானம் மழைபொழிய வேண்டும். அதனையே வீழ்க தன் புனல் என்று சம்பந்தர் பெருமானார் கூறி இருக்கலாம் என நம் சிற்றறிவின்பால் நினைப்பதில் தவறில்லை.

மகா கும்பாபிஷேகம் சிறப்புற நடை பெற்றால் வானம் மகிழ்ந்து மண்ணைக் குளிர்மைப்படுத்தும் என்பது ஐதீகம். ஆலயங்களில் கும்பாபிஷேகம் நடந்தவுடன் வானம் மழைபொழிந்த நிகழ்வுகளை நடைமுறையில் கண்டுள்ளோம்.

**புதுமனைப் புகுதல்**

'உன் ஆற்றலை நீயே உரக்கச் சொல். மற்றவர்களுக்காகக் காத்திராதே' இப்படிக் கூறியவர் யூலியசீசர்.அவரின் கருத்தின் அடிப்படையில்த்தான் உயிர் மீண்ட காளை மாடு என்ற இப்பகுதி நகர்த்தப்படுகின்றது.

அதாவது இறைச்சிக்காக வெட்டப்படவிருந்த நல்லினக் காளைமாடு காப்பாற்றப் படுவதற்காக நீதிமன்றம் சென்றமை,

அந்தக் காளைமாட்டை கீரிமலை நகுலேஸ்வரப்பெருமானின் ஆலயத்தில் ஒப்படைத்தமை, நூற்றுக்கணக்கான அடியவர்கள் நாள் தோறும் காளைமாட்டைச் சென்று தரிசிக்கின்றமை என்பதற்குள் இருக்கக்கூடிய பெறு

## குடமுழுக்கிலும் புதுமனைப்புகுதலிலும் 'ஆ' இனம் பெறும் மகிமை அறிவீரோ?

மானங்களை விளங்கிக்கொள்வதற்காகவே.

தமிழர்களின் வாழ்வில் பசுவும் காளையும் பெற்றுள்ள மகத்துவம் இங்கு பிரஸ்தாபிக்கப்படுகின்றது.

சைவத்தமிழுக்கும் நந்திக்கும் இருக்கக்கூடிய தொடர்பை தெளிவுபடுத்தாதவரை காளைமாடு காப்பாற்றப்பட்ட விடயங்கள் கூட விமர்சனத்துக்கு உட்பட முடியும்.

இதன்காரணமாகவே, எங்கள் தமிழ்ப் பண்பாட்டில் பசுவும் எருதுவும் எங்கெங்கெல்லாம் முதன்மை பெற்றிருந்தன என்பதை காட்டுவதற்காக 'ஆ' இனத்துடன் தொடர்புபட்ட பல்வேறு விடயங்கள் இங்கு ஆராயப்படுகின்றன என்பதை வாசகர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்வது அவசியம்.

தமிழ்மக்கள் புதுமனைகளை அமைத்து அதில் குடிபுகுதல் செய்கின்ற நிகழ்வின் போது குடிபுகுதலுக்கு முதல்நாள் பசுமாட்டை சுவாமி அறையில் கட்டிவைத்தல் என்ற மரபு இப்போதும் கடைப்பிடிக்கப்படுகின்றது.

வாழப்போகின்ற வீட்டில் -அதன் சுவாமி அறையில் பசுமாட்டைக் கட்டுவதன் மூலம் அங்கு புனிதம் ஏற்படுகின்றதென்பது தெளிவாகின்றது. அதாவது ஆலயத்தில் மகா கும்பாபிஷேம் செய்வதற்கு முன்னதாக நடைபெறுகின்ற பாலஸ்தாபனத்தின் போது பசுவின் கழுத்தில் தொடுக்கப்பட்ட தர்ப்பைக் கயிற்றின் மூலமாகவே கருவறை விக்கிரகம் நகர்த்தப்படுகின்றது.

அதே ஆலயத்தில் திருக்குடமுழுக்கு நடந்து முடிந்தபின் பசுவை முன்னிறுத்தி கதவு திறக்கப்படுகின்றது.

இந்த வரிசையில் புதுமனை புகுதலிற்கு முன்னதாக பசுவை புதுமனையின் சுவாமி அறையில் கட்டுதல் என்ற நடைமுறைகள் தமிழினத்திற்கும் 'ஆ' இனத்திற்கும் இடையிலான வாழ்வியல் பிணைப்பை வெளிப்படுத்தி நிற்கின்றன.

திருமண பந்தங்களில் 'ஆ' இனம் பெறும் வகிபாகத்தை தொடர்ந்து பார்க்கலாம்

(வளரும்)

**விதுரன்**

# புலிகளுடனான யுத்தம் நீடிக்க இந்தியாவே முழுக்காரணம்

## ஜனாதிபதியின் செயலாளர் லலித்

(கொழும்பு)

கொழும்பில் 1980 களின் நடுப்பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதல்களுக்குத் திட்டமிடுதல் மற்றும் நிறைவேற்றுதலில் இந்தியப் புலனாய்வு அமைப்புகள் வலுவாகப் பங்களித்திருந்ததாக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க குற்றம் சாட்டியுள்ளார்.

உபாலி குறூப்ஸ் ஊடகவியலாளர் சீ.ஏ.சந்திரபிறெம எழுதிய கோத்தாவின் போர் என்னும் நூல் வெளியீட்டு விழா பத்தரமுல்ல வேட்டர் எட்ஜ் விடுதியில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் இந்தியாவின் பங்கு தொடர்பாக தீவிரமாக விவாதம் நடத்தப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

2009 ஏப்ரல் மாதம் இந்தியா, பிரித்தானியா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் போரை நிறுத்துமாறு ஜனாதிபதி மஹிந்தவுக்கு கடுமையான அழுத்தங்களை கொடுத்தன. ஆனால், அவர் வெளிநாட்டு அழுத்தங்களைக் கண்டுகொள்ளவில்லை.

2009 ஏப்ரலில் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் தலைமையிலான குழு இலங்கை வந்தது. வெவ்வேறு காரணங்களைக் கூறிக்கொண்டு பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களும் இலங்கை வந்தனர். இவர்களின் எண்ணம் எல்லாமே போரை நிறுத்துவதாகவே இருந்தது.

வடமராட்சி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது இந்தியப் பிரதமராக இருந்த ராஜீவ்காந்தி அந்த நடவடிக்கைகளுக்கெதிராக கடுமையான அறிக்கை வெளியிட்டார். இலங்கை அப்போதே தீவிரவாதத்தை ஒழித்திருக்க முடியும்.

ஆனால்,இந்தியத் தூதுவராக இருந்த கே.என்.டிக்சித் வலுவான தலையீடு செய்தார். அந்த நடவடிக்கை தொடர்ந்திருந்தால் இலங்கை இரு தசாப்துங்களுக்கு முன்னரே போரை முடிவுக்கு கொண்டு வந்திருக்கும்.

இராணுவ நடவடிக்கை தொடர்ந்தால் எதிர்பாராத விளைவுகள் ஏற்படுத்தும் என இந்தியா எச்சரித்திருந்தமையே யுத்தம் இத்தனை காலம் நீடிக்க காரணம் என அவர் குறிப்பிட்டார். இந்நிகழ்வில் இந்தியத் தூதுவர் கே.அசோக்கே காந்தாவும் கலந்து கொண்டார். (அ-2)

## ரிமோட் வாயிற்கதவு இறுக்கி காவலர் பலி

(கொழும்பு)

தூர இயக்கு கட்டுப்பாட்டு கருவி (ரிமோட் கன்ட் ரோல்) மூலம் இயக்கப்படும் வாயிற் கதவில் கழுத்து இறுகி வீட்டுக் காவலர் ஒருவர் உயிரிழந்த சம்பவமொன்று கனேமுல்ல, புலுகஹகொட பகுதியிலுள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

கஹவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த காந்தன் கணேசன் (50வயது) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையொருவரே சம்பவத்தில் உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பான மேல்திக விசாரணைகளை கனேமுல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(அ-2)

## டுபாயில் தங்கம், பணம் திருடிய பெண்ணுக்கு 6 மாத சிறை

டுபாயில் தான் பணிபுரியும் வீட்டில் பொருள் கொள்ளையில் ஈடுபட்ட இலங்கை பணிப்பெண் ஒருவருக்கு அந்நாட்டு நீதிமன்றம் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

வழங்கப்பட்டுள்ள 6 மாத கால சிறைத்தண்டனை முடிந்ததும் குறித்த இலங்கைப் பெண் நாடு கடத்தப்படுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் 15 நாட்களுக்குள் தன் மீதான சிறைத் தண்டனையை எதிர்த்து மேன்முறையீடு செய்ய குறித்த பெண்ணுக்கு வாய்ப்புள்ளதென டுபாய் தகவல்கள் தெரிவிக்கின்றன.

டுபாயில் தான் பணிபுரிந்த வீட்டில் இருந்த முதியவர் மற்றும் சிறுவன் ஆகியோர் முகத்தில் ஒருவகை அமிலத்தை வீசி அவ்வீட்டில் இருந்த தங்கம் மற்றும் பணத்தை கொள்ளையடித்ததாக இப் பெண் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

31 வயதுடைய இலங்கைப் பெண் இவ்வாறு பல கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-2)

## புதுக்குடியிருப்பு மக்கள் ஜூலை மாத இறுதிக்குள் மீள்குடியேற்றப்படுவர்

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து ஆய்வு செய்ய வந்த இந்திய அனைத்துக் கட்சி நாடாளுமன்ற குழுவிடம் பழுதடைந்த பருப்பை காட்டியதற்காக வவுனியா இடைத்தங்கல் முகாமிலுள்ள மக்களை மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ன வீரகோன் கடிந்து கொண்டுள்ளார்.

இந்தியா என்னத்தை தந்து விடப்போகிறது என அவர்களிடம் கொண்டுபோய் உழுத்த பருப்பை தூக்கி காட்டினீர்கள் என அமைச்சர் கேட்டுள்ளார். கதிர்காமர் நலன்புரி முகாமுக்கு நேற்று முன்தினம் திடீர் விஜயம் மேற்கொண்ட மீள்குடியேற்றஅமைச்சர் தலைமையிலான குழுவினர் நலன்புரி முகாம் மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பாக கலந்துரையாடினர். இதன்போதே அமைச்சர் மக்களிடம் மேற்கண்டவாறு கடிந்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் மக்கள் மத்தியில் உரையாற்றிய அமைச்சர் இடைத்தங்கல் முகாமிலுள்ள மக்களில் புதுக்குடியிருப்பு பகுதியை சேர்ந்தவர்கள் அனைவரும் எதிர்வரும் ஜூலை மாத இறுதிக்குள் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்படவுள்ளதாக தெரிவித்தார். இறுதிக்கட்டபோரின் போது தமது சொந்த இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து கதிர்காமர், ஆனந்தகுமாரசுவாமி இடைத்தங்கல் முகாமிலுள்ளவர்களில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மக்களை அவர்களின் சொந்த இடங்களிலும் ஏனைய பகுதி மக்களை தற்காலிக இடைத்தங்கல் முகாமிலும் மீளக்குடியமர்வு செய்வதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

அதனால் தற்போது மிகவும் அவசரஅவசரமாக மீளக்குடியமரவுள்ள மக்களின் வீடுகள், கிணறுகள் மற்றும் மலசலகூடங்களை சுற்றியுள்ள சுமார் 10 அடி வரையுள்ள பகுதிகள் கண்ணிவெடி அகற்றப்பட்டு மீள்குடியேற்ற நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன எனவும் அமைச்சர் தெரிவித்தார். (அ-2)



# இராமாவில் பகுதியில் மீள்குடியேற்றுங்கள்

## மக்கள் கோரிக்கை

(சாவகச்சேரி)

கொடிகாமம் இராமாவில் பகுதியில் நலன்புரி நிலையம் அமைப்பதற்காக அங்கிருந்த குடும்பங்கள் வெளியேற்றப்பட்டன.

இதனால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தங்களை மீளக்குடியமர்த்துமாறு கோரிக்கை விடுத்துள்ளன.

கடந்த 1996 ஆம் ஆண்டு இப்பகுதியில் உள்ள 30 ஏக்கர் தென்னந்தோட்டத்தில் குடியிருந்த் 27 குடும்பங்கள் போர்ச்சூழலை அடுத்து வெளியேறி இருந்தன.

போர் முடிவுக்கு வந்த பின்னர் மேற்படி காணியில் நலன்புரி நிலையம் அமைக்கப் பட்டது.

நலன்புரி நிலையம் மூடப்பட்டு ஒரு வருடத்திற்கு மேலாகியும் முன்பு வசித்தவர்கள் மீள்குடியேற்றப்படவில்லை.

இந்த நிலையில் அப்பகுதி மக்கள் தம்மை மீள்குடியேற்ற உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இம்மீள்குடியமர்வு இடம்பெறாமையால் அங்குள்ள இக்குடும்பங்களின் வளங்கள் இனந்தெரியாதோரால் அபகரிக்கப்படுகின்றது.

அத்துடன் இப்பகுதிகளில் மணல் அகழ்வும் பெருமளவில் இடம்பெறுகின்றது. எனவே இவைகளை தடுக்கும் முகமாக தம்மை மீள்குடியேற்றுமாறு அம்மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-29)

# தீவக கல்வி வலயத்தில் அதிபர் பதவிவெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

தீவகக் கல்வி வலயத்தில் யா/அனலைதீவு வடலூர் அ.த.க. வித்தியாலயத்தில் அதிபர் பதவி வெற்றிடம் ஏற்படவுள்ளது. இப்பதவிக்கு தீவகக்கல்வி வலயத்தில் கடமையாற்றும் இலங்கை அதிபர் சேவையை சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுவதாக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வி.இராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

அதிபர் சேவையை சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் கிடைக்காதவிடத்து இலங்கை ஆசிரியர் சேவை தரம்- 1, தரம்-2-I தரம்-2-II இனைச் சேர்ந்த தீவகக் கல்வி வலய ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் கவனத்திற்கொள்ளப்படும்.

விண்ணப்பப்படிவங்களை தீவகக்கல்வி வலயத்தில் பெற்று எதிர்வரும் ஜூன் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு அவர் கேட்டுள்ளார். (அ)

# கரம் மற்றும் கபடிப்போட்டி முடிவுகள்

(கரவெட்டி)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்றுவரும் விளையாட்டுவிழாவின் கபடி, கரம் போட்டிகளில் வெற்றியீட்டி சம்பியனாகிய அணிகளின் விபரங்களை யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை செயற்குழு செயலாளர் எஸ். செல்வக்குமரன் அறிவித்துள்ளார்.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற அணிகளின் விபரம் வருமாறு,

**கபடி**

**15 வயதுப்பிரிவு**

**ஆண்**

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், வேலாயுதம் மகா வித்தியாலயம்.

**பெண்**

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், சென் ஜேம்ஸ் வித்தியாலயம், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி

**19 வயதுப்பிரிவு**

**ஆண்**

இளவாலை சென் ஹென்றியரசர் கல்லூரி, பருத்தித்துறை கலட்டி றோ.க.த.க., வேலாயுதம் மகா வித்தியாலயம்

**பெண்**

இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம், பருத்தித்துறை சென்தோமஸ் றோ.க.த.க., வட இந்து மகளிர் கல்லூரி

**கரம்**

**15 வயதுப் பிரிவு**

**ஆண்**

சென் பற்றிக்ஸ் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி

**பெண்**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி, வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

**19 வயதுப் பிரிவு**

**ஆண்**

சென் பற்றிக்ஸ் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி

**பெண்**

யாழ். இந்து மகளிர் கல்லூரி,சுண்டுக்குளி மகளிர் கல்லூரி,வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி. (அ-3-24)

# தேசியமட்ட எழுத்தாக்கப்போட்டிக்கு இரண்டு மாணவிகள் தெரிவாகினர்



கா. கீர்த்தனா



ப. சரண்யா

(கரவெட்டி)

வடமராட்சி வட இந்து மகளிர் கல்லூரி இருமாணவிகள் தேசிய மட்ட எழுத்தாக்கப் போட்டிக்கு தெரிவாகியுள்ளனர்.

வடமாகாண கல்வித்திணைக்களத்தினால் நடத்தப்பட்ட எழுத்தாக்கப்போட்டி அண்மையில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.

இப்போட்டியில் வட இந்து மகளிர் கல்லூரியில் தரம் 11 இல் கல்வி கற்கும் கா. கீர்த்தனா இலக்கணப்போட்டியில் முதலாம் இடத்தையும் க.பொ.த உயர்தரத்தில் கல்வி கற்கும் ப. சரண்யா இலக்கணப்போட்டியில் முதலாம் இடத்தையும் பெற்று தேசியமட்டப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

இப்பாடசாலை எழுத்தாக்கப்போட்டிகளில் தொடர்ந்து ஐந்தாவது வருடம் பிரிவு 4 இல் தேசிய மட்டத்திற்கு தகுதி பெற்றதும் குறிப்பிடத்தக்கது. (அ-3-24)

# கைகலப்பில் சாரதிக்கு காயம்

(கரவெட்டி)

பருத்தித்துறை நகரப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை முச்சக்கர வண்டி சாரதிகளுக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பில் முச்சக்கர வண்டி சாரதி ஒருவர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை நகரப் பகுதியில் உள்ள முச்சக்கர வண்டி தரிப்பிடத்தில் சம்பவ தினம் மாலை 6.30 மணியளவில் முச்சக்கர வண்டியில் பயணிகளை ஏற்றுவது தொடர்பில் ஏற்பட்ட போட்டி காரணமாக இரு முச்சக்கர வண்டி சாரதிகள் குறித்த சாரதியை கடுமையாக தாக்கியதில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

பருத்தித்துறை கல்லூரி வீதியை சேர்ந்த நவரட்ணம் சசிதரன் (வயது-32) என்ற முச்சக்கரவண்டி சாரதியே இவ்வாறு தாக்கப்பட்டவராவார்.

இச்சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-3-24)

## யாழ்.செய்திகள்...



# அலங்காரத்திருவிழா

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை கிழக்கு ஆதி வைரவர் ஆலயத்தின் அலங்காரத்திருவிழா எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது. (அ-9-72)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதாலும் கட்டமைப்பு வேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள் செய்ய வேண்டியிருப்பதாலும் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கோண்டாவில் பிரதேசத்தின் மேற்குப் பகுதி, குளப்பிட்டிப்பிரதேசம், கொக்குவில் பிரதேசத்தின் ஒரு பகுதி, நாச்சிமார் கோவிலடி, புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப்பிரதேசம், சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப்பகுதி, மல்லாகம், தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான் ஆகிய பகுதிகளில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

# வீரகத்தி விநாயகரில் புதிய தேர் வெள்ளோட்டம்

(யாழ்ப்பாணம்)

அருள்மிகு வில்லூன்றி வீரகத்தி விநாயகர் புதிய திருத்தேர் வெள்ளோட்ட விழா நாளை வியாழக்கிழமை காலை 8 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இவ்வெள்ளோட்ட விழாவின் போது காலை 9.30 மணிக்கு புதிய தேர் வீதி வழியாக ஆலயத்தை வலம் வரவுள்ளதுடன் 10.30 மணிக்கு புதிய தேரை வடிவமைத்த சிற்பாச்சாரியார்களை கௌரவிக்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது.

மேற்படி ஆலயத்தின் கொடியேற்ற திருவிழாவானது கடந்த 11 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெற்று வருகின்றது.

இதில் தேர்த்திருவிழா எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு வசந்தமண்டப பூசையுடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (அ-7)



யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டப்போட்டி அண்மையில் வடமராட்சியில் இடம்பெற்றது. இதில் 15 வயதுப் பிரிவில் இரண்டாம் இடத்தைப் பெற்ற சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியினரைப் படத்தில் காணலாம். (படம்:- எஸ். செல்வதீபன்)

# அன்பை கொண்டாடுதல்



**மரியாதை**

இருவிதமான மரியாதை உண்டு முதலாவது உங்களது அந்தஸ்து, புகழ், செல்வம், இவற்றால், வருவது, இத்தகைய மரியாதை நிரந்தரமானது அல்ல. அந்தஸ்தையும் செல்வத்தையும் நீங்கள் இழக்க நேரிடும் பொழுது மரியாதையையும் இழக்க நேரிடும். இரண்டாவது வகை மரியாதை, உங்களது புன் முறுவல் பூத்த முகத்திற்காகவும் நேர்மை, அன்பு, பொறுப்பேற்கும் தன்மை, பொறுமை இத்தகைய நற்குணங்களுக்காகவும் வந்து சேரும் இத்தகைய மரியாதையை உங்களி டமிருந்து எவரும் பறிக்க முடியாது.

உங்களிடம் இருக்கும் நற்குணங் கள் அல்லது நற்பண்புகளின் மேல் நீங்கள் அதிகம் அலட்டிக் கொள்ளாமல், இருந்தால் உங்களுக்கு சுயமரியாதை யானது கூடும், அதிகரிக் கும். மாறாக நடந்தால், மற்றவர்களை அவமதிப் பதுபோல் ஆகிறது. இத னால், உங்கள் நற்பண்பு களே மெல்ல மெல்ல குறைய ஆரம்பிக்கின்றன. நற்பண்புகள் மேல் பற் றற்று இருப்பது, மிக உயர்ந்த சுயமரியாதை யைத் தரும்.



அகங்காரமும் சுய மதிப் பும் பெரும்பாலும் குழப்ப மாகவே புரிந்துகொள் ளப்படுகின்றன. அகங் காரம் என்பது, ஒப்பிடு வதற்கு மீற்றொன்று இருக் கும் பொழுது ஏற்படு கின்றது. ஆனால், சுய மதிப்பு என்பது தன்மேல் நம்பிக்கை வைப்பது மட் டுமே ஆகும். உதாரண மாக ஒரு கனவான், தான் கணிதத் திலோ, புவியியலிலோ மிகுந்த் தேர்ச்சி பெற்றவர் என்று கூறிக் கொள்வது சுயமதிப்பு. ஆனால், உன்னைவிட நான் அதிகம் அறிந்தவன் என்று கூறுவது அகங்காரம்.

அகங்காரம் என்பது தன்னிடமே தனக்கு மரியாதை குறைவதனால், ஏற்படுவது.

உங்கள் அகங்காரம் உங்க்ளை அடிக்கடி மன வருத்தத்தினால், ஸ்தம்பிக்கச் செய்துவிடும். ஆனால், உங்களுக்கு சுயமதிப்பு இருந்தால், வெளிப்புற காரண காரியங்களால் நீங்கள் அசைக்க முடியாதவராக உறுதியாக இருப்பீர்கள். சுயமரியாதை என்ற விடயத்தில், எல்லாமே ஒரு விளையாட்டு, வெற்றி தோல்வி என்பது இங்கு அர்த்தமற்றது; ஒவ் வொரு படியும் மகிழ்ச்சிதான், ஒவ் வொரு நகர்தலும் அல்லது அசைவும் கொண்டாட்டம் தான். சுய மதிப்புடன் இருக்கும் பொழுது நீங்கள் இதை உணரலாம்.

**உபகார பந்தம்**

சார்ந்திருக்கும் உணர்வானது,

1. தன்தேவைகளை வற்புறுத்திப் பெறுதல்
2. பொறாமை
3. விழிப்புணர்வுக் குறைபாடு, நன்றிகெட்ட தன்மை

போன்ற எதிர்மறையான நடவடிக் கைகளைக் கொண்டுவந்துவிடும். உங்கள் சொந்த வாழ்க்கையையே பாருங்கள். அந்நியர்களிடம் அதாவது

**ஆன்மீகம் 55**

உறவினர் அல்லாதவரிடம் நீங்கள் நன்றி உணர்வோடு நடந்து கொள் வீர்கள்; அவர்களுக்கு அதிக கவனம் செலுத்தி அவர்களிடம் நல்ல மரியா தையாக நடந்துகொள்வீர்கள்.

அதுவும் உங்களைச் சர்ந்தவர்கள் என்று நீங்கள் உணரும் சிலரைவிட அப்படியல்லாத அந்நியரிடம் மென் மையாக நடந்துகொள்வீர்கள். ஒருவர் மற்றவரைச் சார்ந்திருக்கும் உணர் வானது, நன்றியுணர்வைக் குறைத்து விடுகிறது. இதுதான் உறவு முறை களில் உள்ள மிகப்பெரிய பிரச்சி

**பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்**

னையாகும். சார்ந்திருக்கும் உணர் வுடன் இருத்தல் ஒரு அலட்சிய மனோபாவமும், ஏனோதானோ என்ற எண்ணமும் ஏற்பட்டுவிடச் செய் கிறது.


(தொடரும்)

# உங்கள் கைரேகை பலன்கள் 55

## விதி இரேகையின் அமைப்பு

**சக்தி**

காற்றுள்ளபோதே தூற்றிக் கொள் என்பதுபோல் காலத்தை பலன் தரும் வழியில் உப யோகிப்பர். மற்றவர்கள் காலத்தை வீணில் கழித்து சோம்பேறிகள் ஆகின்றனர். ஊக்கமும் திட காத்திரமும் உள்ளபோது வேலை செய்கிறதில்லை. உழுகிற காலத் தில் ஊர்வழி போய்விட்டு, அறுவடை காலத்தில் ஆட் சேர்த்தானாம் என்பதுபோல் பாடுபடாமல் பலன் உண்டாகுமா? அதிர்ஷ்டம் என்பது அவரவர் செயலினால் உண்டாவதன்றி அகாரணமாய் வருவதில்லை.



இந்தக்காரண காரியத்தை விளக்கு வதே விதிஇரேகை அல்லது சனி இரேகையாகும். மனித அறிவிற் கெட்டாத எதிர்கால நிகழ்ச்சி களை இந்த விதி இரேகை தெய்வீகமாய் விளக்குகிறது. இதைக்கொண்டே தீர்க்க தரிசி யான யேசுகிறிஸ்து விதி என்பது தலையில் எழுதப்படவில்லை. ஆனால், உன்கையில் பரிபாஷை யாக எழுதப்பட்டிருக்கிறது என் றார். தத்தம் வழியைப்பார்த்து திருந்தி வழிகண்டு அதற்கேற்ற வாறு நடந்து எல்லோரும் நன் மையை அடைய வேண்டும் என் பதே அதன் கருத்தாகும்.

சிலர்கைகளில் இந்த விதி இரேகை அமைவதில்லை. இவ் வாறு விதி இரேகை இல்லாத செல்வந்தர்களின் கைகளைப் பார்க்கலாம். கிரக மேட்டில் இரேகை இக்குமாயின் பலனை வரைகாட்டி அளந்து கொடுப்ப தாகும்.

இரேகை இல்லாத போது அளவற்ற செல்வத்துக்கு அதிபதி யாயிருப்பர். இதைக் கிரக மேட் டைக் கொண்டு அறிய வேண்டும். மிகுந்த சொத்துள்ளவரும் நாற்பது வயது வரை இராஜபோகத்தில் இருந்தவருமான ஒருவர் கையில் விதி இரேகை நாற்பதுக்கு மேல் ஏற்பட்டு சனிமேட்டைக் கவர்ந் துள்ளது. அந்த இரேகை மிக மெலில்யதாய் இருந்தால், விஷேட பலனை எதிர்பார்க்கலாம். அது அழுந்திப்பதிந்திருந்தால், சிரமப் பட்டு வரும்படியைத் தேடுவதா கும்.

விதி இரேகை நீண்ட தங்கு தடையின் றி எவ்வளவுக்கு மெல் லியதாய் இருக்கிறதோ அவ்வள வுக்கு விஷேட பலனுள்ளதாய் விளங்கும்.

விதி இரேகை சிறுத்தும் தடித் தும் அமையப்பெறில் வாழ்வில் ஏற்றத் தாழ்வுகளைக் குறிக்கும்.

சனி ஆதிக்கம் பெற்றவர் எக்காரியத்தையும் சிந்தித்துத் தீர்க்காலோசனை செய்வர். செட் டான வாழ்க்கை, அதியாக்கிரதை, இவை வாழ்க்கையின் முன்னேற் றத்திற்கு அனுகூலமாயிருந்துவரும். சனி ஆதிக்கர் பூமியினின்றும் உலோக வர்க்கங்களைக் கண்டு பிடிப்பர். நிலக்கரி, எண்ணெய்க் கிணறு முதலியவைகளை சுலப மாய் கண்டுபிடித்து சிமானாய் வாழ்வர். சனி ஆதிக்கருக்கு அபாரமான மூளை இருக்கும். மற்ற கிரகங்கள் அனுகூலமாயின் அபூர்வ மனிதராய்க் காணப்படு வர். இத்தகையோருக்கு விதி இரேகை குற்றங்குறைவின்றி தீட் சண்யமாய் அமைந்திருக்கும். என்றாலும் சூரியன் சுக்ரன் அல்லது கம்பீரமான குரு அல்லது செவ்வாய் ஆதிக்கர் சனி ஆதிக் கரைவிட மேலான நிலைமை யையும் அந்தஸ்தையும் அடைந் திருப்பர் என்பதை வாசகர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

சனி ஆதிக்கர் தன்னந்தனியே விஷேட முதலீடு இன்றி உழைப் பில் கண்ணுங்கருத்துமாய் இருந்து படிப்படியாய் பெரிய பணக்கா ரராகி விடுகின்றனர். ஆதியில் ஏழையாய் இருந்து தன் முயற்சி யினாலேயே முன்னுக்கு வந்த பல கோடீஸ்வரர்களை இன்றும் காணலம்.

(தொடரும்)

# வேலைநிறுத்தங்களை கைவிட்டு பேச்சுமூலம் தீர்வு காணுங்கள்

## அரசபொது தாதிமார் சங்கத்தின் தலைவர்

(கொழும்பு)

ஆர்ப்பாட்டங்கள், வேலை நிறுத்தப் போராட்டங்களை விடுத்து பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளுத்தீர்வு காண்பதிலேயே முனைப்புடன் செயற்பட வேண்டுமென் அரச பொது தாதிமார் சங்கத்தின் தலைவர் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெற்ற சர்வதேச தாதியர் தின நிகழ்வில் கலந்து கொண்டு ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட தாதியர் மத்தியில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ,

சுகாதாரத்துறையில் மிகுந்த கவனம் செலுத்தும் அரசாங்கமும் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சனைகளுக்குத் தீர்வு பெற்றுத் தரும் ஜனாதிபதியும் நம்மிடம் உள்ளபோது வீண் ஆர்ப்பாட்டங்களுக்கு இடமளிக்கக் கூடாது எனவும் அவர் தெரிவித்தார்.

புளோரன்ஸ் நைட்டிங்கேல் நினைவு தினம் என்ற போர்வையில் உரிமைகளுக்காக அணி திரள்வோம் என சில சங்கங்கள் தாதியரை உசுப்பிவிடப் பார்க்கின்றன.

நான் ஒருபோதும் போராட்டங்களை விரும்புவனல்ல. பேச்சு மூலம் எதனையும் தீர்க்க முயுயும் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு.

எந்த அரசாங்கமும் தாதியர்களின் பிரச்சினைகள், தேவைகள் தொடர்பில் இந்தளவு கவனம் செலுத்தியதில்லை.

கடந்த காலங்களில் இத்தகைய அணுகு முறைகள்மூலம் பத்திற்கும் மேற்பட்ட தாதியர் வேலைநிறுத்தங்களை எம்மால் தடுக்க முடிந்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

முதலில் அர்ப்பணிப்புடனான சேவை பின்னர் உரிமைகள் என தாதியர்கள் பணிபுரிய வேண்டும் எனவுழ் அவர் கேட்டுக் கொண்டார். (அ-2)

## உடற்பயிற்சிப்போட்டியில் சம்பியன்கள் தெரிவு

கிளிநொச்சிவலயபாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப்போட்டி அண்மையில் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் வெற்றி பெற்று சம்பியனாகிய அணிகளின் விபரத்தை கிளிநொச்சி வலய உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் வி.விஷ்ணு அறிவித்துள்ளார்.

இதில் முதல் 3 இடங்களைப்பெற்ற அணிகளின் விபரம் வருமாறு,

**ஆண்கள்**

கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலயம்,தர்மபுரம் மகா வித்தியாலயம், முழங்காவில் மகா வித்தியாலயம்

**பெண்கள்**

இராமநாதபுரம் மகா வித்தி, கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி, பிரமந்தனாறு மகா வித்தி. (அ-3-266)

# ஆணைக்குழு பரிந்துரைகளை அமுல்படுத்த வேண்டும்

## முஸ்லிம் காங்கிரஸ்

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை முன்மொழிவுகள் அமுல்படுத்தப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் முன்மொழிவுகள் அமுல்படுத்த வேண்டும் என்பதே கட்சியின் நிலைப்பாடு என கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

முன்மொழிவுகள் தொடர்பில் அரசாங்கம் ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சிகளிடம் கருத்து கோரியிருந்தது.

இந்தக்கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் கட்சியின் நிலைப்பாடு ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான உறுப்பினர்கள் பல தடவைகள் கூடி நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை முன்மொழிவுகள் குறித்து ஆராய்ந்து அறிக்கை தயாரித்துள்ளனர்.

முக்கியமான முன்மொழிவுகள் உடனடியாகவும் ஏனையவை கிரமமான முறையிலும் அமுல்படுத்தப்பட வேண்டுமென முஸ்லிம் காங்கிரஸ் கோரியுள்ளது.

(அ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை




## பேரீச்சை

**Botanical Name- Phoenix dactylifera**
**Family- Palmea**
**Engl- Date palm**

உயரமான மரம். கிட்டத்தட்ட 36 மீற்றர் உயரமுடையது. இதனுடைய தண்டுப்பகுதி (Trunk) அதன் பெரிய இலைகளின் காம்புகளில் நிரந்தரமான அடித்தளங்களால் மூடப்பட்டு காணப்படும். இதன் இலைகள் பாலைவனக் காற்றை தாங்கும் சக்தி வாய்ந்தவை. இதன் இலை ஏறக்குறைய 2.7-5.1 மீற்றர் நீளமிருக்கும். சிற்றிலைகள் நீண்டும் குறுகியும் அழுத்தமாகவும் நீள வாக்கில் மடிப்புற்றும் இருக்கின்றன. ஆண், பெண் தாவரங்கள் இதில் உண்டு.

பூக்கள் சிறியனவாகவும் நீள்வட்ட வடிவ பழங்கள் 2.5 -7.5 சென்ரி மீற்றர். மஞ்சள், கலந்த மண்ணிறம் அல்லது சிவப்பு நிறமாக பழுக்கும் போது இருக்கும் விதைகள் நீளவாக்கில் பள்ளத்தை கொண்ட தடிப்பான உருளை வடிவமாக காணப்படும்.



### பரம்பலும் இனவிருத்தியும்

இது வெப்பவலயத்திற்குரிய மரமாகும். ஈரான், இந்தியா போன்ற பிரதேசங்களில் வளர்க்கப்படும். இந்தியாவில் குஜராத், ராஜஸ்தான், பஞ்சாப், உத்தரப்பிரதேசம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் வளர்க்கப்படுகின்றது. விதைகள் மூலமாகவும் துண்டங்கள் மூலமாகவும் இனவிருத்தி செய்யலாம். கிட்டத்தட்ட 10-15 வயதுடைய மரங்களில் இருந்தே பழங்களை அறுவடை செய்யலாம்.

காலநிலை மாறுபாட்டிற்கமைய ஒரு மரத்திலிருந்து பெறப்படும் பழங்களின் எண்ணிக்கை வேறுபடும். கிட்டத்தட்ட ஒரு மரத்திலிருந்து 50-250 கிலோ கிராம் பழங்களை பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்.மாவட்டத்தில் குடத்தனை (வடமராட்சி கிழக்கு பிரதேசம்) ,அராலி போன்ற பிரதேசங் களில் பேரீச்சை மரங்கள் நன்கு வளர்ந்திருப்பதுடன் காய்களையும் கொண்டிருப்பது எமது வெளிக்கள செயற்றிட்டத்தின் மூலம் அவதானிக்கப்பட்டது.

### 100 கிராம் பேரீச்சம் பழத்திலுள்ள சத்துகள்

**100 கிராம் பழத்தில்**

காபோவைதரேற்-75.8g
புரதம்-2.5g
கொழுப்பு-0.4g
நார்ப்பொருள்-3.9g
கல்சியம்-120mg
இரும்புச்சத்து-7.3mg
பொஸ்பரஸ்- 50mg
கரோட்டின்- 26mg
றைபோபிளேவின்-0.02mg
நியாசின்-0.9mg
உயிர்ச்சத்து சி-3mg

### மருத்துவப் பயன்கள்

❖ பேரீச்சங்காயை விதை நீக்கி தேனில் ஊறவைத்து 48 நாட் கள் தினமும் அதிகாலையில் உண்டுவர மாரடைப்பு , வாயுக் கோளாறுகள் குணமாகும்.

❖பேரீச்சங்காய் 50g விதை நீக்கி அதனுடன் வேர்க்கொம்பு, சிறுநாகம்பூ, கசகசா ஒவ்வொன்றும் 25 gஎடுத்து பொடி செய்து 5-10g பொடியை தினமும் 3 வேளை சாப்பிட்டு வந்தால் மூலத்துடன் இரத்தம் போதல் குணமாகும்.

❖விதை நீக்கிய பேரீச்சம்பழத்தை பாலில் வேகவைத்து சாப்பிட (200 மில்லி பாலுக்கு 10 கிராம் பேரீச்சம்பழம்) வாய், மூக்கு ஆகியவற்றின் வழியாக பெருகிடும் குருதி நீங்கும். இருமல், சளி போன்ற நோய்களும் நீங்கும்.

❖ பேரீச்சம் பழத்தை தினமும் உண்டுவர பித்தம் தணியும். மலச்சிக்கலும் குணமாகும்.

❖ ஞாபக சக்தியை அதிகரிப்பதற்கு பேரீச்சம்பழத்தை தேனில் ஊறவைத்து 40 நாட்களும் பாலில் வேகவைத்து 40 நாட்களும் பயன்படுத்த வேண்டும்.

❖ பேரீச்சம் பிஞ்சு துவர்ப்பு சுவையுடையது. குடற்புழுக்களை அகற்றும் தன்மை வாய்ந்தது. பேரீச்சம்பிஞ்சு, வெற்றிலைக் காம்பு, வாய்விடங்கம், மிளகு, இவற்றை ஒரே அளவாக எடுத்து 4 பங்கு நீர் விட்டு 1/4 ஆக ஊறவைத்து 600 மில்லிலீற்றர் அளவு இரவில் அருந்த குடற்புழுக்கள் வெளியேறும்.

❖பேரீச்சம் பிஞ்சு இரத்தத்தை பெருக்கும் தன்மையுடையது. காய்ச்சலுக்கு பேரீச்சம் பிஞ்சு, நிலவேம்பு, கொத்தமல்லி, வெட்டிவேர் ஆகியவற்றை சம அளவாக எடுத்து 4 பங்கு தண்ணீர் விட்டு 1/4 பங்காக வற்றக்காய்ச்சி 30-60 மில்லிலீற்றர் அளவு காலை,மாலை 3-5 நாட்கள் எடுக்கலாம்.

❖ஈரானையும் அதனை சுற்றியுள்ள நாடுகளிலும் பேரீச்சம்பழம் உணவாக கருதப்படுகின்றது. உலர்ந்த நல்ல வகை பழங்களையே இவர்கள் உணவாக உட்கொள்வதுண்டு. இது நல்ல போஷணையை உண்டாக்குவதுடன் இரத்தத்தை விருத்தி செய்யக்கூடிய பழ உணவாகும்.

❖நீரிழிவு நோயாளிகளும் தினமும் வாரத்தில் 3-5 நாட்கள் ஒன்று அல்லது இரண்டு பழங்கள் உண்ணலாம். இதில் உள்ள சீனித்தன்மை சாதாரண குளுக்கோசை விட 1/8 பங்கு குறைவாக அகத்துறிஞ்சப்படும்.



❖ உடலைப் பலப்படுத்துவதற்கும் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்தவும் நரம் புகளை பலப்படுத்தவும் பழங்களை நீள் வாக்கில் பிளந்து விதையை நீக்கி பாதாம் பருப்பை அதற்குள் வைத்து மூ மாவில் தோய்த்து நெய்யில் பொரித்து தினமும் இரவில் 1,2 பொரித்த பழங்கள் வீதம் 48 நாட்கள் தொடர்ச்சியாக உண்டு வர மேற் கூறிய பலனை பெறலாம்.

**திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)**
**சிரேஷ்ட விரிவுரையாளர் சித்த மருத்துவத்துறை**
**யாழ். பல்கலைக்கழகம் கைதடி**

❖மூலச்சூடு மற்றும் அஜீரணத்தை நீக்க மாதுளம்பழச்சாறு 200 மில்லி லீற்றர் அருந்தி பேரீச்சம்பழத்தை தேங்காய்ப் பூவை வறுத்து சேர்த்து இடித்த துவையல் 5-10 கிராம் அருந்திவர உணவுக்கால் வாயத் தொகுதி பலப்படும்.

❖குழந்தைகளில் இருந்து முதியோர் வரை யாவரும் உண்ணக்கூடிய மருத்துவக்குணங்கள் நிறைந்த உயிர்ச்சத்துக்களும் கனிமங்களும் நிறைந்த ஒரு வகை பழ உணவாகும்.

ஆகவே எமது உணவுப் பழக்கவழக்கங்களில் தினமும் பேரீச்சம்பழத்தை உண் பது சிறந்ததாகும்.

அத்துடன் ஜீரணசக்தியையும் ஒழுங்குபடுத்துவதால் உணவுக்கு பின் இதனை உண்பதால் உணவு வகைகளை இலகுவில் ஜீரணித்து கொடுக்கும்.

# குருப் பெயர்ச்சி பலன்கள்

## 17.05.2012 - 28.05.2013




**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

**குரு பார்க்க கோடி நன்மை! சொல்லும் சொற்களை வெல்லும் சொற்களாக மாற்றிக் காட்டும் விருச்சிக இராசி நேயர்களே!**

கனவு பலிதமும் வாக்கு பலிதமும் மிக்கவர் நீங்கள். கண்டிப்பும் உங்களிடம் இருக்கும். கனிவும் உங்களிடம் இருக்கும்.

யாருக்கும் வராத யோசனைகள் உங்களுக்கு வரும். அதன்படி நடந்தால் வெற்றி வாய்ப்பு வீடு தேடி வந்து சேரும். எனவே, முக்கிய புள்ளிகள் கூட சில முடிவெடுக்க உங்களிடம் தான் இரகசிய ஆலோசனைகளைப் பெறுவர்.

உங்கள் இராசிக்கு வாக்கு ஸ்தானாதிபதியாகவே குரு விளங்குவதால்தான் செல்வாக்கும் புகழும் சீக்கிரமே உங்களுக்கு வந்து சேருகிறது. உங்கள் இராசிக்கு 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குரு பகவான் இப்பொழுது ஏழாமிடத்தில் சஞ்சரித்து அதன் இனிய பார்வையை உங்கள் இராசியில் பதிக்கப்போகிறார்.


அப்புறமென்ன? குரு பார்க்க கோடி நன்மையல்லவா. நீங்கள் தொட்ட காரியங்கள் எல்லாம் வெற்றி கிடைக்கும். இனி தினமும் விருந்துகளும் விழாக்களும் உங்கள் வீடு தேடி வந்து கொண்டே இருக்கும்.

குருவின் பார்வை பலத்தால் உங்கள் இராசி புனிதமடைவதோடு 3, 11 ஆகிய இடங்களும் புனிதமடைவதால் எண்ணற்ற நல்ல மாற்றங்கள் இல்லம் தேடி வரபோகிறது. வண்ணமலர் மாலை சூட்டி தெய்வங்களை வழிபடும் நீங்கள், முல்லைப் பூ மாலையை குருவிற்கு அணிவித்தால் எல்லையில்லாத நற்பலன்கள் கிடைக்கும். மஞ்சள் வஸ்திரம் அணிவித்தால் நெஞ்சம் மகிழும் வாழ்க்கை கிட்டும். சுண்டல் நெய்வேத்தியம் கொடுத்தால் அண்டி வந்தோரின் ஆதரவு பெருகும்.

குறிப்பாக, இராகு திசை, கேது திசை, இராகு புத்தி, கேது புத்தி, சுக்கிர திசை, சுக்கிர புத்தி நடப்பவர்கள் சிறப்பு பரிகாரங்களை மேற்கொண்டால் செல்வநிலை உயர்ந்து செல்வாக்கு மேலோங்கும். ஜென்மத்தில் இராகு இருப்பதால் சர்ப்ப சாந்தியையும் முறையாகச் செய்தால் சந்தோஷங்களை நாளும் சந்திக்கலாம்.

**குருப் பெயர்ச்சி**

இத்தனை மகத்துவம் வாய்ந்த



உங்கள் இராசிக்கு இதுவரை 6 இல் சஞ்சரித்து வந்த குருபகவான் 17-05-2012 முதல் 7 ஆம் இடத்தில் சஞ்சரித்து இனிய மாற்றங்களை வழங்கப் போகிறார். அதன் பார்வை பதியும் இடங்களையெல்லாம் புனிதப்படுத்துவார். ஆரோக்கியத்தை சீராக்கி ஆனந்தப்படுத்துவார். சீரும் சிறப்பும் சொல்வாக்கும் வழங்குவார். காரிய வெற்றிக்கு உறுதுணையாக இருப்பார்.

குறிப்பாக உங்கள் இராசியைப் பார்க்கும் குருவை முன்னதாகவே நீங்கள் வரவேற்க வேண்டும். வரும் முன்னரே வரவேற்றுக் கொண்டாடி வழிபட்டால் தரும் பலன்கள் ஏராளமாக இருக்கும். குறிப்பாக அவிட்ட நட்சத்திரமும் ஞாயிற்றுக்கிழமையும் இணையும் நாளில் குரு பரிகாரம் செய்வதும், குரு ஹோமங்களில் கலந்து கொள்வதன் மூலமும் எண்ணங்கள் எளிதில் நிறைவேறும்.

**சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குரு**

உங்கள் இராசிக்கு 2, 5 க்கு அதிபதியான குருபகவான் இப்பொழுது சப்தம் ஸ்தானத்தில் சஞ்சரிக்கப்போகிறார். குருவின் நேர்பார்வை உங்கள் இராசியில் பதியப்போகிறது.

எனவே, மணவாழ்க்கை மகிழ்ச்சியாக அமையும். மங்கல நிகழ்ச்சிகள் இல்லத்தில் நடைபெறும். பணப் புழக்கம் அதிகரிக்கும். பகல் இரவாக பாடுபட்டதற்கு ஏற்ற பலனும் வந்து சேரும். மனதிற்கு இனியவர்களை நண்பர்களாகத் தேர்ந்தெடுத்து மதிப்பு மிக்க வாழ்க்கையை அமைத்துக் கொள்வீர்கள்.

குரு இருக்கும் இடத்தைக் காட்டிலும் பார்க்கும் இடத்திற்கு இன்னும் பலன் அதிகம். சுக்கிரன் வீட்டில் இருந்து குரு பார்ப்பதால் சுகங்களையும் சந்தோஷங்களையும் மாறி மாறி வழங்கப் போகிறார். தொழில் வளர்ச்சி ஆச்சரியப்படும் விதத்தில் அமையும்.

ஏழில் குருதான் வந்தால்
எதிர்காலம் சிறப்பாய் மாறும்!
வாழ்விலே வசந்தம் சேரும்!
வருமானம் திருப்தியாகும்!
சூழ்ந்திடும் பகை விலகும்!
தொடுத்திடும் மாலை சேரும்!
கோள்களில் குருவை நீங்கள்
கும்பிட்டால் பலன் கிடைக்கும்!

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

எனவே, எதிர்காலம் சிறப்படைய தீட்டிய திட்டங்கள் நிறைவேறும். திறமைமிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து உதவிக்கரம் நீட்டுவர். வரன்கள் வாயிற் கதவைத் தட்டும். மணமாலை சூடுவதற்கான வாய்ப்புக்கள் வந்து சேரும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். வீட்டுத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும்.

உள்ளத்தில் ஒன்றும் உதட்டில் ஒன்றும் வைத்துப் பேசியவர்கள் உண்மையை உணர்ந்து உங்களுடன் இணைந்து செயற்படுவர். பணம் பல வழிகளில் வந்து பையை நிரப்பும்.

வருமானம் திருப்தி தரும். இந்த நேரத்தில் வாங்கல், கொடுக்கல்களையெல்லாம் ஒழுங்கு செய்து கொள்வீர்கள். கட்டிடம் கட்டுவது முதல் கல்விக்காக எடுத்த முயற்சிவரை கைகூடும்.

ஏழாமிடம் என்பது விவாக ஸ்தானம், களத்திர ஸ்தானம் மட்டுமல்ல, கவர்ச்சியாகப் பேசும் ஆற்றல், வாழ்க்கை அமைப்பு, இராஜ விருது பெறும் சூழ்நிலை, சமுதாய அந்தஸ்து, பிள்ளைகள் சொற்படி கேட்டல், வாகன யோகம், பயணத்தால் பலன், வெளிநாட்டு யோகம், ஆடை, ஆபரண சேர்க்கை, தொடை மற்றும் அடி வயிற்று பகுதி பற்றிய தகவல், வியாபார சக்தி, சுகபோகங்கள் அனைத்தையும் விளக்கும் இடமாகவே அது அமைகிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது வாழக்கை வளமாக அமைய இந்த குருப்பெயர்ச்சிதான் மூலகாரணமாக இருக்கிறது. இனத்தார் பகை மாறும்.

ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். அத்தியாவசியப்பொருட்களையும், ஆடம்பரப் பொருட்களையும் வாங்கிச் சேர்ப்பீர்கள். வாகனம் வாங்கும் முயற்சியும் கைகூடும். வளர்ச்சிப் பாதை சிறப்பாக அமையும். தூர தேசப் பயணங்களால் தொகை வந்து சேரும். செயற்திறன் மிக்கவர்கள் உங்களுக்கு வெற்றி வாய்ப்புகளை வரவழைத்துக் கொடுப்பார். அடிக்கடி உடல்நிலை தொல்லைகளை சந்தித்து வந்த நீங்கள் இனி மருந்து சாப்பிடாமலேயே மகிழ்ச்சியோடு வாழக்கையை அமைத்துக் கொள்ள போகிறீர்கள். விருதுகளும், வெற்றி வாய்ப்புகளும் உங்களைத் தேடி வரும். இந்த நேரத்தில் அரசியல் ஈடுபாடு கொண்ட உங்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரும்.

**குருவின் பார்வை பலன்கள்**

## தொட்ட காரியங்களில் எல்லாம் வெற்றி கிட்டும் விழாக்களாலும் விருந்துகளாலும் வீடு மகிழும்

குருவின் பார்வை உங்கள் இராசிக்கு 3, 11 ஆகிய இடங்களில் பதிவதோடு, உங்கள் இராசியிலும் நேரடியாகப் பதிகிறது. எனவே, எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். இறையருளோடு எடுத்த முயற்சிகளை முடித்து வெற்றி காண்பீர்கள். உடன்பிறப்புகள் முதல் உடன் இருப்பவர்கள் வரை உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். கடன்சுமை குறைந்து கவலைகள் தீரும். பணப்பற்றாக்குறை அகலும்.

புதிய தொழில் தொடங்கும் திட்டங்கள் கைகூடும். புதிய கூட்டாளிகள் வந்திணைவர். பழைய பணியாளர்களை நீக்கிவிட்டு புதியவர்களைத் தேர்நதெடுத்து வாழ்க்கை பாதையை சீராக்கிக் கொள்வீர்கள்.

பிள்ளைகள் நலனில் அதிக அக்கறை காட்டி அவர்களுக்கான கடமையைச் செய்து முடிப்பீர்கள். நகை சேர்க்கைகளும், பொருள் சேர்க்கைகளும் நாளுக்கு நாள் நடைபெற்று மகிழ்ச்சி பெருகும்.

நல்லவர்களின் சந்திப்பால் நலம் காண்பீர்கள். கலைத்துறை, பத்திரிகைத் துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் வந்து அலைமோதும். பூர்வீக சொத்துக்களில் இருந்த தகராறுகள் அகலும்.

புதிய சொத்துக்களை வாங்கி வீடு கட்டும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். இடம், பூமியால் இலாபம் உண்டு. ஆடை, ஆபரண சேர்க்கைகளும் அதிகரிக்கும் விதத்தில் இந்த குருப்பெயர்ச்சி உங்கள் கனவுகளையெல்லாம் நனவாக்கப் போகிறது.

**வாட்டத்தைப் போக்குமா வக்ர குரு**

இடப இராசியில் சஞ்சரிக்கும் குரு 12-10-2012 முதல் 06-02-2013 வரை வக்ர கதியில் இயங்குகிறார். உங்கள் இராசியைப் பொறுத்தவரை 2, 5 க்கு அதிபதியாக விளங்கும் குரு வக்ர கதியில் இயங்கும் நேரத்தில் வரவைக்காட்டிலும் செலவு கூடும். குடும்பச்சுமை அதிகரிக்கும். நண்பர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் மீண்டும் உங்களிடமே வந்து சேரலாம்.

ஆடம்பர பொருட்களை வாங்குவதில் ஆசை உண்டாகும். வீண் விரயங்களைத் தவிர்க்க சுபவிரயங்களை மேற்கொள்வது நல்லது. பழைய வாகனங்களால் பழுதுச் செலவு ஏற்படும். புதிய வாகனங்கள் வாங்கும் எண்ணம் நிறைவேறும். குழந்தைகளின் எதிர்கால நலன்கருதி எடுக்கும் முயற்சிகளுக்கு மாற்றினத் தவர்கள் ஒத்துழைப்புச் செய்வர். இக்காலத்தில் மனித, தெய்வ வழிபாடும், முன்னோர் வழிபாடும், குரு வழிபாடும் மகத்துவங்களை வரவழைத்துக் கொடுக்கும்.

இந்தக் குருப்பெயர்ச்சியால் இல்லத்தில் நல்ல காரியங்கள் நடைபெறும். மாலை வாய்ப்புக்களும் மழலை பேறுகளும் கிட்டும். வேலைக்கு ஏற்பாடு செய்தவர்களுக்கு வியக்கும் செய்தி வந்து சேரும். கணவன்- மனைவிக்குள் கனிவுகூடும். பாசம் பொங்கும். பொருளாதாரநிலை முன்னேற்றம் தரும். பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். உங்கள் பெயரிலேயே கட்டிடம் கட்டுவது, சொத்துக்கள் வாங்குவது, தொழில் தொடங்குவது போன்றவை ஏற்படும். தென்முகக் கடவுள் வழிபாடும், முறையான சர்ப்ப சாந்தியும் முன்னேற்றம் தரும்.

**வளர்ச்சி தரும் வழிபாடு**

ஏழாம் இடத்து குருவால் இனிய வாழ்க்கை அமைய பவுர்ணமி தோறும் கிரிவலம் வாருங்கள்.

விநாயகர், முருகன், பார்வதி,

**சிவல்புரி சிங்காரம்**

நந்தி, குரு, தெட்சிணாமூர்த்தி அனைத்து வழிபாடும் மேற்கொள்ளுங்கள். அற்புத பலன்களை வரவழைத்துக் கொள்ளுங்கள்.

(தொடரும்)

# உருத்திராட்சம் அணிவது பற்றி...

இந்துக்களின் சைவம், வைணவம் என்று கூறுவது போல் கிரகங்களிலும் சைவம், வைணவம் என்றெல்லாம் உண்டு. சூரியன், சனி, செவ்வாய், குரு ஆகியவை சிவகோத்திரம். சனியை இரண்டு பக்கத்திலும் வைக்கலாம். செவ்வாய் ,குரு, சூரியன் ஆகிய மூன்றும் சைவக்கிரகங்கள், சைவக்கடவுள்கள் ஆகும். செவ்வாய்-முருகன், குரு-தட்சிணாமூர்த்தி, சூரியன் சிவனுக்குரியவர்கள்.

இந்த ஆதிக்கம் உடையவர்கள் எல்லாம் உருத்திராட்சம் அணிந்தால் பிரமாண்டமாக முன்னுக்கு வருவார்கள். அதிலேயும் உருத்திராட்சத்திலும் ஒன்று முதல் பல முகங்கள்கொண்ட உருத்திராட்சங்கள் உள்ளன. ஆனால் எல்லா முக உருத்திராட்சங்களும் பலன் அளிக்கக்கூடிய உருத்திராட்சங்களே. அதில் எந்த மாறுபாடும் இல்லை.

ஒவ்வொரு முகத்திற்கும் ஏற்றபடி அதில் மருத்துவ குணங்களும் ஆன்மீக குணங்களும் உள்ளன. பல்வேறு நூல்கள் இதைப்பற்றிக் கூறுகின்றன. உருத்திராட்சத்தை எப்படி வேண்டுமானாலும் அணியலாம்.




ஆனால் உருத்திராட்சத்தை தனியாக அணியாமல் ஏதாவது ஒரு உலோகத்துடன் சேர்ந்து அணிந்தால் அது இல்லற வாழ்க்கையில் இருப்பவர்களுக்கு நல்லது.


அதற்காகத்தான் உருத்திராட்சத்தின் இரு பக்கத்திலும் பூன் போன்று செய்து அதனை நூலில் கட்டித் தொங்க விடுகிறார்கள்.

ஏழரைச்சனி, அட்டமத்துச்சனி எல்லாம் வந்தாலே பலர்தானே உருத்திராட்சத்தை விரும்பி அணிவதைப் பார்த்திருக்கிறேன். ஏழரைச்சனி, அட்டமத்துச்சனி வந்தால் பழைமையானவற்றை விரும்புவார்கள். உருத்திராட்சம், யானைத்தந்தம், யானைமுடி மோதிரம் போன்றவற்றை அணிவார்கள்.

ஏனையவர்களிடமிருந்து தன்னை வித்தியாசப்படுத்திக் காட்டுவதற்காக அல்லது அந்தப் பொருளின் மீது ஒரு நம்பிக்கையினால் அவ்வாறு செய்வார்கள்.

சனி திசை நடக்கும் போது தன்னம்பிக்கையைவிட ஏனைய பொருட்களின்மீதுதான் நம்பிக்கை அதிகமாக இருக்கும். அதை அணிந்துகொண்டால் அதனால் நமக்கு தன்மை அளிக்கும் என்றெல்லாம் நினைப்பார்கள்.


சனி இராசி உள்ளவர்களும் உருத்திராட்சத்தை விரும்பி அணிவார்கள். மகரம், கும்ப இராசிக்காரர்கள் உருத்திராட்சத்தை விரும்புவார்கள். உருத்திராட்சத்தை அணியலாம். அதனால் நல்ல பலன்கள்தான் கிட்டும்.



புதனுடைய அம்சமாக அதாவது சிவனுடைய அம்சமாக கருதப்படுவது உருத்திராட்சம். சிவனின் அங்கத்திலிருந்து விழக்கூடிய வேர்வை என்றெல்லாம் சில புராணங்கள் சொல்கின்றன.

உருத்திராட்சத்திற்கு இயல்பாகவே மருத்துவக்குணங்கள் நிறைய உண்டு. உருத்திராட்சத்தை யார்வேண்டுமானாலும் அணியலாம். சிலரெல்லாம் போகம் செய்யும் போது இருக்கக்கூடாது என்றெல்லாம் சொல்வார்கள். அப்படியெல்லாம் ஒன்றும் கிடையாது. போகிக்கும்போது கூட இருக்கலாம். தீட்டு என்பது கிடையாது.

ஆனால் உருத்திராட்சத்தைத் தங்கம் அல்லது வெள்ளியில் கட்டி அணியும் போது மந்ரா உபதேசம்



பெற்று குருநாதர் கையில் இருந்து வாங்கி அணியும் போதெல்லாம் மிகவும் நேமமிஷ்டையுடன் இருக்க வேண் டும். அதாவது தீட்சையாக தரும் உருத்திராட்சத்தை பெற்றுக்கொண்டு தவறான செயல்கள், பேச்சு வார்த்தைகளில் ஈடுபடக்கூடாது.

ஆண், பெண் இருபாலாருமே உருத்திராட்சத்தை அணியலாம். பெண்களுக்கு இருக்கக்கூடிய இயல்பான இடர்பாடான நாட்களில்கூட அணிந்திருக்கலாம். அது ஒன்றும் குரோதம் கிடையாது. வட இந்தியப் பெண்கள் சிலர் தலையில் போடும் கிளிப்புகளில் கூடஉருத்திராட்சத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்தக்கூடிய சக்தியும் மன அழுத்தத்தைக் குறைக்கும் சக்தியும் உருத்திராட்சத்திற்கு உண்டு. பக்கவாதத்திற்கு முந்தைய கால கட்டத்தில் உருத்திராட்சை மாலையை உடம்பு முழுவதும் தேய்த்துவிடும் போது அது சரியாகிறது.

இன்றைக்கும் தரமான பழைமைவாய்ந்த சித்த வைத்தியர்கள் கால் முடக்கம், கைமுடக்கம் இதற்கெல்லாம் மருந்தும் கொடுத்து உருத்திராட்சை மாலையால் கை, கால்களை உருவி மருத்துவம் அளிக்கும் வழக்கமெல்லாம் இன்றைக்கும் இருக்கிறது.

சீரான இரத்த ஓட்டங்கள், கால் மரத்துப் போகாமல் இருப்பதற்கு போன்றவற்றிற்கும் உருத்திராட்சம் பயன்படும். உருத்திராட்சத்தின் சிறு துளியை இழைத்து உள்ளுக்குச் சாப்பிடும் போது நோய் எதிர்ப்புச் சக்தியெல்லாம் அதிகரிக்கிறது. உடலிற்கு ஒரு மினுமினுப்பைக் கொடுக்கும். இதுபோன்ற மருத்துவக்குணங் கள் உருத்திராட்சத்திற்கு உண்டு. அதனால் யார் வேண்டுமானாலும் அணியலாம்.

# வேலைவாய்ப்புப் பெறுவது குறித்து பல்வேறு நாடுகளுடன் பேச்சுவார்த்தை

## அமைச்சர் டிலான் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையர்களுக்கு தொடர்ந்தும் அதிக வேலைவாய்ப்புக்களை வழங்க இத்தாலி, ஈராக், குவைத் மற்றும் தென்கொரிய அரசாங்கங்கள் இணக்கம் தெரிவித்துள்ளன வென வெளிநாட்டு வேலைவாய்ப்பு நலனோம்பு அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

இதற்கென மேற்படி நாடுகளுடன் செய்து கொள்ளப்பட்டிருக்கும் ஒப்பந்தங்கள் நீக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை இலங்கை ஆண்களுக்கென அதிக வேலைவாய்ப்பினை பெற்றுக்கொள்ளவும் அதிக சம்பளத்துடன் கூடிய தொழில்களுக்கு இலங்கையர்களை அமர்த்துவது தொடர்பிலும் இந்த நாடுகளின் உயர்மட்ட அதிகாரிகளுடன் பேச்சு நடத்த விருப்பதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.



19 வயது பெண்களுக்கான மாவட்ட மட்ட வலைப்பந்தாட்ட போட்டியில் 3 ஆம் இடத்தைப் பெற்ற இராமநாதன் பெண்கள் கல்லூரியின் மாணவிகளுடன் அதிபர், உடற்கல்வி ஆசிரியர், பிரதி அதிபர் ஆகியோர் நிற்பதை படத்தில் காணலாம். (படம்:- என்.குமார்)

வெளிநாடுகளில் தொழில்புரியும் இலங்கையர்களின் நலன்புரியினை உறுதிப்படுத்தும் நோக்கில் அமைச்சர் டிலான் பெரேரா தலைமையில் ஜோர்தான் நாட்டின் அம்மான் நகரில் இருநாள் உத்தியோகபூர்வ மாநாடு நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இம்மாநாட்டில் அபுதாபி, ஓமான், குவைத், பஹ்ரைன், மலேசியா, சிங்கப்பூர், சவுதி அரேபியா, கட்டார், லெபனான், சைப்பிரஸ் மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளின் இலங்கைத்தூதுவர்கள், நலன்புரி நிலைய அதிகாரிகள், ஐ.எல்.ஓ மற்றும் ஐ.ஓ.எம் ஆகிய சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டுள்ளனர்.

பொதுவாக வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கென இலங்கையிலிருந்து பெண்களே அதிகமாக வேலைக்கமர்த்தப்படுகின்றனர்.

குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு பெண்களே அதிகளவில் செல்கின்றனர். இந்நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தி ஆண்களுக்கும் வெளிநாடுகளில் அதிக வேலைவாய்ப்பினைபெற்றுக்கொடுக்க வேண்டுமென்பதே மஹிந்த சிந்தனையின் கொள்கையாகும்.

இதேவேளை வீட்டுப் பணிப்பெண் தொழிலுக்கும் மேலதிகமாக அதிக சம்பளத்துடன் கூடிய தாதியர், தாதி உதவியாளர்கள், உள்ளிட்ட பல்வேறு வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வது தொடர்பிலும் அந்நாட்டின் உயர் மட்ட அதிகாரிகளுடன் பேச்சு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

வருடந்தோறும் எமக்கு கிடைக்கும் வெளிநாட்டு அந்நிய செலாவணியின் தொகை அதிகரித்து செல்கின்றது.

2011 ஆம் ஆண்டில் 5.1 பில்லியன் டொலர் எமக்கு அந்நிய செலாவணியாக கிடைத்துள்ளது.

உலக நாடுகளுக்கு வருடந்தோறும் 450 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அந்நிய செலாவணி கிடைக்கின்றது.

இதில் 5 பில்லியனை இலங்கை தனக்கு உரித்தாக்கியுள்ளது. பிலிப்பைன்ஸ் வருடந்தோறும் 19 பில்லியன் அந்நிய செலாவணியை பெறுவது குறிப்பிடத்தக்கதெனவும் அமைச்சர் கூறினார். (அ-2)

# அரசாங்கத்தின் உண்மையான முகத்தை புரிந்து கொள்ளுங்கள்

## விக்ரமபாகு தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் பிரதேச சபை தேர்தல்களை நடத்த முடியுமானால் ஏன் மாகாண சபைத் தேர்தல்களை நடத்த முடியாதென கேள்வியெழுப்பும் நவசமசமாஜக் கட்சி கண்ணிவெடிக் கதைகள் எல்லாம் மக்களை ஏமாற்றுவதற்காக சோடிக்கப்பட்ட கற்பனை கதைகளாகுமென்றும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மேலும் கருத்து தெரிவிக்கையில்,

உள்நாட்டில் அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையை மக்கள் இழந்துள்ளதோடு நாளுக்கு நாள் மக்கள் எதிர்ப்பு அதிகரித்து வருகிறது. வாழ்க்கை செலவு அதிகரிப்பால் மக்கள் பாரிய நெருக்கடிகளை சந்தித்துள்ளனர். அதேபோன்று சர்வதேச ரீதியிலும் அரசாங்கத்தின் மீதான நெருக்கடிகள் அதிகரித்துள்ளன.

எனவே, உள்நாட்டு மக்களின் அரச எதிர்ப்பலைகளை திசை திருப்பவும் அரசியல் பலத்துடன் மக்கள் ஆதரவுடன் அரசாங்கம் இருப்பதாக சர்வதேசத்திற்கு காட்டிக் கொள்வதற்காகவே கிழக்கு, வடமத்திய, சப்ரகமுவ மாகாண சபைகளை கலைத்து அரசாங்கம் அவசர அவசரமாக தேர்தல்களை நடத்தவுள்ளது.

வடபகுதி மக்களுக்கு இன்று ஜனநாயகம் சிவில் நிர்வாகம் தேவைப்படுகிறது. எனவே, அங்கு தான்



மாகாண சபை தேர்தலை நடத்த வேண்டும். ஆனால், கண்ணிவெடிகள் அகற்றப்பட வேண்டுமென சோடிக்கப்பட்ட கதையை சொல்லி தேர்தல் நடத்தப்படாமைக்கு கதை சொல்கிறது.

அப்படியானால் எப்படி அங்கு பிரதேச சபை தேர்தல்கள் நடத்தப்பட்டது என்பதை சிந்திக்க வேண்டும். எனவே, மக்கள் சிந்திக்க வேண்டும். அரசாங்கத்தின் உண்மையான முகத்தை புரிந்து கொண்டு தேர்தல்களில் எதிர்த்து வாக்களித்தால் தகுந்ததொரு அரசியல் பாடத்தை புகட்ட முடியும் என்றார். (அ-2)

# பிரிட்டன் விசா நிராகரிக்கப்பட்டால் மீண்டும் விண்ணப்பிக்க முயலுங்கள்!

## பிரி. உயர்ஸ்தானிகரகம் அறிவிப்பு

பிரித்தானியாவில் உள்ள தமது உறவுகளை குறுகிய கால அடிப்படையில் பார்க்க விரும்பி அங்கு வரவிரும்புவோரின் விசா நிராகரிக்கப்பட்டால் அவர்கள் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

தமது விசாக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக மேன்முறையீடு செய்வதால் ஏற்படும் காலதாமதம் மற்றும் செலவீனம் என்பவற்றை கருத்திற் கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக பிரித்தானிய உயர்ஸ்தானிகரகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்துரைத்துள்ள பிரித்தானிய குடிவரவுத் துறை அமைச்சர் டேமியன் கிரீன் எதிர்வரும் காலங்களில் விசாக்களுக்காக மேன்முறையீடு செய்வதன் காரணமாக பிரித்தானியாவில் உள்ள தமது உறவுகளை பார்க்க விரும்புபவர்கள் தமது மேன்முறையீட்டுக்கான முழு உரிமைகளையும் இழக்க நேரிடும் என்று எச்சரித்துள்ளார்.

எனினும் விசா நிராகரிக்கப்படுவோருக்கான மேன்முறையீட்டு வாய்ப்பு மனித உரிமைகள் மற்றும் இனப்புறக்கணிப்பு என்ற அடிப்படையில் வரையறைக்குட்பட்ட வகையில் நடைமுறையில் இருக்கும் என்றும் கிரீன் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, இதனை தடுக்கும் முகமாகவே விசா நிராகரிக்கப்படுவோர் மீண்டும் புதிய விண்ணப்பத்தை சமர்ப்பிக்குமாறு கோரப்படுவதாக பிரித்தானிய குடிவரவு அமைச்சர் தெரிவித்துள்ளார். 2011 ஆம் ஆண்டில் மாத்திரம் விசா மேன்முறையீடுகள் என்ற வகையில் 50 ஆயிரம் விண்ணங்கள் கிடைத்தன.

இவற்றை பார்வையிட்டு பரிசீலனை செய்வதற்காக வருடம் ஒன்றுக்கு பிரித்தானிய அரசாங்கத்துக்கு 29 மில்லியன் பவுண்கள் செலவாவதாக குடிவரவு அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# மனநோயாளியை அடையாளம் காட்டுங்கள்



தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையின் மனநோயாளர் விடுதியில் சுன்னாகம் பொலிஸாரினால் அனுமதிக்கப்பட்டுள்ளார் என யாழ். சுகாதார சேவைகள் பணிமனை பிராந்திய பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். இவர் பற்றிய பெயர் விபரங்களோ குடும்ப விபரங்களோ இது வரை அறியப்படவில்லை. இவரைப் பற்றிய விபரங்கள் ஏதாவது தெரிந்தவர்கள் இருப்பின் அவ்விபரங்களை தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகரிடம் 021 321 2614 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு வழங்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-7)

# புலிகளின் செயற்பாடுகளுக்கு இடமளிக்கப்படமாட்டாது


## பிலிப்பைன்ஸ் உதவி வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு

தமது நாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் இருக்குமாயின் அவற்றை தடுக்க தமது நாடு தயாராகவுள்ளதாக பிலிப்பைன்ஸ் தெரிவித்துள்ளது.

பிலிப்பைன்ஸ் உதவி வெளியுறவு அமைச்சர் ஏர்லின்டா எப் பாஸிலியோவை நேற்று முன்தினம் கொழும்பில் இலங்கையின் வெளியுறவு பிரதியமைச்சர் சந்தித்த போது இந்த உறுதிமொழி வழங்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் புலம்பெயர்ந்த தமிழர்கள் பிலிப்பைன்சில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை ஊக்குவிக்க முனைகின்றனர். எனினும் அதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

இந்த நிலையில் இரண்டு நாடுகளுக்கும் இடையில் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது தொடர்பாக இரண்டு பிரதியமைச்சர்களும் கலந்துரையாடினர். (அ-2)



இலங்கை வங்கி கோப்பாய்க் கிளையில் 18+ கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர் ஒருவருக்கு திருமணப் பரிசாக தங்க நாணயத்தினை கிளை முகாமையாளர் மு.தவபாலன் வழங்குவதைப் படத்தில் காணலாம்.




★ *1667*- யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக வாக்கிய பஞ்சாங்கம் இராமலிங்க முனிவரால் வெளியிடப்பட்டது.

★ *1811*- கூட்டுப் படைகள் (ஸ்பெயின், போர்த்துக்கல் மற்றும் பிரித்தானியா) பிரெஞ்சுப் படைகளை ஆல்புவேரா என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் தோற்கடித்தன.

★ *1920*- ரோமில் ஜோன் ஒஃப் ஆர்க் பாப்பரசர் 15 ஆம் பெனடிக்ட்டினால் புனிதப்படுத்தப்பட்டார்.

★ *1932*- மும்பையில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே இடம்பெற்ற கலவரத்தில் ஆயிரக் கணக்கானோர் உயிரிழந்தனர்.

★ *1960*- கலிபோர்னியாவில் ஹியூஸ் ஆய்வு கூடத்தில் தியொடர் மாய்மன் முதலாவது லேசர் ஒளிக்கதிரை இயக்கினார்.

★ *1966*- சீனாவின் கலாசாரப் புரட்சியின் ஆரம்பத்தை சீனக் கம்யூனிஸ்ட் கட்சி அறிவித்தது.

★ *1967*- ஜெருசலேம் நகரம் இஸ்ரேலின் வசம் வந்தது.

★ *1969*- சோவியத்தின் வெனேரா 5 விண்கலம் வீனஸ் கோளில் இறங்கியது.

★ *1975*- பொதுமக்கள் வாக்கெடுப்பின் அடிப்படையில் சிக்கிம் இந்தியாவின் ஒரு மாநிலமாக இணைக்கப்பட்டது.

★ *1975*- ஜுன்கோ டபெய் எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதற் பெண் ஆனார்.

★ *1992*- எண்டெவர் விண்ணோடம் தனது முதலாவது பயணத்தை முடித்து பூமிக்குத் திரும்பியது.

★ *2004*- 30 களில் கம்யூனிஸ்டுகளினால் படுகொலை செய்யப்பட்ட ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்களை நினைவுகூர உக்ரேனின் தலைநகர் கீவுக்கு அருகில் உள்ள பீக்கீவ்னியாக் காட்டில் பல்லாயிரக்கணக்கானோர் கூடினர்.

★ *2006*- தமிழ் நாட்டில் அனைத்து சாதியினரும் கோயில்களில் அர்ச்சகரசாகத் தகுதி உடையவராக அறிவிக்க மு.கருணாநிதி தலைமையிலான தமிழக அமைச்சரவையில் முடிவெடுக்கப்பட்டது.

★ *2006*- நியூசிலாந்திற்கருகில் 7.4 ரிக்டர் அளவு நிலநடுக்கம் ஏற்பட்டது.

**பிறப்பு**

★ *1931*- நட்வர் சிங், இந்திய அரசியல்வாதி

**இறப்புக்கள்**

★ *1830*- ஜோசப் ஃபூரியே, பிரெஞ்சு கணிதவியலாளரும் இயற்பியலாளரும் (பி. 1768)

★ *1947*- பிரடெரிக் ஹொப்கின்ஸ், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1861)

**சிறப்பு நாள்**

★ மலேசியா ஆசிரியர் தினம்

# போர் முடிந்து மூன்று ஆண்டுகளாகியும் நாடு பொருளாதாரத்தில் முன்னேறவில்லை

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் முடிவுக்கு வந்த விடுதலைப்புலிகளுக்கு எதிரான போர், தமிழ்மக்களைப் பொறுத்தவரை மிகப் பெரிய அழிவுகளையும் மீள முடியாத துயரங்களையும் விட்டுச் சென்றுள்ளது.

மூன்று தசாப்தங்களாக நீடித்த போர், மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் முடிவடைந்தது. விடுதலைப்புலிகளை தோற்கடித்து- புலிகளின் பிடியில் சிக்கியிருந்த தமிழ்மக்களை விடுவித்து- நாட்டில் அமைதியைக் கொண்டு வந்துவிட்டதாக அரசாங்கம் அறிவித்து மூன்றாண்டுகள் ஓடி மறைந்துவிட்டன.

போரின்போதும், போர் முடிவுக்கு வந்தபோதும்- நாட்டை சிங்கப்பூராக மாற்றுவோம் என் பது உள்ளிட்ட ஏராளமான வாக்குறுதிகளை அரசாங்கம் அள்ளி வீசியிருந்தது.

இவ்வாறு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளின் நிலை இப்போது எப்படியிருக்கிறது என்று பார்க்க வேண்டியது முக்கியம்.

போர் முடிவுக்கு வந்த இந்த மூன்றாண்டுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களும் ஏமாற்றங்களும் ஆராய்ந்து பார்க்கப்பட வேண்டியவை அரசியல் ரீதியாக, சமூக ரீதியாக போருக்குப்பின்னர் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து ஆராய்வது எந்தளவிற்கு முக்கியமோ அதே அளவுக்கு கொருளாதார ரீதியான தாக்கம் குறித்தும் ஆராய வேண்டியதும் முக்கியமானது.

ஏனென்றால், மூன்று தசாப்த காலப்போரும் பொருளாதாரமும் பின்னிப்பிணைந்து போயிருந்தது. போரை முடிவுக்குக் கொண்டு வராமல் பொருளாதாரத்தை உயர்த்த முடியாது என்பது தீர்க்கமாகத் தெரிந்திருந்தது. அந்தளவுக்கு பொருளாதார ரீதியாக மிகப்பெரிய இழப்புகளை போர் ஏற்படுத்தியிருந்தது.

போர் முடிவுக்கு வந்துவிட்டால் அதற்காக செலவிடப்படும் நிதியை அபிவிருத்திக்கு ஒதுக்கலாம்; நாட்டை சிங்கப்பூராக்கி விடலாம் என்று கனவுகளில் மிதக்கவைக்க ஆசை காட்டியது அரசாங்கம்.

இப்பொழுது போரில்லை. அது முடிந்து மூன்றாண்டுகளாகிவிட்டன. ஆனால், சிங்கப்பூருக்கு அருகில் கூட போகவில்லை நாடு. போரின் முடிவு, பொருளாதார ரீதியாக நாட்டில்பெரிய மாற்றங்கள் எதையும் ஏற்படுத்திவிடவில்லை.

போர்முடிந்ததும் ஏராளமாக வெளிநாட்டு உதவிகள் குவிந்தன. அவற்றைக்கொண்டு அரசாங்கம் பெரியளவில்நாட்டைக் கட்டியெழுப்பும் வாய்ப்புகள் இருந்தன. அரசாங்கம் கடைப்பிடித்த கடும்போக்குடனான அணுகுமுறை உதவ முன் வந்த நாடுகளை பின்வாங்கச் செய்துவிட்டது.

அரசாங்கத்தின் போக்கினால் போர் முடிந்ததும் உதவ முன்வந்த பல நாடுகள் வெறும் வாக்குறுதி யோடு நின்று கொண்டன. அதைவிட தொடர்ச்சியாக வெளிநாட்டு உதவிகள் கிடைப்பதும் நின்றுபோய் விட்டது.

முன்னரெல்லாம் உதவித்திட்டங்கள், நிதிஉதவிகள் பற்றிய செய்தி கள் அடிக்கடி ஊடகங்களில் வரும். இப்பொழுது சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து பெறும் கடனுக்காக நடத்தப்படும் இழுபறி யுத்தம் பற்றியே செய்திகள் வருகின்றன.

கட்டம் கட்டமாகப் பெறும் கடனுக்கு அனுமதி கிடைத்தால் அதுவே மிகப்பெரிய செய்தியாக மாறியுள்ளது. இது பொருளாதாரம் பின்னடைந்து போயுள்ளதையே காட்டுகிறது. போர் முடிந்ததும் பொருளாதாரத்தை உயர்த்துவோம் என்றது அரசாங்கம் ஆனால், விலைவாசியைத்தான் தொடர்ச்சியாக ஏற்றி சாதனை செய்துள்ளது.



போர் முடிவுக்கு வந்தபோது போடப்பட்ட கணக்கின்படி நாட்டின்பொருளாதாரம் வளர்ச்சி பெறவில்லை. மீண்டும் பழையபடி பணவீக்கம் மக்களை சுரண்டித் தின்னத் தொடங்கிவிட்டது.

போரின் இறுதிக்கட்டத்தில் சுமார் 20 ஆயிரம் கோடி ரூபாவுக் குள் இருந்த வருடாந்த பாதுகாப்புச் செலவு இப்பொழுது 23 ஆயிரம் கோடி ரூபாவிற்குப் போய்விட்டது.

போர்முடிந்தால் அதற்காகச் செலவிடப்படும் பெருந்தொகை நிதியை அபிவிருத்திக்கு ஒதுக்கி நாட்டை சிங்கப்பூராக்கலாம் என்றது அரசாங்கம். போர் முடிந்து மூன்று ஆண்டுகளானபோதும் முன்னரைவிட அதிகம் செலவிடுகிறது பாதுகாப்புத்துறை.

காரணம் கேட்டால் போருக்காக வாங்கிய ஆயுதங்களுக்காகப் பட்ட கடனை அடைக்கவேண்டி யுள்ளதாகக் கூறி வாயை அடைக்கிறது. போரின் இறுதிக்கட்டத்தில் பொருளாதாரம் எந்தளவுக்கு பலவீனமாக இருந்ததோ அதேநிலையை நோக்கியே நாடு தள்ளப்பட்டு வருகின்றது.

ஹம்பாந்தோட்டை துறைமுகம் மாத்தள விமான நிலையம் போன்ற கட்டமைப்புகள் உருவாகியுள்ள போதும் அதனால் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக் களவுக்கு உதவ முடியவில்லை.

ஆயிரக்கணக்கான கோடிகள் கொட்டப்பட்டும் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்க முடியாத நிலையே இன்றும் தொடர்கிறது. போர் முடிந்து மூன்றாண்டுகளில் உள்ளூர் உற்பத்திகள் அதிகரித்துள்ளதை மறுக்கமுடியாது.

போர்க்காலத்தில் கைவிடப்பட்டிருந்த நிலங்களில் விவசாயச் செய்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீன்பிடித் தடைகள், தளர்த்தப்பட்டதால், மீன் உற்பத்தியும் உயர்ந்துள்ளது. நெல், மரக்கறி உற்பத்தியில் தன்னிறைவு கண்டுள்ளதாக அரசாங்கம் கூறுகிறது. ஆனாலும், நாட்டின் பொருளாதார நிலை முன்னேறவில்லை.

தேயிலை உற்பத்தி, ஆடை தயாரிப்பு உள்ளிட்ட உள்ளூர் உற்பத்திகள் அதிகரித்துள்ள போதும், இன்னும் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் உள்ள போதும், அதனை உறுதிப்படுத்திக்கொள்ள அரசாங்கம் தவறிவிட்டது.

பொருளாதார உறுதிநிலையை ஏற்படுத்தும் உள்ளக மற்றும் வெளியக புறச்சூழலை உருவாக்க அரசாங்கம் தவறியுள்ளது.

பால் உற்பத்தியாளர்கள் அவற்றை சந்தைப்படுத்த முடியாமல் நிலத்தில் ஊற்றியுள்ளனர்.

ஆடை தாயாரிப்புத் துறையில் முன்னேற்றம் இருந்தாலும், இந்த ஆண்டில் குறிப்பிட்ட வருவாயை ஈட்ட முடியாது என்கிறார் மத்திய வங்கி ஆளுனர். அதுபோலவே, பொருளாதார வளர்ச்சி இலக்கையும் எட்ட முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

குறைந்து போயிருந்த பணவீக்கம் மீண்டும் தொடங்கியுள்ளது. போருக்குப்பின்னர் நாடு பொருளாதார ரீதியாக முன்னேறுகிறது என்று காட்டப்பட்டு வந்த பிம்பம் இப்பொழுது உடைந்து போகத் தொடங்கியுள்ளது.

போர் முடிவுக்கு வந்த போது 1200 டொலராக இருந்த தலா வருமானம் இப்பொழுது 2800 டொலர் வரை உயர்ந்துள்ளது.

விரைவில் தலா வருமானத்தை 4000 டொலர்களாக உயர்த்தப் போவதாகச் சொல்கிறது அரசாங்கம். ஆனால், தலா வருமான உயர்வு மட்டும் பொருளாதார வளர்ச்சியாகவோ மக்களின் வாழ்க்கைத் தர அதிகரிப்பாகவோ இருக்க முடியாது.

தலா வருமானம் அதிகரித்துள்ள போதும், மக்கள் நிம்மதியாகவும் திருப்தியாகவும் வாழ்கிறார்களா என்று பார்க்க வேண்டும். அது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியுள்ளதா என்று பார்க்க வேண்டும்.

தலா வருமான உயர்வு என்பது உழைப்பினால் மட்டும் உருவாக்கப் படக்கூடியதல்ல. நிர்ப்பந்தத்தினாலும் ஏற்படக்கூடியது.

விலைவாசி அதிகரிப்பினால் வருமானம் போதாமல் பெரும்பான்மையான மக்கள் திண்டாடுகின்றனர்.

இந்த நிலையில் எப்படியாவது அதிகம் உழைத்தாக வேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்படுகின்றனர். இதனால் தலா வருமானம் உயர்கிறது. ஆனால், அவர்களின் சேமிப்பு உயரவில்லை. வாழ்க்கைத் தரம் உயரவில்லை.

சேமிப்பு இல்லாத - வாழ்க்கைத் தரத்தை, உயர்த்தாத தலா வருமான உயர்வு, அரசாங்கத்துக்கு புள்ளி விபரக்கணக[illegible] போட மட்டுமே உதவுமே தவிர ச[illegible]ண மக்க ளுக்கு கைகொடுக்காது.

**சஞ்சயன்**

போர்க்கால பொருளாதா[illegible] சுமைகளில் இருந்து மக்களா[illegible] விடுபடவும் முடியவில்லை. அரசா[illegible]கத்தினால் அவர்களை விடுவிக்கவும் முடியவில்லை. அரசாங்கம் பொருளாதாரப் புரட்சி பற்றிப் பேசுகிறது.

சாதாரண மக்களோ ஏறிய விலை இறங்குமா என்று அங்கலாய்க்கிறார்கள். விலைவாசியைக் கட்டுப்படுத்தும் தந்திரங்களையோ மக்களைப் பொருளாதாரச் சுமைகளில் இருந்து மீட்கும் சூட்சுமங்களையோ அரசாங்கம் கைகொள்வதாக இல்லை.


போரின் முடிவு அரசாங்கத்தைப் புகழின் உச்சிக்கு எந்தளவு வேகத்தில் கொண்டு சென்றதோ, பொருளாதாரச் சுமைகள் அதே வேகத்தில் கீழே இறக்கிவிட்டது.

போரிலும், தேர்தல்களிலும் வெற்றியீட்டிய அரசாங்கத்தினால் மக்களின் மனங்களை வெல்ல முடியவில்லை.

**சேமிப்பு இல்லாத - வாழ்க்கைத்தரத்தை உயர்த்தாத, தலா வருமான உயர்வு, அரசாங்கத்திற்கு புள்ளி விபரக்கணக்குகள் போட மட்டுமே உதவமே தவிர சாதாரண மக்களுக்குக் கைகொடுக்காது**

# அதிசய உலகம்...

## திகிலேற்படுத்தும் இராட்சத கடல் வாழ் உயிரினம்



மர்மமான இராட்சத கடல் விலங்கு தொடர்பான வீடியோவை இணையத்தளம் மூலம் வெளியிட்டுள்ளனர். இதனை இதுவரை 1.2 மில்லியன் மக்கள் பார்வையிட்டுள்ளனர்.

கடலுக்கடியிலுள்ள எண்ணெய் கிணற்றில் தொழில்புரியும் ஆழ்கடல் சுழியோடிகளால் மேற்படி இராட்சத விலங்கின் வீடியோக்காட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது.

## வித்தியாசமான முறையில் பலூன்களையுடைத்து சாதனை



பொதுவாக பலூன்களை உடைப்பதற்கு ஊசியினைப் பயன்படுத்துவது வழக்கம். ஆனால் சற்று வித்தியாசமாக லேசர் கற்றைகளைப் பயன்படுத்தி சுமார் 100 பலூன்களை உடைத்து உலக சாதனை படைக்கப்பட்டுள்ளது.


## இரவில் சுலபமாக நேரத்தை பார்க்க உதவும் கடிகாரம்



சாதாரணமான கடிகாரங்களில் இரவு நேரத்தில் நேரம் பார்ப்பது கடினம். எனினும் சில டிஜிட்டல் கடிகாரங்களில் பிரத்தியேகமான சிறிய எல்.ஈ.டி மின்விளக்கு பொருத்தப்பட்டிருக்கும்.

தேவையான நேரத்தில் பட்டனை அழுத்துவதன் மூலம் அம்மின்விளக்கை ஒளிரச் செய்து நேரத்தை அவதானிக்க முடியும். ஆனால் தற்போது தொடர்ச்சியாக எரியக் கூடிய எல்.ஈ.டி மின் விளக்கினைக் கொண்டதும் யு.எஸ்.பி மூலம் சார்ஜ் செய்யக்கூடியதுமான இரவுப் பார்வைக் கைக்கடிகாரங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

## அதிக உயரத்தில் இருந்து குதித்து உலக சாதனை



சாதாரண உயரங்களிலிருந்து குதிப்பதற்கு துணிவும் மனத்திடமும் அதிகம் வேண்டும். இவ்விரண்டும் இருந்த போதிலும் குதிக்கும் உயரங்களின் தூரம் கூடக் கூட உடல் அங்கங்களுக்கு ஆபத்துக்களுக்கும் அதிகமாகும். இவற்றையெல்லாம் மீறி எந்த விதமான உதவியுமின்றி சுமார் 30 மீற்றர்கள் உயரத்தில் இருந்து குதித்து சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

# உயர்தர பரீட்சை விடைத்தாள்கள் திருத்துவதை பகிஷ்கரிக்க பல்கலை. ஆசிரியர்கள் தீர்மானம்

கல்வி அமைச்சின் செயலாளருடனான அண்மைய மோதலையடுத்து கல்வி பொது தராதர (உயர்தர) பரீட்சை விடைத்தாள்களுக்கு புள்ளியிடுதல் தொடர்பான பணிகளை பகிஷ்கரிக்க போவதாக பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் தெரிவித்தனர்.

தமது பிள்ளைகளின் பாடசாலை அனுமதி தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளரை சந்திக்கச் சென்ற பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் வெளியேற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸ் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள பின்னணியிலேயே இந்த அறிவிப்பு நேற்று முன்தினம் விடுக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களையிட்டு தனக்கு அக்கறை இல்லை என கல்வி அமைச்சின் செயலாளர் அண்மையில் கூறினார். எனவே, நாமும் பாடசாலை விடயங்களிலிருந்து விலக தீர்மானித்திருக்கின்றோம் என பல்கலைக்கழக ஆசிரிய சங்கங்களின் சம்மேளனத்தின் தலைவர் நிமல் ரஞ்சித் தேசசிறி தெரிவித்தார்.

கலைத்திட்டம், புள்ளியிடல் மற்றும் மேற்பார்வை ஆகிய பாடசாலையுடன் தொடர்புடைய வேலைகளில் நாம் ஈடுபடமாட்டோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சில பல்கலைக்கழகங்களை சேர்ந்த விரிவுரையாளர்கள் வேலை நிறுத்தம் செய்ய வேண்டும் என கருதுகின்றனர். இது தொடர்பில் பல்கலைக்கழக ஆசிரிய சங்கங்களின் சம்மேளனத்தின் செயற்குழு அடுத்த வாரம் கூடி முடிவு எடுக்கும் என நிமல் ரஞ்சித் தேசசிறி மேலும் தெரிவித்தார். (அ-2)

# வடமாகாணத்தில் ஆசிரியர்களின் இடமாற்றம் சிறப்பாகவே உள்ளது

## ஆளுநர் அலுவலகம் தெரிவிப்பு

ஆசிரியர்களின் இடமாற்றம் ஒரு பிரச்சினையாக காணப்படுகின்றது. பல ஆசிரியர்கள் பின்தங்கிய பிரதேசங்களில் பணிபுரியாது குறித்த ஒரு பகுதியில் பல வருடங்களாக பணிபுரிந்து வருகின்றனர். இதன் காரணமாக குறித்த சில பின்தங்கிய பாடசாலைகளில் நீண்ட காலமாக ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகிறது.

இதற்கென நியமிக்கப்பட்ட இக்குழுவினர் முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்த பெருமளவு எண்ணிக்கையான ஆசிரியர்கள் யாழ்ப்பாணம் மற்றும் அதன் சுற்றுப்புற பிரதேசங்களில் வசிப்பது கண்டறியப்பட்டது.

இதன் பிரகாரம் ஆசிரியர்களுக்கு தமது நிரந்தர பணியிடங்களுக்கு செல்வதற்கு மேலும் ஒரு மாத கால அவகாசம் வழங்கப்பட்டது.

ஏறக்குறைய 90% ஆசிரியர்கள் இந் நடைமுறையை பின்பற்றினர். 10 வீதமானவர்கள் மட்டுமே பல்வேறு காரணங்களுக்காக எதிர்ப்பு தெரிவித்திருந்தனர்.

தற்போது ஆளுநர் இப் 10 வீதமான ஆசிரியர்களின் பின்னணிகளை கருத்தில் கொண்டு மேலும் சிலகாலம் தமது பழைய பாடசாலைகளிலேயே கடமையாற்றுவதற்கு அனுமதி வழங்கியுள்ளார். (அ-7)

# குருநகர் தொடர்மாடி புனரமைப்புக்கு 70 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

யாழ்.குருநகர் தொடர்மாடி வீடமைப்புத் திட்டத்தினை நவீனமயப்படுத்தி மீள நிர்மாணிப்பதற்காக வீடமைப்பு அமைச்சு 70 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

1994 ஆம் ஆண்டு யாழ்.குருநகர் தொடர்மாடி வீடமைப்புத் திட்டம் திறந்து வைத்து மக்களிடம் கையளிக்கப்பட்டது. இவ் வீடமைப்புத் திட்டம் நிர்மாணிக்கப்பட்டு 18 வருடங்கள் ஆகியும் தற்பொழுது மக்கள் வாழ முடியாத நிலையில் உள்ளனர்.

கடந்த காலத்தில் நடைபெற்ற சமரின் போது இவ்வீடமைப்புத் திட்டங்கள் கட்டடங்கள் அழிந்துள்ளன. கடந்த 4 மாதங்களுக்கு முன் அமைச்சர் விமல் வீரவன்ச யாழ்.நகருக்கு சென்று இவ்வீடமைப்புத் திட்டத்தினை அமைச்சின் அதிகாரிகளுடன் பார்வையிட்டார்.

அதற்கமைய அமைச்சின் நிதியில் இருந்து 70 மில்லியன் ரூபா ஒதுக்கிக் கொடுத்துள்ளார். முதல் கட்ட புனர்நிர்மாண வேலைகள் அடுத்த மாத முற்பகுதியில் அமைச்சர் விமல் வீரவன்சவினால் ஆரம்பித்து வைக்கப்படும்.

இவ்வீடமைப்புத் திட்டத்தில் அழிவுற்றுள்ள பகுதிகளான கழிவு நீர் அகற்றுதல், வடிகாலமைப்புத் திட்டம், குடி நீர், மின்சாரம், கழிவு அகற்றும் திட்டம், கட்டடங்கள் புனரமைப்பு போன்ற நிர்மாணப்பணிகள் இடம்பெறவுள்ளன.

(அ-2)

# வவுனியாவில் நாய்களுக்கு கருத்தடை சத்திரசிகிச்சை

வவுனியா நகரசபை வளாகத்தில் பெண் நாய்களுக்கு இலவச கருத்தடை சத்திர சிகிச்சை வவுனியா மாவட்ட சுகாதார திணைக்களத்தின் விலங்கு விசர்நோய் தடுப்பு பிரிவினால் நேற்றையதினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

3 ஆயிரம் நாய்களுக்கு இம்முறை கருத்தடை சத்திரசிகிச்சை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ள நிலையில் முதற்கட்டமாக ஆயிரம் பெண் நாய்களுக்கு இச்சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விலங்கு விசர்நோய் தடுப்புப் பிரிவு பொதுச்சுகாதார பரிசோதகர் தெரிவித்தார்.


பெண் நாய்களுக்கு கருத்தடை செய்வதன் ஊடாக தேவையற்ற நாய்களின் பெருக்கத்தை கட்டுப்படுத்தி நீர்வெறுப்பு நோயின் தாக்கத்தை குறைக்க முடியும் எனவும் அவர் கூறியுள்ளார். (அ-2-266)




# அம்புலி மாமா கதைகள்

## உண்மையும் பொய்யும்

பாலாநந்தரின் குருகுலத்தில் பயின்று வந்த மாணவர்களில் முகுந்தனும் ஒருவன். அவனுடைய ஒரேயொரு குறை என்னவெனில் அவன் எடுத்ததெற்கெல்லாம் பொய் சொல்வான். அதனால் அவனை யாரும் நம்பமாட்டார்கள். ஒருநாள்



அவன் தன் சக மாணவர்களிடம் ஒரு விடயத்தைக் கூற முயல, உடனே அவர்கள் செவிகளை மூடிக் கொண்டனர். நான் சொல்லப் போவது பொய்யல்ல. உண்மையே! தயவு செய்து கேளுங்கள்! என்று அவன் பல முறை கெஞ்சியும் யாரும் நம்பத் தயாராக இல்லை.

அப்போது அங்கு வந்த குருவின் கண்களில் அந்தக் காட்சி தென்பட அவர் விடயம் என்னவென்று விசாரித்தார். பின்னர் முகுந்தனை நோக்கி எப்போதும் பொய் சொல்பவர்களின் கதி இதுதான்! என்றவர் மற்றவர்களை நோக்கி ஒருவன் பொய் சொல்லும் வழக்கம் உடையவன் என்பதற்காக அவன் சொல்ல வருவதைக் கேட்கவேமாட்டோம் என்று நீங்கள் பிடிவாதம் செய்வது சரியில்லை. ஏனெனில் எப்போதும் பொய் சொல்பவன் சிலசமயங்களில் உண்மை கூற



லாம்! இதை விளக்க ஒரு கதை சொல்கிறேன். கேளுங்கள்! என்று கதையைத் தொடங்கினார்.

ரங்கன் ஒரு தானிய வியாபாரி. ஒருநாள் அவன் கிராமத்திலிருந்து தானிய மூட்டைஎடுத்துக் கொண்டு விற்பனை செய்ய நகரத்திற்குச் சென்றான். அவற்றை எடுத்துச் செல்ல அதே கிராமத்தில் இருந்த சோமுவின் குதிரை வண்டியைக் கேட்டு வாங்கிக் கொண்டான். நகரத்தில் தானியத்தை விற்பனை செய்த பின்னர் பணத்தை மடியில் கட்டிக் கொண்டு கிராமம் திரும்பினான்.

கிராமத்தை அடைய பாதி தூரம் இருக்கையில் நண்பகல் வெயில் சுட்டெரித்த தால் ஒரு கோயிலில் இறங்கிக் கொண்டு ஓய்வெடுத்தான். அப்போது ஒரு முரட்டு மனிதன் கையில் ஒரு பையுடன் ரங்கனும் வண்டிக்காரனும் அமர்ந்திருந்த இடத்திற்கு வந்து அவர்களிடம் என் பெயர் ராமு! நான் லட்டு வியாபாரம் செய்பவன்! நானும் உங்களுடன் இங்கே தங்கி இளைப்பாறுகிறேன் என்று சொல்லிவிட்டு உட்கார்ந்தான். ரங்கன் தான் கொண்டு வந்திருந்த உணவுப் பொட்டலத்தைப் பிரித்து, அதிலிருந்த தயிர்சாதத்தை ஏனைய இருவருக்கும் அளித்துத் தானும் சாப்பிட்டான்.

லட்டு வியாபாரி ராமு, உங்கள் தயிர் சாதத்திற்கு மிக்க நன்றி! இப்போது நான் தரும் லட்டுக்களை சாப்பிடுங்கள்! என்று கூறி ஏனைய இருவருக்கும் லட்டுக்கள் வழங்கித் தானும் ஒன்றை எடுத்துக் கொண்டான். மூவரும் அதை ரசித்து உண்டனர். சிறிது நேரத்திலேயே ரங்கன், வண்டிக்காரன் இருவரும் மயங்கி விழுந்தனர். லட்டு வியாபாரி என்று சொல்லிக் கொண்ட ராமு உண்மையில் ஒரு திருடன்! ரங்கனிடம் பணம் உள்ளது என்று தெரிந்து கொண்டு அதைக் கொள்ளையடிக்கத் திட்டமிட்டு அங்கே வந்தவன் தான் அவன்!


ரங்கனும், வண்டிக்காரனும் மயங்கி விழுந்ததும் ரங்கனின் வேட்டியில் முடிந்திருந்த பணத்தை திருட முயற்சிக்கையில் பின்னால் இருந்து ஒரு வாலிபன் தடியினால் ராமுவின் தலையில் அடிக்க ராமுவும் மயங்கி விழுந்தான். உண்மையில் அந்த வாலிபனும் திருடன் தான்! ரங்கனிடமிருந்த பணத்தைத் திருடிக் கொண்ட அந்த வாலிபன் அன்று தனக்குக் கிடைத்த வருமானத்திற்கு கடவுளுக்கு நன்றி கூற விரும்பி கோயிலுக்குள் நுழைந்தான். ஆனால் அங்கு கருமாரி அம்மனைக் கண்டதும் அவன் திடுக்கிட்டான். ஏனெனில் அது அவன் அன்றாடம் வணங்கும் தெய்வம்! உடனே தனக்குக் கிடைத்த பணத்தையெல்லாம் ரங்கனிடமே விட்டுவிட்டு அந்த இடத்தை விட்டுச் சென்று விட்டான்.

சற்று நேரங்கழித்து அந்தப் பக்கமாக வந்து கொண்டிருந்த சோமு, தன் குதிரை வண்டி கோயிலின் அருகே நிற்பதைக் கண்டான்.

தான் அதை ரங்கனுக்குக் கொடுத்திருந்தது நினைவிற்கு வர ரங்கன் கோயிலில் இந்த நேரத்தில் என்ன செய்கிறான் என்று பார்க்கப் போக அங்கு அவன் ரங்கனுடன் வண்டிக்காரன் மற்றொருவன் ஆகிய மூவரும் மயங்கிக் கிடப்பதைக் கண்டு திடுக்கிட்டான்.

உடனே நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த இன்னும் சிலரையும் அழைத்து வந்து அவர்களை கிராமத்து வைத்தியரிடம் அழைத்துச் சென்றான். மயக்கம் தெளிந்ததும் ரங்கன் ராமுவைக் காட்டி இவன் ஒரு பக்காத் திருடன்! எங்கள் இருவருக்கும் மயக்க மருந்து கொடுத்து என்னிடம் இருந்த பணத்தை திருட முயன்றான் என்று குற்றம் சாட்டினான்.

தன் குற்றத்தை ஒப்புக் கொண்ட ராமு நான் மயக்க மருந்து கலந்த



லட்டுவைக் கொடுத்தது உண்மை தான். ஆனால் ரங்கனிடம் இருந்த பணத்தை நான் திருட முயற்சிக்கையில் என்னை யாரோ தலையில் அடித்து மயக்கமடையச் செய்து விட்டான் என்று புலம்பினான்.

அட ரங்கனின் பணம் அப்படியே இருக்கிறது. அப்படியிருக்க வேறு யாரோ ஒரு திருடன் வந்தான் என்றும் அவன் உன்னை அடித்தான் என்றும் யாரிடம் பொய் சொல்கிறாய்? நீ திருட முயன்றது உண்மை. அதனால் நீ தண்டிக்கப்பட வேண்டியவன் என்று சொல்லி அவனைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

கதையை இந்த இடத்தில் நிறுத்திய குரு பார்த்தீர்களா? ராமு உண்மையைக் கூறியும் யாரும் அவனை நம்பவில்லை. அதுபோல் முகுந்தன் பொய் சொல்லும் வழக்கம் உடையவன் என்பதற்காக அவன் என்றைக்குமே உண்மை சொல்லமாட்டான் என்று நீங்கள் நினைப்பது தவறு.

அவன் சொல்ல வந்தது என்ன என்று கேட்ட பின் அது உண்மையா பொய்யா என்று தீர்மானியுங்கள். தவிர அவனைப் பொய் பேசும் வழக்கத்தைக் கை விடும்படி நீங்கள் அவனுக்கு அறிவுரை கூறுங்கள் என்றார். அன்று முதல் முகுந்தன் பொய் சொல்வதை நிறுத்தி விட்டான்.

# 13 இலட்சம் அரச ஊழியர்களை இந்தநாடு சுமந்து நிற்கின்றது

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

**உலகிலேயே நலன்புரி செயற்பாடுகளில் முதன்மை வகிக்கும் நாடு இலங்கை தான். கல்வி, சுகாதாரம், விவசாயம் போன்ற துறைகளில் இலவச சேவையை வழங்குவதுடன் மானியங்களையும் வழங்கி வரும் முதன்மையான நாடாக இலங்கையைக் குறிப்பிட முடியும்.**

**13 இலட்சம் அரச ஊழியர்கள், ஐந்து இலட்சம் ஓய்வூதியக் காரர்களுக்கும் சம்பளம், கொடுப்பனவுகளை வழங்குவதுடன் மக்களுக்கான சுமைகளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு நலன்புரி நடவடிக்கைகளிலும் இலங்கை முன்னுதாரணமாகத் திகழ்வதாக வும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

சர்வதேச தாதியர் தினம் நேற்று முன்தினம் அலரிமாளிகையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மேலும் உரையாற்றிய ஜனாதிபதி,

ஒரு வருடத்துக்கு இரண்டு அல்லது மூன்று தடவைகள் தாதியர்களை அலரிமாளிகைக்கு அழைத்து நியமனம் வழங்குதல் உட்பட பல்வேறு நிகழ்வுகளை நடத்தி அவர்கள் மத்தியில் உரையாற்றி வருகின்றேன். தாதியர்களின் சேவையொன்றே இலஞ்ச ஊழல்களுக்கு உட்படாதது.

தாதியர்கள் தமது இரண்டு காதுகளையும் திறந்து உன்னிப்பாக செவிமடுக்க வேண்டியவர்கள். அதேபோன்று எப்போதும் இரு கண்களையும் அகல விரித்து ஆராய்ச்சியில் ஈடுபடும் கண்களாக வேண்டும் எனவும் வாயை மட்டும் திறக்காமல் தேவையானபோது மட்டும் அதனைத் திறப்பதை வழங்கப்படுத்திக் கொள்ள வேண்டும் என இங்கு கூறப்பட்டது.

எனினும் நான் ஒன்றைக் கூறவிரும்புகின்றேன். வாயையும் சற்றுத் திறந்து அன்பாக ஒரு புன்னகையை உதிர்க்க வேண்டும். அதன் மூலம் வெளிப்படும் அன்பும் கருணையும் நோயாளிகளுக்கு மிகவும் அவசியமானது. ஆனால், இக்காலங்களில் நாம் ஒரு சில தாதியர்களின் திருப்தியற்ற செயற்பாடுகளையே கேட்க முடிகிறது.

தமது பராமரிப்பிலுள்ள நோயாளரை சகோதரர்களைப் போன்று, உறவினர்களைப் போன்று கவனிப்பது மிக அவசியமாகும்.

எனினும் நாம் அரச சேவையைக் கட்டியெழுப்பும் வகையில் 13 இலட்சமாக அரசு ஊழியர்களை அதிகரித்துள்ளமையை அனைவரும் உணர வேண்டும். சுகாதாரத்துறையிலும் பெருமளவிலான நியம்னங்கள் வழங்கப்பட்டுள்ளன. 26 ஆயிரத்திற்கு மேற்பட்ட தாதியர்கள் உள்ளபோதும் 40 ஆயிரம் பேர் தேவைப்படுகின்றனர்.

உலகிலேயே நலன்புரி விடயங்களில் முதன்மை வகிக்கும் நாடு இலங்கையே. இதனை எவரும் மறுக்க முடியாது. கல்வித்துறையானால் என்ன சுகாதாரத் துறையானால் என்ன அதேபோன்று விவசாயத்துறையில் வழங்கப்படும் உரமானியமும் அவ்வாறானதே என்றார். (அ-2)

# இனவாத யுத்தத்திற்குள் மீண்டும் நாட்டை தள்ளிவிடப் போவதில்லை- நாமல்

(கொழும்பு)

இனவாத யுத்தத்திற்குள் மீண்டும் நாட்டை தள்ளிவிட அனுமதிக்கப் போவதில்லை. பயங்கரவாத சூழல் இலங்கையில் மீண்டும் ஏற்படாதவாறு தடுப்பது அனைத்து இன மக்களினதும் அரசியல் கட்சிகளினதும் பொறுப்பாகும் என்று பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ரண்டெம்பையில் அமைந்துள்ள தேசிய மாணவர் சிப்பாய் படையணி பயிற்சி முகாமில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் இங்கு மேலும் கூறுகையில்,

வடக்கு மற்றும் கிழக்கில் மாணவர் சிப்பாய் படையணிகளை ஊக்குவிக்க வேண்டும். பௌதீக அபிவிருத்திகள் மாத்திரம் நாட்டின் தரத்தை ஒருபோதும் உயர்த்தப் போவதில்லை. சிறந்த ஆளுமையுடைய தலைவர்களை உருவாக்க வேண்டும். இதன் போது மொழிக்கோ இனத்திற்கோ முதலிடம் கொடுக்காது திறமைக்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்பட வேண்டும்.

ஆசியாவில் ஆச்சரியமிக்க நாடாக இலங்கையை உயர்த்துவதே அரசாங்கத்தின் நோக்கமாகும். இத்திட்டத்திற்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதோ பொருளாதாரத்தில் முன்னோக்கி நகர்வதோ போது மானதல்ல. மாறாக சிறந்த தலைமைத்துவங்களை உருவாக்க வேண்டும்.

அதற்காக இன்றே இளைஞர் அணிகளை தயார்ப்படுத்த வேண்டும். பிரதேச வாதம், இனவாதம், மொழிவாதம் மற்றும் மத வாதம் போன்ற விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்படக்கூடாது.

இலங்கையின் ஐக்கியத்தை பாதுகாக்க வேண்டியது நம் அனைவரினதும் கடமையாகும்.கல்விக் கொள்கைகளில் புதிய திருத்தங்களை ஏற்படுத்தி சவால் மிக்க எதிர்காலத்தை எதிர்கொள்ளக் கூடியதாக நாட்டின் திருத்தங்களை ஏற்படுத்தி சவால் மிக்க எதிர் காலத்தை எதிர்கொள்ளக் கூடியதாக நாட்டின் மாணவ சமூகத்தை வளர்த்தெடுத்திட வேண்டும்.

எனவே, இந்நிலை மீண்டும் ஏற்பட இடமளிக்கக் கூடாது. பயங்கரவாத சூழலுக்கு நாட்டை தள்ளி விடாது பாதுகாக்க வேண்டியது அனைத்து இன மக்களினதும் பொறுப்பாகும்.

இன்று வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் வாழ்ந்த சிறார்கள் மாணவ படையணியில் சேர்ந்து தமது திறமையினை வெளிப்படுத்துகின்றனர். இதனை மேலும் ஊக்குவிக்க வேண்டும் என்றார். (அ-2)

# கசிப்பு வைத்திருந்தவர் பொலிஸாரால் கைது

(தர்மபுரம்)

பெரியகுளம் கட்டைக்காடு பகுதியில் கசிப்பு வைத்திருந்த நபரொருவரை கிளிநொச்சி பொலிஸார் அவரது வீட்டில் வைத்து கைது செய்துள்ளனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் குறித்த நபரது வீட்டிற்கு சென்ற பொலிஸார் 50 லீற்றர் கசிப்பை மீட்டதுடன் குறித்த நபரையும் கைது செய்துள்ளனர்.

(அ-3-252)

# பரிந்துரைகளின் படி விசாரணைகள் ஆரம்பம்

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர்

(கொழும்பு)

உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாகவே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

மன்னார் பேராயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை குற்றப்புலனாய்வு விசாரணை பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாக வெளியான தகவல்களுக்கு பதிலளிக்கும் வகையில் பொலிஸார் இதனைக் குறிப்பிட்டுள்ளனர்.

உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவிடம் மன்னார் பேராயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை அளித்த வாக்கு மூலங்கள் தொடர்பில் சில தெளிவுபடுத்தல்களுக்காக குற்றப் புலனாய்வு பிரிவினர் பேராயரிடம் விசாரணை நடத்தியதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் காணாமல் போனவர்கள் தொடர்பில் பேராயர் இராயப்பு ஜோசப் பல்வேறு தகவல்களை வழங்கியிருந்தார். குற்ற விசாரணை பிரிவினர் உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் பிரகாரமே செயற்பட்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# காஸ் கசிவால் 18 பேர் வைத்தியசாலையில்

கொஸ்வத்தை- ஹால்தடுவன கிராமத்தில் அமைந்துள்ள சவர்க்கார உற்பத்தி தொழிற்சாலையில் ஏற்பட்ட காஸ் கசிவால் அதனை சுவாசித்த ஊழியர்கள் 18 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.


வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களுக்கு மயக்கம், வாந்திபேதி என்பன ஏற்பட்டதாகவும் 17 பெண்களும் ஒரு ஆணும் இவ்வாறு பாதிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் தங்கொட்டுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அதில் நான்கு பெண்களும் ஒரு ஆணும் மேலதிக சிகிச்சைகளுக்காக நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

பகல் 12.15 மணியளவில் ஏற்பட்ட இந்த காஸ் கசிவிற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. கொஸ்வத்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# தெரிவுக்குழுவுக்குவர கூட்டமைப்பு நிபந்தனை விதிப்பது ஆச்சரியமானது

## அமைச்சர் டலஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

**பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் இடம்பெறுவதற்கு நிபந்தனை விதிப்பதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கூறுகின்றமை ஆச்சரியமளிக்கின்றது. தெரிவுக் குழுவானது பாராளுமன்றத்தின் ஒரு அங்கமாகும். தெரிவுக்குழுவுக்கு நிபந்தனை விதிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற செயற்பாடுகளில் பங்கேற்கவும் நிபந்தனை விதிக்குமா? என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளரும் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும கேள்வி யெழுப்பியுள்ளார்.**

பாராளுமன்ற தெரிவுக்குழுவில் சில நிபந்தனைகளுடன் கலந்து கொள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராகவுள்ளதாக கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளமை குறித்து கருத்து வெளியிடும் போதே அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தின் மீது நாம் வைத்துள்ள நம்பிக்கையின் அடிப்படையிலேயே பாராளுமன்ற தெரிவுக்குழுவை அமைத்து அதனூடாக அரசியல் தீர்வைக் காண்பதற்கு முயற்சித்து வருகின்றோம். தெரிவுக்குழுவில் காணப்படும் தீர்வே யதார்த்தகரமானதாக அமையும்.

அதாவது இரண்டு கட்சிகள் பேச்சுவார்த்தை நடத்தும் போது நிபந்தனைகளை முன் வைக்கலாம். இரண்டு அமைப்புக்கள் பேச்சு நடத்தும் போது நிபந்தனை விதிக்கலாம். ஆனால், பொதுவான பாராளுமன்ற தெரிவுக்குழுவில் அனைத்துக் கட்சிகளும் அங்கம் வகிக்கப்போகும் நிலையில் ஒரு கட்சி எவ்வாறு நிபந்தனை விதிப்பது?

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் இது குறித்த அறிவிப்பு எம்மை வியப்புக்குள்ளாகுகின்றது. என்ன நிபந்தனைகளை வைத்திருக்கின்றனர் என்று எங்களுக்குத் தெரியாது.

ஆனால், பாராளுமன்ற செயற்பாட்டின் ஒரு அங்கமான பாராளுமன்ற தெரிவுக் குழுவில் இடம்பெறுவதற்கு எவ்வாறு நிபந்தனை விதிப்பது என்பதே எம்முன் இருக்கின்ற கேள்வியாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

## பச்சிலைப்பள்ளியில் நடமாடும் சேவை

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் பொலிஸ் திணைக்களம் என்பன இணைந்து நடமாடும் சேவையொன்றை நாளை வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் நடாத்தவுள்ளது என பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

இந் நடமாடும் சேவையின் போது ஆட்பதிவுத் திணைக்களம், பதிவாளர் திணைக்களம் என்பவற்றால் பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றிதழ்கள் பெற்றுக் கொள்ளல், தேசிய அடையா அட்டையைப் பெற்றுக் கொள்ளல், காலங்கடந்த பிறப்புக்களை பதிவு செய்தல், முதியோர் அடையாள அட்டையினைப் பெற்றுக் கொள்ளல், தொலை ந்த அடையாள அட்டைக்கான பொலிஸ் அறிக்கையினை பெற்றுக் கொள்ளல் போன்ற சேவைகளை பொதுமக்கள் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-7)

## வவுனியா நகரசபை மண்டபத்திற்கு நாளை மறுதினம் ஒன்றுதிரளுங்கள்

### சிவசக்தி ஆனந்தன் எம்.பி.அழைப்பு

(பூந்தோட்டம்)

எமது உரிமைப் போராட்டத்தில் நாம் பல இழப்புக்களைச் சந்தித்துள்ளோம். இருந்த போதிலும் இங்கு சென்றால் காப்பாற்றப்படுவோம். அங்கு சென்றால் பாதுகாப்பாக இருக்கும் என்று இறுதி நேரத்தில் மரணத்தைத் தவிர்ப்பதற்காக ஓடி ஓடி இறுதியில் காலனிடம் தம் உயிரைப் பறிகொடுத்த எம் உறவுகள் எத்தனைபேர் என்று இன்றுவரை கணக்கிட முடியவில்லை என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இறுதி யுத்தத்தில் மரணித்தவர்களின் 3 ஆம் ஆண்டு நினைவு நாள் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

மரணத்தின் விளிம்புவரை சென்று இன்று மீண்டுவந்து உயிர் வாழ்கின்ற உறவுகளாக இருந்தாலும் சரி தமது உறவுகள் இழந்துவிட்டு இன்றுவரை உளக்குமுறலுடன் வாழ்க்கையை நடத்துகின்ற எமது உறவுகளாக இருந்தாலும் சரி தமது துயரத்தையும் மனப் பாரத்தையும் மன அழுத்தத்தையும் ஓரளவிற்காவது இறக்கி வைப்பதற்கான சந்தர்ப்பங்கள் பரவலாக ஏற்படுத்தப்பட வேண்டும்.

துயரத்தில் இருப்பவர்கள் தனித்து விடப்பட்டவர்கள் அல்லர். அவர்களுக்கு ஆறுதலளிப்பதற்கும் அவர்களது துயரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் ஒட்டுமொத்த தமிழ்ச் சமுதாயமும் தயாராக இருப்பதை எடுத்துக் காட்டும் விதத்தில் குறைந்தபட்சம் வவுனியாவில் உள்ள அனைவரும் அன்றைய தினம் தங்களது அனைத்து நிகழ்வுகளையும் ஒதுக்கி வைத்து விட்டு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் வவுனியா நகரசபை மண்டபத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள அஞ்சலி நிகழ்வில் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுள்ளார். (அ-9-266)

## யாழ்.மாநகரசபை எல்லைக்குள் நுளம்புக்கட்டுப்பாட்டுச் செயற்பாடு

(யாழ்ப்பாணம்)

தேசிய நுளம்புக்கட்டுப்பாட்டு வார நிகழ்வுகள் 7 வலயங்களாக பிரிக்கப்பட்டு அந்தந்தப் பிரதேச செயலகங்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதன்போது இன்று புதன்கிழமை கொழும்புத்துறை பொது சுகாதார பிரிவிலுள்ள ஜே/61, ஜே/62, ஜே/63, ஜே/64, ஜே/65, ஜே/66 கிராமசேவகர் பிரிவுகளிலும் மேற்கொள்ளப் படவுள்ளது.

நாளை வியாழக்கிழமை குருநகர் I,II பொதுச் சுகாதாரப் பிரிவுகளைச் சேர்ந்த ஜே/67,ஜே/68,ஜே/69, ஜே/70,ஜே/71, ஜே/72, ஜே/75,ஜே/76 கிராமசேவகர் பிரிவுகளிலும் நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை அரியாலை பொதுச் சுகாதார பிரிவுகளைச் சேர்ந்த ஜே/91, ஜே/92,ஜே/93,ஜே/94,ஜே/95,ஜே/96 கிராமசேவகர் பிரிவுகளிலும் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை வண்ணார்பண்ணை பொதுச் சுகாதார பிரிவைச் சேர்ந்த ஜே/ 97,ஜே/98, ஜே/99, ஜே/100 , ஜே/101, ஜே/104 கிராமசேவகர் பிரிவுகளிலும் மேற்கொள்ளப்படவுள்ளது.

எதிர்வரும் 20ஆம் திகதி ஜே/103,ஜே/105,ஜே/106, ஜே/107 ,ஜே/108 ,ஜே/109 I,II கிராமசேவகர் பிரிவுகளிலும் இடம்பெறவுள்ளது.

மேற்படி இவ்வலயங்களில் இடம்பெறும் சுகாதார செயற்பாடுகளுக்கு அந்தந்தப் பகுதிக்குப் பொறுப்பாகவுள்ள பொதுச்சுகாதார பரிசோதகர் தலைமையில் வெளிக்கள சுகாதார உத்தியோகத்தர்கள், தொண்டர்கள், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ். நல்லூர் பிரதேச செயலகங்களைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், யாழ்.பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சுற்றாடல் பொலிஸ் உத்தியோகத்தர்கள்,மாநகரசபை பொதுச்சுகாதாரப் பொறியியல் பிரிவுப் பகுதியினர் இணைந்து இத்தேசிய நுளம்புக்கட்டுப்பாட்டு செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். (அ-7)

## தேர்தலுக்கு முன்னர் சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவை ஸ்தாபிக்க வேண்டும்

(கொழும்பு)

தேர்தலுக்கு முன்னர் சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவொன்றை ஸ்தாபிக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை சூரியவெவ பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

தேர்தலை நடத்துவதற்கு முன்னர் சுயாதீன தேர்தல் ஆணைக்குழு இருக்க வேண்டும் எனவும் சுயாதீன அரச சேவை ஆணைக்குழு மற்றும் சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு இருக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவையும் சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவையும் உடனடியாக ஸ்தாபிக்குமாறு தற்போதைய அரசாங்கத்துக்கு சவால் விடுப்பதாக சஜித் தெரிவித்துள்ளார்.

நியாயமான முறையில் சுயாதீன அரச சேவை ஆணைக்குழுவை ஸ்தாபித்து தேர்தல் நடத்தப்படும் பட்சத்தில் அனைத்து தேர்தல்களிலும் ஐக்கிய தேசிய கட்சியை வெற்றி பெற செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் கூறினார். (அ-2)

## தமிழ் நாட்டில் உள்ள அகதிகளை நாட்டுக்கு அழைத்துவர முயற்சி

### மீள்குடியேற்ற அமைச்சர்

(கொழும்பு)

இலங்கையின் மீள்குடியேற்ற நடவடிக்கைகளை அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிறுவனம் புகழ்ந்துள்ளதென மீள்குடியேற்ற அமைச்சு தெரிவித்துள்ளது.

மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரகோனுடன் நேற்றைய தினம் இடம்பெற்ற சந்திப்பின் போதே அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிறுவன பிரதிப் பணிப்பாளர் ட்ரேவர் ஹியூப்லிங் தெரிவித்ததாக மீள்குடியேற்ற அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்கு தொடர்ந்தும் உதவி புரிவதாக அவர் இதன் போது உறுதி அளித்துள்ளார்.

இன்னும் 3 மாதங்களில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் நிறைவு பெற்று விடும் எனவும் அந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த குறைந்தது 5 வருடங்கள் செல்லும் எனவும் அமைச்சர் குணரத்ன வீரகோன் இங்கு தெரிவித்துள்ளார்.

மேலும் தமிழ் நாட்டில் உள்ள இலங்கை அகதிகளை நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார். (அ-2)

# தெரிவுக்குழுவுக்கு வர கூட்டமைப்பு விதிக்கும் நிபந்தனைகள் என்ன?

## அறிய விரும்புகிறோம் என்கிறார் அமைச்சர் விதாரண

தேசியப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண பாராளுமன்ற தெரிவுக் குழுவில் தமிழ்க்கூட்டமைப்பு சில நிபந்தனைகளுடன் பங்கேற்கத்தயார் என தெரிவித்துள்ளதால் அவர்களின் நிபந்தனை என்ன? அதனை தெரிந்து கொள்ள விரும்புகிறோம் என்று அமைச்சரும் முன்னாள் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவருமான திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

சில நிபந்தனைகளுடன் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கெடுக்கத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புத் தயாராகவுள்ளதாகக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளமை குறித்துக் கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிபந்தனையுடன் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் இணைந்துகொள்ளத்தயார் என்று தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. அப்படியானால் அவர்கள் என்ன நிபந்தனைகளை கொண்டுள்ளனர் என்று நாங்கள் அறிய விரும்புகின்றோம்.

ஆனால் தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக பிரேரிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற தெரிவுக் குழுவில் எதுவித நிபந்தனைகளுமின்றியே அரசியல் கட்சிகள் பங்கெடுக்க வேண்டும் என்பதே எமது எண்ணமாகும்.

அதாவது குறிப்பிட்ட விடயம் குறித்து பேச வேண்டும். ஏனைய விடயங்கள் குறித்து பேச முடியாது என்று நிபந்தனைகள் விதிக்கப்படக்கூடாது. என்ன விடயங்களானாலும் பாராளுமன்ற தெரிவுக்குழுவில் பேச்சு நடத்தலாம். தீர்மானங்களை எடுக்கலாம்.

இதேவேளை பாராளுமன்ற தெரிவுக்குழு காலத்தை வீணடிக்கும் என்று கருதி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அது குறித்து நிபந்தனை விதிக்குமானால் அவர்களுக்கு ஒரு விடயத்தை கூற விரும்புகின்றேன்.

அதாவது நியமிக்கப்படும் பாராளுமன்ற தெரிவுக்குழுவில் அரசியல் கட்சிகள் பங்கேற்று பேச்சுவார்த்தை நடத்தி ஆறு மாத காலத்தில் தீர்மானத்துக்கு வர வேண்டும் என்று பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக ஆறு மாத காலத்தில் பாராளுமன்ற தெரிவுக்குழு தனது அறிக்கையை சமர்ப்பித்தாக வேண்டும். அதன் பின்னர் அடுத்தகட்ட ஏற்பாடுகளை முன்னெடுக்க முடியும்.

எனவே கால இழுத்தடிப்பு குறித்து தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு குழப்பமடைய வேண்டியதில்லை. அதற்கு தீர்வு தெரிவுக்குழு குறித்த பிரேரணையிலேயே உள்ளது.

இதேவேளை பாராளுமன்ற தெரிவுக்குழுவானது தனது கலந்துரையாடல்களை ஆரம்பிக்கும் போது சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்க முடியும் என்று நான் ஏற்கனவே யோசனை தெரிவித்துள்ளேன்.

எனவே அதன்படி இணக்கப்பாடு எட்டப்படின் செயற்பட முடியும் என அமைச்சர் குறிப்பிட்டார். (அ-2)

உன்னை யோக்கியனாக மாற்றிக் கொள்வதில் ஒரு நன்மை உண்டு. அதாவது உலகில் ஒரு அயோக்கியன் குறைகிறான். ~ ஓர் அறிஞன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## உங்களால் கெட்டது என்றில்லாமல் எங்கே வேண்டுமானாலும் போங்கள்

நுணலும் தன் வாயால் கெடும் என்பது தமிழ்ப் பழமொழி.

தேவையில்லாமல் கதைப்பதனால் எல்லாம் கெட்டுவிடும் என்பதை இப் பழமொழி உணர்த்தி நிற்கின்றது.

இந்தப் பழமொழி இப்போது தமிழ் அரசியல் தலைமைகளுக்கு சாலப்பொருத்துடையதாகும்.

கதைக்க வேண்டிய நேரத்தில் கதைக்காமல் விட்டதும் மௌனம் காக்க வேண்டிய கட்டத்தில் கதைப்பது ஆகிய இரு அம்சங்களும் தமிழ் மக்களுக்கான சாதகமான நிலைமையைக் குழப்பி விடும். கதை மட்டுமல்ல செயலும் அப்படித்தான்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை ஆதரிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களிடம் கேட்டிருந்தது.

இதனைத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திய மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகா வெற்றி பெற்றால் விடுதலைப் புலிகள் மீண்டும் உருவாகிவிடுவர் எனத் தென் பகுதியில் தீவிர பிரசாரம் செய்தார்.

அதன் முடிவு 10 இலட்சத்திற்கு மேற்பட்ட வாக்குகளால் மகிந்த ராஜபக்ஷவுக்கு வெற்றி கிடைத்தது.

வன்னிப் போரில் வெற்ற வெற்றி இறுமாப்பும், ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனக்கு எதிராக செயற்பட்டதும் சேர்த்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமிழர் தொடர்பில் மிகவும் இறுக்கமான போக்கை கடைப்பிடித்தார்.

கடும் கூர் கடும் மொட்டை என்பது போல ...ரின் கடும் போக்கு சர்வதேசத்தை இலங்கை ...பால் திசை திருப்பியது.

இனப்பிரச்சினைக்கான தீர்வில் இலங்கை ...ரசு தமிழ் மக்களை மட்டுமல்ல; சர்வதேசத்தை ...ம் ஏமாற்றத் துணிந்துவிட்டதென்பதை தெரிந்து கொண்ட அமெரிக்கா ஜெனிவாக் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை நிறைவேற்றியது.

கூடவே இலங்கைக்கு பக்கபலமாக இருந்த இந்தியாவையும் தனது தீர்மானத்திற்கு ஆதரவளிக்க வைத்தது.

சமகால நிலைமை இதுவாக இருக்கையில், ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து மேதினத்தை கூட்டமைப்பு நடத்திக் குழப்பத்தை ஏற்படுத்தியதுடன் சிங்கக் கொடியை தூக்கிப் பிடித்து எனக்கு விருப்பமான கொடி என்று சம்பந்தர் கூறி எல்லாவற்றையும் போட்டுடைத்த நிலையில், தெரிவுக்குழு விவகாரம் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடம்பெற்றால் மட்டுமே இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியுமென்ற கருத்தை அரச தரப்பு முன்வைக்கின்ற வேளையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவுக்குழுவில் இடம்பெறுவதற்கான சமிக்ஞைகளும் தென்படுகின்றன.

தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு பங்கேற்கக் கூடாது என்ற கருத்து தமிழ் மக்கள் மத்தியில் பலமாக இருக்கின்றதாயினும் அதனைச் சமாளிக்க,

நிபந்தனைகளுடன் தெரிவுக்குழுவில் பங்கேற்பது பற்றி கூட்டமைப்பு ஆராயும் என்ற கதையளப்புகளும் வெளிக்கிளம்பியுள்ளன.

எதுவாயினும் கூட்டமைப்பின் நிபந்தனைகள் எதனையும் இலங்கை அரசு ஏற்கப்போவதில்லை என்ற உண்மையின் அடிப்படையில் கூட்டமைப்பிற்கு தமிழ்மக்கள் சொல்லக்கூடியது,

நீங்கள் எங்கு வேண்டுமானாலும் போங்கள்; ஆனால் தமிழ் மக்களுக்கு, சர்வதேச ரீதியில் ஏற்பட்டுள்ள சாதகமான சூழ்நிலை உங்களால் கெட்டது என்று மட்டும் வராமல் பார்த்துக் கொள்ளுங்கள்; அதுபோதும்.

## வேளாங்கன்னி சிற்றாலய திருவிழா

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் பழைய வாய்க்கால் தூய வேளாங்கன்னி சிற்றாலய திருவிழா கொண்டாடப்படவுள்ளளது. நாளை மறு தினம் வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணை விழாவும் மறுநாள் சனிக்கிழமை காலை 7 மணிக்கு அருட்பணி யூட் நிக்சன் தலைமையில் திருவிழா திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படும்.

எனவே இறைமக்கள் அனைவரையும் இத்திருவிழா திருப்பலியில் பங்கேற்று அன்னையின் ஆசியினைப் பெறுமாறு மிருசுவில் பங்குத்தந்தை அறிவித்துள்ளார். (அ-2)

## உதவிப் பணத்தை பெற்றுக்கொள்ளவும்

(சாவகச்சேரி)

வரணி பிரதேசத்தில் ஊனமுற்றோர் மற்றும் உதவி நிதி பெறுவோருக்கான மாதாந்த உதவிப் பணம் வரணி உபதபால் நிலையத்தில் வழங்கப்பட்டு வருகின்றது.

இதனைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன் பெற்றுக்கொள்ளுமாறு வரணி உப தபால் அதிபர் அறிவித்துள்ளார். (அ-3-29)

## காதலித்தால் கன்னித்தன்மை பரிசோதிக்கப்படுகிறது

பல்கலைக்கழகங்களில் காதலிப்பதும் தற்போது ஒழுக்கவிரோத செயற்பாடாக மாற்றப்பட்டுள்ளது எனவும் காதலித்தால் பெண்ணின் கன்னித்தன்மை சோதனை செய்யப்படுவதாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் சஞ்சீவ பண்டார தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்கள் என்பது ஆசிரியர் பயிற்சி கலாசாலைகள் இல்லை. அவை மாணவர்கள் கேந்திர கல்வி நிறுவனங்கள். இதனால் மாணவர்களை பலவந்தமாக விரிவுரைகளில் கலந்துகொள்ள செய்யக்கூடாது.

மாணவர்கள் தேவையான அறிவை தேடுவதற்காக வழிகாட்டப்பட்ட வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். விரிவுரைகளில் 80 வீதம் கலந்துகொள்ளாத மாணவர்கள் மற்றும் ஒழுக்கமின்றி செயற்படும் மாணவர்களுக்கு மாபொல புலமைப்பரிசில் வழங்கப்பட மாட்டாது என உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளமை தொடர்பாக கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## சிறியரக பேருந்துகள் பயன்பாடு இல்லாது நிறுத்திவைப்பு

வவுனியா நகரசபைக்கு இந்திய அரசினால் வழங்கப்பட்ட சிறிய ரக பேருந்துகள் 4 எவ்வித பாவனையும் இன்றி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். 5 பேருந்துகளை முன்னாள் நகர சபை தலைவராக இருந்த எஸ். என்.ஜி. நாதனின் காலப்பகுதியில் 5 பேருந்துகளை இந்திய அரசு நன்கொடையாக நகர சபைக்கு வழங்கியிருந்தது.

இவற்றில் ஒன்று நகர சபையினால் தேவையின் பொருட்டுசேவையில் ஈடுபடுத்தப்பட்டாலும் ஏனைய 4 பேருந்துகளும் எவ்வித பாவனையும் இன்றி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக விசனம் தெரிவித்துள்ள மக்கள் பேருந்துகள் நீண்ட காலமாக பயன்படுத்தாது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமையினால் அவை துருப்பிடித்து யாருக்கும் பயன்படாது போகும் நிலை காணப்படும் என்பதால் மக்களின் பாவனைக்கு அப்பேருந்துகளை பயன்படுத்த வேண்டும் என அவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

மேலும் அவர்கள் தெரிவிக்கையில்,

பல கிராமங்களுக்கு இன்றும் போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. இங்குள்ள மாணவர்கள் கற்றல் நடவடிக்கைக்கு பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். எனவே நகர சபை இவர்களுக்கு வாகன வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பதனால் வாகனங்களின் பயன்பாடு மக்களை சென்றடையும் எனவும் தெரிவித்தனர். (அ-266)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### அன்புதான் வாழ்க்கை



நாம் மற்றவர்களுக்கு செய்ய வேண்டிய கடமை பிறருக்கு உதவி புரிவதும் உலகிற்கு நன்மை செய்வதும் தான்.

அன்பு, நேர்மை, பொறுமை ஆகியவற்றை தவிர எதுவும் நமக்குத் தேவையில்லை. வளர்ச்சி அடைவதும் அன்பு செலுத்துவதுமே வாழ்க்கை. அதுவே வாழ்க்கை நியதி.

மேலைநாட்டு விஞ்ஞானத்தோடு இணைந்த வேதாந்தமும் பிரம்மச்சாரியமும் வாழ்க்கையின் அடிப்படை இலட்சியங்களாக நமக்குத் தேவைப்படுகின்றன.

கல்வி என்பது மூளைக்குள் பல விடயங்களை போட்டுத் திணித்து வைப்பதல்ல. அப்படித் திணிக்கப்படும் அந்த விடயங்கள் வாழ்நாள் முழுவதும் ஜீரணம் ஆகாமல் தொந்தரவு கொடுத்துக்கொண்டே இருக்கும்.

அனைத்து தேவைகளையும் துன்பங்களையும் நீக்குவதற்கான பேராற்றல் உங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கும்.

# ஆசியாவின் அதிசயமே நாட்டில் இடம்பெற்று வருகிறது-கயந்த

(கொழும்பு)

அரசாங்கம் ஆசியாவின் அதிசயம் தொடர்பாக கூறிவரும் நிலையில் நாட்டில் அதிசயமான நிகழ்வுகளே இடம்பெற்று வருகின்றன என ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்டனிடம் கையளிக்கவுள்ளதாக கூறப்படும் மனித உரிமைகள் தொடர்பான செயற்பாட்டுத் திட்டம் தொடர்பாக நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பின் போது கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

மனித உரிமைகள் தொடர்பான செயற்பாட்டுத்திட்டம் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்காக வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான பிரதிநிதிகள் குழுவொன்று அமெரிக்காவுக்கு பயணமாகியுள்ளது.

இந்தச் செயற்பாட்டுத் திட்டம் தொடர்பாக மக்களுக்கும் பாராளுமன்றத்திற்கும் விளக்கமளிக்க அரசாங்கம் தவறியுள்ளது.

இந்நிலையில் அரசாங்கம் இரகசிய செயற்பாட்டுத் திட்டமொன்றை நாளை மறுதினம் அமெரிக்காவிடம் கையளிக்கவுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி குற்றம் சுமத்தியுள்ளது.

இந்த செயற்பாட்டுத் திட்டத்திலுள்ள விடயங்களை பகிரங்கப்படுத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

அரசாங்கம் இரகசியமாக அமெரிக்காவிடம் சமர்ப்பிக்கவுள்ள செயற்பாட்டுத் திட்டம் தொடர்பாக மக்கள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார் எனவும் கயந்த கருணாதிலக்க சுட்டிக்காட்டினார்.

(அ-2)

# தோல்விப் பீதியிலேயே வடமாகாணத்தில் தேர்தலை நடத்த அரசாங்கம் அச்சம்

## ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின்

(கொழும்பு)

தோல்விப் பீதியாலேயே அரசு வடக்குத் தேர்தலை நடத்துவதற்கு அஞ்சுகின்றது எனத் தெரிவித்துள்ள ஜே.வி.பி.ஒரே தடவையில் மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

சுயாதீன தேர்தல் குழுவை அமைத்து ஜனநாயக முறைப்படி தேர்தலை நடத்துவதற்கு அரசு தயாரா என்றும் ஜே.வி.பி. சவால் விடுத்துள்ளது.

மாகாணசபைத் தேர்தலை எதிர்கொள்வதற்கு எதிர்க்கட்சிகள் அஞ்சுகின்றன என அரசு தெரிவித்திருக்கும் கருத்து தொடர்பில் விபரிக்கையிலேயே ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு, ஜே.வி.பி. தேர்தல்களை எதிர்கொள்வதற்கு ஒருபோதும் அஞ்சாது. அரசு தான் பயத்தில் நடுங்குகின்றது. அதனால் தான் தனக்குத் தேவையான தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதேசங்களில் அரசு கட்டங்கட்டமாகத் தேர்தல்களை நடத்துகின்றது.

சுயாதீன தேர்தல் குழுவை அமைத்து அரச வளங்களைப் பயன்படுத்தாமல் அரசு தேர்தலில் மோதுமானால் நிச்சயம் அதைத் தோற்கடிப்போம். இவ்வாறு ஜனநாயக முறைப்படி தேர்தல்களை நடத்துவதற்கு அரசு தயாரா என சவால் விடுக்கின்றோம்.

வடமாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டால் தோல்வி ஏற்படும் என்ற அச்சத்தினால்தான் அரசு அங்கு தேர்தலை நடத்துவதற்குப் பின்னடிக்கின்றது.

வடக்கு மாகாண சபைக்குத்தான் இன்னும் தேர்தல் நடத்தப்படாமல் உள்ளது. எனவே, அங்கு தேர்தலை நடத்துவதற்கு அரசு முன்வரவேண்டும் என்றார்.

(அ-2)

# அசல் பிரதிகளை பெற்றுக்கொள்ளலாம்

(கொழும்பு)

பொலிஸ் முறைப்பாட்டின் அசல் பிரதிகளை பெற்றுக் கொள்ளும் வசதியை உடனடியாக அமுலுக்கு வரும்வகையில் பொலிஸ் திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதில் தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், ஏனைய ஆவணங்கள் அல்லது மோட்டார் வாகனத்துடன் தொடர்பான அனுமதிப்பத்திரம், பாரதூரமற்ற விபத்துக்கள் குறித்த முறைப்பாட்டு பிரதிகளினைப் பெற்றுக் கொள்ளலாம். இதற்காக 25 ரூபா கட்டணம் அறவிடப்படும் என்றார். (அ)


# JAFFNA MEDICAL ASSOCIATION

C/o TEACHING HOSPITAL, JAFFNA, SRILANKA

**Annual General Meeting**

The Council Members have decided to have the Annual General Meeting, to elect new members on 01st June 2012 Friday at 11.00 am at the NTS Lecture hall.

The Office bearers will be elected

All the Members and Doctors are cordially invited.

Teaching Hospital,
secretary JMA,
Jaffna.

(C/006)



**கேள்வி கோரல்கள்**

**இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு**

**துறைமுகங்கள்,பெருந்தெருக்கள் அமைச்சு**

**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

**யாழ்ப்பாணம்**

**யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள வீதிகள், புனர்நிர்மாணம் செய்வதற்கான கேள்வி கோரல் அறிவித்தல்**

**பெருந்தெருக்கள் அமைச்சின் நிதியின் மூலம் உள்ளூர் போட்டிக்குரிய கூறுவிலை கோரல்கள்**

01.பின்வரும் புனர்நிர்மாண வேலைகளிற்கான மூடிய கேள்வி கோரல்களை பிரதம பொறியியலாளர், கேள்விச்சபையின் சார்பாக பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரை வீதி யாழ்ப்பாணம் பெற்றுக்கொள்வார்.

| வேலை விபரம் | கேள்வி பாதுகாப்பு பணம் | ஒப்பந்தகாரர் தரம் ICTAD |
|---|---|---|
| 1. கல்லிட்டு தாரிடல்,குலானை 2 ஆம் ஒழுங்கை, அராலி 0.00-0.30 கி.மீ. (யாழ்ப்பாணம்-பொன்னாலை-பருத்தித்துறை வீதி | 30,000.00 | C 7 |
| 2. கல்லிட்டு தாரிடுதல், குலானை 2 ஆம் ஒழுங்கை, அராலி 0.30-0.60 கி.மீ. (யாழ்ப்பாணம்-பொன்னாலை-பருத்தித்துறை வீதி | 30,000.00 | C 7 |
| 3. கல்லிட்டு தாரிடுதல், குலானை 1ஆம் ஒழுங்கை, அராலி 0.00-0.375 கி.மீ. | 30,000.00 | C 7 |
| 4. கல்லிட்டு தாரிடுதல், குலானை 3 ஆம் ஒழுங்கை, அராலி 0.00-0.25 கி.மீ. | 21,000.00 | C 7 |
| 5. கல்லிட்டு தாரிடுதல், அமெரிக்கன்மிஷன் பாடசாலை வீதி, அராலி 0.00-0.25 கி.மீ. | 27,000.00 | C 7 |
| 6.கல்லிட்டு தாரிடுதல், குலானை 4 ஆம் ஒழுங்கை, (குறுக்கு வீதி அராலி 0.00-0.20 கி.மீ. | 17,000.00 | C 7 |

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறை 30.05.2012 அன்று முற்பகல் 10.00 மணியுடன் முடிவடையும். கேள்விப்பதிரங்கள் 30.05.2012 அன்று காலை 10.00 மணிக்கு பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் திறக்கப்படும்.

கேள்விப்பதிரங்களை தயாரிப்பதற்குரிய படிவங்களை பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம், காரியாலயத்தில் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

கேள்விப்பத்திர ஆவணங்கள் 17.05.2012 தொடக்கம் 29.05.2012 பிற்பகல் 2 மணிவரை மீள் அளிக்க முடியாத வைப்புத்தொகையான 750/= + பெறுமதி சேர்வரி 12% செலுத்திப் பெறவேண்டும்.

02. தகுதி வாய்ந்த கேள்வி கோரல்கள் கோருபவர்கள் பின்வரும் தகைமைப் பிரமாணங்களுக்கு இணங்குதல் வேண்டும்.

அ) கேள்வி கோரல்கோருபவர் தன்னை இக்ராட்(ICTAD) நிறுவனத்தில் வீதி நிர்மாணித்தல் துறையில் மேற்குறிப்பிட்ட தரத்திற்கமைய பதிவு செய்திருத்தல் வேண்டும்.

03.கேள்வி கோரல் ஆவணங்கள் பிரதம பொறியியலாளர் அலுவலகம்,வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம் அலுவலகத்தில் இலவசமாக பார்வையிட முடியும்.

04. முன் கேள்வி கோரல் கூட்டம் 28.05.2012 அன்று காலை 10 மணிக்கு பிரதம பொறியியலாளர் ,வீதிஅபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாண அலுவலகத்தில் நடைபெறும்.

05. கேள்விப்பத்திர ஆவணங்கள் கேள்வி கோரல் முடிவுத்திகதியில் இருந்து 120 கலண்டர் நாட்கள் வரை செல்லுபடியாக இருக்கும். (17.10.2012).

06.மேலே குறிப்பிட்ட கேள்விப்பாதுகாப்பு பணத்தொகை அவற்றிற்குரிய பாதுகாப்பு பத்திரம் ஒவ்வொரு கேள்விப்பத்திர ஆவணத்துடன் இணைத்திருத்தல் வேண்டும். ஏற்றுக்கொள்ளக் கூடிய பாதுகாப்பு பத்திரம் இல்லாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

07.மூடி ஒட்டப்பட்ட கேள்விப்பத்திர ஆவணங்கள் பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாண காரியாலயத்தில் மேற்குறிப்பிட்ட முடிவு காலத்திற்கு (30.05.2012 மு.ப. 10.00) முன் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

08. கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரங்கள் குறிப்பிடப்பட்ட முடிவுறும் நேரத்தின் பின் உடனடியாக பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை,கடற்கரை வீதி,யாழ்ப்பாண அலுவலகத்தில் திறந்து பார்க்கப்படும்.

கேள்வி கோரல் கோருபவர்கள் அல்லது அவரது பிரதிநிதிகள் கேள்விப்பத்திரம் திறக்கும் நேரம் பிரசன்னமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

09. மேலதிக விபரங்கள் பின்வரும் அலுவலகத்தின் தொலைபேசி இலக்கத்துடன் தயவு செய்து தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளவும்.

அலுவலகம்
பிரதம பொறியியலாளர்,
வீதி அபிவிருத்தி அதிகார சபை,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இலக்கம்
021 222 2968

மாகாணப் பணிபாளர் (வ)
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

பிரதம பொறியியலாளர்
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
கடற்கரை வீதி.
யாழ்ப்பாணம்.

(க-002)

# போட்டிக்கான ஊதியம் வழங்கப்படவில்லை

## சனத் ஜெயசூரிய விசனம்

கனடாவில் நடைபெற்ற போட்டியொன்றில் பங்குபற்றியமைக்காக தமக்கு வழங்கப்படவேண்டிய ஊதியத்திற்காக இன்னும் காத்திருப்பதாக இலங்கை அணியின் முன்னால் தலைவர் சனத் ஜெயசூரிய உட்பட சர்வதேச கிரிக்கெட் வீரர்கள் பலர் தெரிவித்துள்ளனர்.

கிரிக்கெட் விளையாட்டை கனடாவில் ஊக்குவிப்பதற்கும் கனடாவை கிரிக்கெட் உலகில் முன்னேற்றுவதற்குமாக 20 ஓவர் கிரிக்கெட் போட்டியொன்று றொரண்டோவில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இலங்கை, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா, சிம்பாவே உட்பட பலநாடுகளைச் சேர்ந்த சர்வதேச வீரர்களைக்கொண்ட இரு அணிகள் இப்போட்டியில் பங்குபற்றின.

இந்நிலையில் தமக்கான ஊதியம் வழங்கப்படாததால் இத்தகைய போட்டிகளுக்காக விரைவில் மீண்டும் தாம் கனடாவிற்கு வருவதற்கு சாத்தியம் இல்லையென சிபிசி நியூஸ் தொலைக்காட்சிக்கு மேற்படி வீரர்கள் பலர் தெரிவித்துள்ளனர். இது கனடாவுக்கும் கிரிக்கெட்டுக்கும் நல்லதல்ல என சனத் ஜெயசூரிய கூறியுள்ளார்.

இப் போட்டிக்காக விமானப்பயணத்திற்கான செலவுடன் 15 ஆயிரம் டொலர்கள் வழங்கப்படவிருந்ததாக சனத் ஜெயசூரிய கூறினார்.

நான் 20 வருடங்களாக போட்டிகளில் விளையாடிவருகிறேன். ஆனால் இத்தகைய நிலையை இதற்குமுன் எதிர்கொண்டதில்லை என அவர் தெரிவித்தார்.

காட் ரோஸ் இன்கோப்பிரேசன் என்னும் கனேடிய நிறுவனத்தின் ஏற்பாட்டில் இப் போட்டி நடைபெற்றது. அந் நிறுவனத்தின் தலைவர் ஹேரப் சோகா இது தொடர்பாக கூறுகையில்,

பாகிஸ்தானைச் சேர்ந்த நட்சத்திர வீரர்கள் பலர் கடைசிநேரத்தில் போட்டியிலிருந்து விலகிக்கொண்டதால் கனடாவிலுள்ள ரசிகர்கள் பலர் தமது ரிக்கெட்டுக்களை திருப்பிக் கொடுத்ததாகவும் முதலீட்டாளர்கள் விலகிக் கொண்டதாகவும் தெரிவித்துள்ளார்.

வீரர்களுக்கான பணத்தை வழங்குவதற்கு தன்னால் முடிந்த அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

# டில்லி 5 விக்கெட்டுகளால் பஞ்சாப்பை வீழ்த்தியது

ஐ.பி.எல் போட்டித் தொடரின் 64-வது லீக் ஆட்டம் நேற்றிரவு டில்லியில் நடைபெற்றது.

இதில் சேவாக் தலைமையிலான டில்லி டேர்டேவில்ஸ் அணியும் டேவிட் ஹசி தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி முதலில் துடுப்பாட்டம் செய்வதாக அறிவித்தது.

அதன்படி அந்த அணியின் ஆரம்ப வீரர்களாக மன்தீப் சிங்கும் ஷோன் மார்ஷும் களமிறங்கினர்.

மன்தீப் 21 ஓட்டங்கள் எடுத்த நிலையிலும், ஷோன் மார்ஷ் 13 ஓட்டங்கள் எடுத்திருந்த போதும் ஆட்டமிழந்தனர். அடுத்து வந்த தீதின் சைனி 15 ஓட்டங்களிலும், டேவிட் மில்லர் 4 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்து வெளியேறினர். மற்ற வீரர்களும் சொற்ப ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர்.

டேவிட் ஹசி இறுதி வரை ஆட்டமிழக்காமல் 40 ஓட்டங்களைப் பெற பஞ்சாப் அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்து 136 ஓட்டங்களைப் பெற்றது.

இதனையடுத்து 137 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலெடுத்தாடக் களமிறங்கியது டில்லி அணி.

அவ் அணி ஆரம்பத்தில் அதிரடியாக ஆடினாலும் விக்கெட்டுகள் சரிய ஒரு நிலையில் 37 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்திருந்தது.

ஆனாலும் ஜெயவர்த்தனவின் பொறுப்பான ஆட்டத்தால் இறுதியில் டில்லி அணி 19 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

டில்லி அணி 5 விக்கெட்டுகளால் வெற்றி அடைந்தது. இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக டில்லி அணியின் யாதவ் தேர்வானார்.

**இன்றைய ஐ.பி.எல். போட்டி:**
இரவு 8 மணிக்கு மும்பையில் நடைபெறும் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் எதிர் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி மோதுகின்றது.

# ஐ.பி.எல். சூதாட்டம் : ஐந்து இந்திய வீரர்கள் அதிரடி நீக்கம்

## பி.சி.சி.ஐ அதிரடி

இந்தியாவின் உள்ளூர்ப் போட்டியொன்றில் ஸ்பொட்ஃபிக்சிங்கில் உள்ளூர் வீரரொருவர் ஈடுபடுவதை இந்தியத் தொலைக்காட்சியொன்று நேற்றுமுன்தினம் இரவு ஒளிபரப்பியுள்ளது. அத்தோடு இந்த ஒளிபரப்பில் ஐ.பி.எல். விதிகளை மீறி வீரர்களுக்கு அணி நிர்வாகிகள் அதிக பணங்களை வழங்குவதையும் அந்தத் தொலைக் காட்சி ஒளிபரப்பு வெளிப்படுத்தியுள்ளது.

ஐ.பி.எல். போட்டிகளில் டெக்கான் சார்ஜர்ஸ் அணி சார்பாகப் போட்டிகளில் பங்குபற்றிவரும் ரி.பி. சுதீந்திரா என்ற வீரர் உள்ளூர்ப் போட்டியொன்றில் நோ போல் ஒன்றை வீசுவதற்காக பெருந்தொகைப் பணமொன்றைப் பெற்றுக் கொண்டதையும், அப்போட்டியில் அவர் மிகப் பெரிய நோ போல் ஒன்றை வீசுவதையும் அத் தொலைக் காட்சி வெளிப்படுத்தியுள்ளது.

அதைத் தவிர உள்ளூர் தொடர் போட்டிகளின் முடிபுகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு 60 இலட்சம் இந்திய ரூபாய்களைப் பெற்றுக் கொடுத்தால் அதற்கு தயாராக இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதைத் தவிர ஐ.பி.எல். விதிகள் மீறப்பட்ட சம்பவங்களையும் அந்தத் தொலைக்காட்சி வெளிப்படுத்தியுள்ளது. அதன்படி இளம் வீரர்களுக்கு கறுப்பு பணம் ஊதியமாக சட்டரீதியற்ற முறையில் வழங்கப்படுவதையும் அந்தத் தொலைக்காட்சி வெளிப்படுத்தியுள்ளது.

ஐ.பி.எல். விதிகளின்படி இந்திய உள்ளூர் வீரர்களுக்கு அதிகபட்சமாக 30 இலட்சம் இந்திய ரூபாய்களே வழங்கப்பட முடியும். இதிலேயே முறைகேடுகள் இடம் பெற்றுள்ளன.

புனே வாரியர்ஸ் அணி சார்பாக ஐ.பி.எல். போட்டிகளில் பங்கு பற்றி வரும் மோனிஷ் மிஷ்ரா, தனக்கு சட்டரீதியற்ற முறையில் 1.2 கோடி இந்திய ரூபாய்கள் வழங்கப்படுவதை வெளிப்படுத்தியுள்ளார்.

அதன்படி அவருக்கான ஊதியமாக 1.5 கோடி இந்திய ரூபாய்கள் வழங்கப்பட்டுள்ளதை அவர் வெளிப்படுத்தியுள்ளார். அத்தோடு அடுத்தாண்டுக்கான போட்டிகளில் மும்பை இண்டியன்ஸ் அணி சார்பாக 2கோடி இந்திய ரூபாய்களை ஊதியமாகப் பெற்றுக்கொள்வதற்கான பேச்சுவார்த்தைகளை இப்போதே ஆரம்பித்துள்ளதாகவும் அவர் அந்த வீடியோப் பதிவில் தெரிவித்துள்ளார்.

கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியின் வேகப்பந்து வீச்சாளரான ஷலாப் ஸ்ரீவற்சா இதில் அதிக குற்றங்களை உடையவராகக் காணப்படுகிறார்.

2010 ஆம் ஆண்டு கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியால் ஒப்பந்தம் செய்யப்பட்ட ஸ்ரீவற்சா, 2010, 2011 ஆம் ஆண்டுகளில் கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி சார்பாக அனேகமான போட்டிகளில் பங்கு பற்றினார். எனினும் போதுமான திறமைகளை அவர் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

இந்நிலையில் கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி தனக்கு 50 இலட்சம் ரூபா ஊதியத்தை வழங்கியதாகவும், அதில் 20 இலட்சம் ரூபா கறுப்பு பணமாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

50 இலட்சத்தை விட அதிகமான தொகை வழங்கப்படுமாயின் அணி மாறுவதற்கு தான் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ள அவர், ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியிலிருந்து புனே வாரியர்ஸ் அணிக்கு மாறுவதற்காக மனிஷ் பாண்டேக்கு 90 இலட்சம் பெறுமதியான மேர்சிடிஸ் பென்ஸ் கார் வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

அத்தோடு 10 இலட்சம் இந்திய ரூபாய் தரப்படுமாயின் இவ்வாண்டுக்கான ஐ.பி.எல். போட்டிகளில் நோ போல் பந்தொன்றை வீசுவதற்கு தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் இந்தாண்டு அவர் போட்டிகள் எவற்றிலும் பங்குபற்றியிருக்காத காரணத்தினால் அந்த விடயம் இடம்பெற்றிருக்கவில்லை.




தவிர, கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியின் அமித் யாதவ் தனக்கு 20 இலட்சம் இந்திய ரூபாய்கள் பெற்றுத் தரப்படுமாயின் வேறு அணியொன்றிற்காக விளையாடுவதற்குத் தயராக இருப்பதாகத் தெரிவித்துள்ளார். அவரது தற்போதைய ஊதியப்பணம் 10 இலட்சம் இந்திய ரூபாய்களே.

இந்த குற்றச்சாட்டுகள் இந்திய அளவில் மாத்திரமின்றி உலகளவில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

### அதிரடி நீக்கம்

ஐ.பி.எல். போட்டியில் ஸ்பாட் பிக்சிங் எனப்படும் சூதாட்டத்தில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள 5 வீரர்கள் 15 நாட்களுக்கு தற்காலிக நீக்கம் (சஸ்பெண்ட்) செய்யப்பட்டுள்ளனர்.

ஐ.பி.எல். 5 தொடரில் கிரிக்கெட் வீரர்கள் 5 பேர் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டு எழுந்ததையடுத்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை (பி.சி.சி.ஐ) நேற்று மாலை அவசரமாக கூடியது.

அந்த கூட்டத்தில் சூதாட்ட குற்றச்சாட்டு குறித்து விவாதிக்கப்பட்டது. இறுதியில் ஸ்பாட் பிக்சிங் சர்ச்சையில் சிக்கியுள்ள வீரர்கள் ஷலாப் ஸ்ரீவற்சா (பஞ்சாப்), டி.பி சுசிந்திரா (டெக்கான் சார்ஜர்ஸ்), மோனிஷ் மிஷ்ரா (புனே வாரியர்ஸ்), அபினவ் பாலி மற்றும் அமித் யாதவ் (பஞ்சாப்) ஆகியோரை ஐ.பி.எல். நிர்வாகக் குழு 15 நாட்கள் தற்காலிக நீக்கம் செய்துள்ளது.

மேலும் ஐ.பி.எல். தவிர முதல் தர போட்டிகளிலும் சூதாட்டம் நடப்பதாகவும், இதில் பெண்களுக்கு முக்கிய பங்கு உள்ளதாகவும் அந்த தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

இது குறித்து பி.சி.சி.ஐ தலைவர் என். ஸ்ரீனிவாசன் கூறுகையில்,

இந்த குற்றச்சாட்டு தொடர்பான வீடியோ ஆதாரங்களை பார்த்த பிறகு அதில் உள்ள வீரர்கள் யார், யார் என்பதை அறிந்து அவர்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# பொன்சேகாவுக்கு விரைவில் விடுதலை...

மேலும், முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் விடுதலை குறித்தும் இந்தச் சந்திப்பின்போது ஆராயப்படவுள்ளது என அறியமுடிகிறது.

சிறைவைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்வேகாவை விடுதலை செய்யுமாறு இலங்கையை அமெரிக்கா தொடர்ச்சியாக அழுத்திவரும் நிலையில் சரத் பொன்சேகாவின் விடுதலை குறித்தான முழுமையான விபரங்களையும் வாஷிங்டனிடம் கையளிப்பதற்கு மகிந்த அரசு தீர்மானித்துள்ளது.

அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இது விடயம் சம்பந்தமான அறிக்கையை கிலாரி கிளின்டனிடம் கையளிப்பார்.

ஜெனிவா இராஜதந்திரச் சமரில் கடுமையாக மோதிக் கொண்ட இரு நாடுகளும் அதன் பின்னர் முதற்தடவையாக சந்தித்து பேசுகின்றமையானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

அதேவேளை, ஜெனிவா மாநாட்டுக்கு முன்னர் அமெரிக்காவின் அழைப்பை புறக்கணித்த இலங்கை அரசு தற்போது அந்த அழைப்பை ஏற்று வாஷிங்டன் விரைந்துள்ளமை சர்வதேச அரசியல் களத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை அரசு நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு முன்னெடுத்துள்ள ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் குறித்து இதன்போது கிலாரியிடம் விளக்கமளிக்கவுள்ள பீரிஸ் நாட்டில் முன் னெடுக்கப்பட்டுவரும் நல்லிணக்கச் செயற்பாடுகள் குறித்தும் தெளிவு படுத்துவார் என அரசதரப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றது.

குறிப்பாக, நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுக்கமைய அண்மையில் இலங்கையில் உருவாக்கப்பட்ட மொழி அமுலாக்கத் திட்டம் குறித்து அதன் தலைவரும் ஜனாதிபதியின் செயலாளருமான லலித் வீரதுங்க வெள்ளை மாளிகை அதிகாரிகளிடம் விளக்கவுள்ளார்.

சிறைவைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணு வத் தளபதி சரத் பொன்சேகாவின் விடுதலை விவகாரத்தில் அமெரிக்கா தலையிடவேண்டும் எனக் கோரி வெள்ளைமாளிகையிடம் 25 ஆயிரம் பேர் கையொப்பமிட்ட மகஜரை சரத் பொன்சேகாவின் குடும்பத்தினர் இரண்டு மாதங்களுக்கு முன்னர் கையளித்தனர். சரத் பொன்சேகாவின் விடுதலை குறித்து அமெரிக்கா கவனம் செலுத்தி வருகின்றமை தெரிந்ததே. (ந-8,11)

# வன்னி தொண்டர் ஆசிரியர்கள் ஒன்றுகூடித் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

வன்னித் தொண்டராசிரியர்களின் ஒன்றியக் கூட்டம் நேற்றுக் காலை கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளது.

மேற்படிக் கூட்டத்தில் வன்னி தொண்டராசிரியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பாக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த கூட்டத்தில் கிளிநொச்சி கல்வி வலயம், வடமராட்சி கிழக்கு கல்வி வலயம், முல்லைத்தீவு கல்வி வலயம், வவுனியா வடக்கு கல்வி வலயம், மடு கல்வி வலயம், துணுக்காய் கல்வி வலயம் ஆகியவற்றின் தொண்டராசிரியர்களின் சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

வன்னித் தொண்டராசிரியர்கள் தமக்கான நிரந்தர நியமனத்தை பெற்றுக் கொள்ளும் நோக்குடன் கடந்த காலங்களில் கவனயீர்ப்பு போராட்டங்களை நடத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.


அத்தோடு யுத்த காலத்திலும் வன்னிப் பாடசாலைகளில் தொண்டராசிரியர்களாக எந்தவித வேதனமும் இன்றி பணிபுரிந்து வந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ந-6)

# பருவப் பெயர்ச்சியால் கடும் மழை பெய்யலாம்

(கொழும்பு)

இலங்கையில் தென் மேற்குப் பருவப் பெயர்ச்சிக் சூழ்நிலை தோன்றி வருவதால் எதிர்வரும் வாரங்களில் கடும் மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் நேற்றுத் தெரிவித்துள்ளது. (ந-8,11)

# டெனிஸ் மிதிவெடி அகற்றும் பணியாளர்கள் பணிப் புறக்கணிப்பு



(யாழ்ப்பாணம்)

டெனிஸ் மிதிவெடி அகற்றும் நிறுவன ஊழியர்கள் நேற்று பணிபகிஷ்கரிப்பில் ஈடுபட்டதோடு கண்டன ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டுள்ளனர்.

தமக்கான ஊழியர் சேமலாப நிதியை கடந்த ஒரு வருடங்களுக்கு மேலாக செலுத்தவில்லை என தெரிவித்தே இந்தப் போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் சுண்டுக்குளிப் பகுதியிலுள்ள டெனிஸ் மிதி வெடி அகற்றும் நிறுவனத்தின் யாழ். அலுவலகத்தை முற்றுகையிட்ட சுமார் 500 இற்கும் மேற்பட்ட மிதிவெடி அகற்றும் பணியாளர்கள் அலுவலகத்தின் கண்ணாடிகளை அடித்து உடைத்ததோடு அலுவலகச் சொத்துக்களையும் சேதத்திற்குள்ளாக்கினர்.

இதனால் நேற்றுக் காலை 8.30 மணி தொடக்கம் மாலை வரை அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டதோடு பொலிஸாரும் பெருமளவில் குவிக்கப்பட்டிருந்தனர். (ந-6)

# நகுலேஸ்வரத்தில் வியாழ மாற்ற ஹோமம்

(யாழ்ப்பாணம்)

நாளை 17 ஆம் திகதி இடம்பெறும் வியாழமாற்றத்தையொட்டி கீரிமலை நகுலேஸ்வரத்தில் விசேட ஹோமம் இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் வியாழ மாற்றத்திற்குரிய பாரிகார பூசைகளை செய்ய முடியுமென கீரிமலை நகுலேஸ்வர ஆலய ஆதீன கர்த்தா ராஜராஜஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள் தெரிவித்துள்ளார். (ந-6)

# புலிகளுக்கு...

ஈடுபட்ட குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்ட ரமணன் மயில்வாகனம்என்பவருக்கு15 வருட சிறைத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என அமெரிக்காவின் நீதித்துறை திணைக்களம் கோரியிருந்தது.

இருந்தபோதிலும் தமது குற்றத்தை ஏற்றுக் கொண்டு மனந்திருந்தியுள்ள தமது தரப்பு வாதியான ரமணன் மயில்வாகனம் என்பவரை விடுதலை செய்யுமாறு அவரது வழக்கறிஞர் தமது வாதத்தை முன்வைத்திருந்தார்.

இந்த நிலையில் ரமணன் மயில் வாகனம் ஏற்கனவே சிறையில் தடுத்து வைக்கப்பட்ட காலத்தை அவரின் தண்டனையாக கருதி நீதிமன்றம் அவரை விடுதலை செய்தது. (ந-8,11)

# இனவாதத்திற்கு...

முக்கியமானது என ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக பாதாள உலகத்தினரை ஊக்கப்படுத்தும் செய்திகளை வெளியிட வேண்டாம் எனவும் ஜனாதிபதி ஊடகப் பிரதானிகளை கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேவேளை, வருடம் ஒன்றிற்கு தனிநபர் ஒருவர் 26 கிலோகிராம் கோதுமை மா உணவுகளை உள்கொள்வதில் இருந்து அதனை 16 கிலோ கிராமாக குறைப்பதே அரசாங்கத்தின் இலக்கு என அமைச்சர் பசில் ராஜபக்ஷ இதன்போது தெரிவித்துள்ளார்.

தற்சமயம் அரிசி அதிக அளவில் கொள்வனவு செய்வதன் மூலம் இந்த விடயத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தினால் விவசாயத்துறைக்கு வழங்கப்படும் மானியங்கள் காரணமாகவே அரிசி உற்பத்தி அதிகரித்துள்ளதாகவும் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ந-8,11)

# நவநீதம்பிள்ளையின்...

பணியகம் நேற்று அறிவித்திருந்தது.

ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையாளராகப் பதவியேற்பதற்கு முன்னர் தென்னாபிரிக்காவைச் சேர்ந்த இவர், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் மேல் முறையீட்டு அமர்வின் சட்டவாளராக பணியாற்றியிருந்தார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர் மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தை இவர் கடுமையாக விமர்சித்து வரும் நிலையில், அவரின் பதவிக்காலத்தை நீடிப்பதற்கு பான் கீ மூன் மேற்கொண்டிருந்த நடவடிக்கைகள் தொடர்பில் கொழும்பு அதிருப்தி கொண்டுள்ளதாக தெரிய வருகின்றது. (ந-8,11)

# அரசின் உண்மை...

நடந்த பேச்சுவார்த்தை சர்வதேச சமுதாயத்தின் அழுத்தம் காரணமாக நடந்ததா என கேட்கப்பட்டபோது, அதற்கான சாத்தியத்தை அவர் நிராகரிக்கவில்லை.

ஒரு அரசியல் தீர்வை எட்டும் செயல் முறையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி உட்பட சகல எதிர்க் கட்சிகளுடனும் பேச வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி இந்த சந்திப்பின்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை கோரியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தெரிவுக் குழுவில் பங்குகொள்ள வைக்க ஐக்கிய தேசிய கட்சி முயற்சிக்க வேண்டுமென ஜனாதிபதி கூறியபோது, அரசாங்கம் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் பேசிய விடயங்களை தெரிவுக் குழுவில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி கேட்டுக்கொண்டது.

அரசாங்கத்துடன் நடத்திய பேச்சுவார்த்தை பற்றி விளக்குவதற்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை ஐக்கிய தேசியக் கட்சியினர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சந்தித்தாக திஸ்ஸ அத்தநாயக்க மேலும் கூறினார். (ந-8,11)

# இலங்கை இன...

ஆகியோர் இந்த விவாதத்தில் பங்கேற்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. லண்டனில் உள்ள இலங்கைத் தூதுவர் கிறிஸ் நொனிசும் ஒரு பேச்சாளராக பங்கேற்பார் என்று புறொன்ட்லைன் கிளப் தெரிவித்துள்ளது.

ஆனால் அவருக்கு பதிலாக விடுதலைப் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாம் தம்பிமுத்துவின் மகன் அருண்தம்பிமுத்து பங்கேற்பார் என்று தெரியவருகின்றது.

இந்த நிகழ்வுக்கான ஆசனப் பதிவுகள் முடிபடைந்து விட்டதாகவும் இதனைப் பார்க்க விரும்புவோர் http://www.ustream.tv/frontlineclub என்ற இணையத்தளம் மூலம் நேரலையாக பார்க்கலாம் என்றும் புறொன்ட்லைன் கிளப் அறிவித்துள்ளது. (ந-8,11)


"விசா ஆலோசனை வியாபாரம்" நன்கு "சூடுபிடிக்கின்றது" விற்பனைக்குப் பிந்திய சேவைகளும் இடம்பெற்றிருப்பதால் கடந்த 2 நாட்களும் நூற்றுக்கணக்கில் மக்கள் கூட்டம்

★ அவுஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா நிபந்தனைகள் அந் நாட்டு அரசாங்கத்தால் ஜூன் 30 உடன் இறுக்கமடைவதனால்....
★ இந்த தருணத்தை எமக்கு சார்பாக பயன்படுத்த வேண்டும்.
★ எனவே இம்மாதம் 18ம் திகதிக்கு முன்னர் விரைந்து வாருங்கள் உங்களுக்காக 18ம் திகதி வரை எமது விசேட ஆலோசனைக் கரும பீடம் காலை 7 மணிமுதல் இரவு 7 மணிவரை இயங்குகின்றது.

குறிப்பு:- விற்பனைக்குப் பிந்திய சேவைகள்
அவுஸ்திரேலியா விமான நிலையத்திலிருந்து இலவசமாக அழைத்துச் செல்லல்.
தொழில் வாய்ப்புக்கான இலவச ஆலோசனைகள்.
குறைந்த கட்டண தங்குமிட வசதிகள்.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட் (PV82703)
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்

தலைமைக் காரியாலயம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
021 221 9016
075 657 4136





கிளைகள்:
115A, இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி. 021 2285544
22A, பிராங்பொட் பிளேஸ், பம்பலப்பிட்டி. 0112508443

504, Hampton Street,
Melborn,
Australia.
Land Phone:- 0061390437100
0061412479209
(C-007)



பாராட்டி வாழ்த்துகிறோம்

கடந்த 2011-ல் நடைபெற்ற G.C.E(O\L) பரீட்சையில் தமிழையும், சமயத்தையும் தவிர மற்றைய 7 பாடங்களையும் ஆங்கில மொழி மூலம் தோற்றி (8A 1B) பெறுபேறு பெற்ற எமது நிறுவனத்திற்குரிய மாணவன்

T. கோகுலன்

யாழ் மாவட்டத்திலேயே அதிஉயர் புள்ளிகளைப்பெற்ற மாணவனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவர் ஆங்கில இலக்கியத்தில் (Eng. Lit.) பெற்ற 'B' தரத்திலான சித்தி மீள் விடைத்தாள் மதிப்பீட்டில் நிச்சயமாக 'A' தரச் சித்தியைப் பெறுவார் என்ற பூரண நம்பிக்கையுடன் அவரைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

அவர் மேலும் மேலும் கல்வித் துறையில் அதி உயர் நிலைகளைப் அடைய வேண்டும் என இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

மேற்படி மாணவன் கோகுலனை பாராட்டி கௌரவிக்கும் முகமாக 17.05.2012 வியாழக்கிழமை எமது நிறுவனத்திற்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

ப. ஈஸ்வரநாதன் B.Sc. Hon(Agi) Dip.in Ed.
Director - Raveens English Medium Classes
T.P.: 021226 3321
Web. www.raveens emc.com
E mail : info@raveenemc.com
(C-0012)



வேலைவாய்ப்பு

USA நிறுவனத்தின் வடகிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் புதி தாக ஆரம்பிக்கப்படவுள்ள 30 கிளைகளுக்கு புதியவர்களுக்கு பயிற்சி அளித்து சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

❖ தகைமை O/L, A/L
❖ சம்பளம் :- பயிற்சிக் காலம் :- 8000/- - 15000/- வரை
பயிற்சியின் பின் :- 35,000/-

ஆங்கில அனுபவம் தேவையில்லை
தொடர்புகளுக்கு :- 077-3001962, 077-2310564
(8456)



வெளிநாடுகளிற்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

11 Kg நிறையுடைய ஒவ்வொரு பொதிகளுக்கும் 01 Kg க்கு UK 645 /= Germany 735/= France 775/=
கடலுணவு வகைகள், மருந்துப்பொருட்கள், குறிப்பிட்ட சில பழவகைகளையும் அனுப்பிக்கொள்ளலாம்.
கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பொதிகளை உங்கள் வீட்டிலிருந்தவாறே அனுப்பிக்கொள்ளலாம்.

சகல நாடுகளிற்குமான விமான பயணச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு : சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களிலும் எமது சேவையினை பெற்றுக்கொள்ளலாம்.

இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ் T.P : 021 222 6113

Arrul Global Express
International Courier & Cargo Service


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.05.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.